# கண்ணதாசன் ஒரு காவியம்



க்தி சக்திதாசன்

மணிமேகலைப் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF ... A
25 SEP 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(34)

UNIVERSITY OF PERADENIYA
25 SEP 2010
LIBRARY

630627

630627

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசன் ஒரு காவியம்



## சக்தி சக்திதாசன்

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447,
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
இணைய தளம் : www.tamilvanan.com

330627
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ☞ | **கண்ணதாசன் ஒரு காவியம்** |
| ஆசிரியர் | ☞ | **சக்தி சக்திதாசன்** |
| மொழி | ☞ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ☞ | 2007 |
| பதிப்பு விவரம் | ☞ | முதற் பதிப்பு |
| உரிமை | ☞ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ☞ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ☞ | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ☞ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ☞ | 220 |
| அட்டைப்பட ஓவியம் | ☞ | ஆர். மோகன் |
| லேசர் வடிவமைப்பு | ☞ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ☞ | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ☞ | தையல் |
| வெளியிட்டோர் | ☞ | **மணிமேகலைப் பிரசுரம்,** சென்னை - 17. |

நூலின் விலை : ரூ. ரூ.240



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**R. Pandiarajan**
#18 New 21, Sivasailam Street,
T.Nagar, Chennai - 600 017. India
Ph : 28344254
e-mail : pallavar@yahoo.com



# வாழ்த்துரை

தன்னை அற்ப எழுத்தாளன் என்று தன்னடக்கத்துடன் எழுதும் அற்புத எழுத்தாளர் திரு. சக்தி சக்திதாசன் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்க எனக்குத் தகுதி இருக்கிறதா என்று தயங்கி தயங்கி எழுதுகிறேன்.

'கண்ணதாசன் ஒரு காவியம்' தலைப்பிலேயே இது ஒரு நூல் அல்ல காவியம் என்பதை சூசகமாகச் சொல்லிவிட்டார். கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கும் எனக்கும் ஒரு உறவு உண்டு, எனது மாமனார் திரு. அவினாசி மணி அவர்கள் கவியரசரிடம் உதவியாளராகப் பணியாற்றியவர். அதனால் அவர் கவியரசரைப் பற்றி பல வியப்பான தகவல்களை என்னிடம் சொல்லியிருக்கிறார். மேலும் 'அந்த ஏழு நாட்கள்' படத்தில் நான் உதவி இயக்குனராக வேலை பார்த்தபோது கவியரசரின் திருமுகத்தைப் பார்த்துப் பரவசப்பட்ட பாக்கியமும் எனக்குண்டு.

'எப்படி எல்லாம் வாழக்கூடாதோ, அப்படி எல்லாம் வாழ்ந்திருக்கிறேன்' என்று தன்னைத் தானே சுயவிமர்சனம் செய்யத் துணிச்சல் உள்ளவர் இந்த உலகில் எத்தனை பேர். கவியரசருக்கும் 'க'வுக்கும் உள்ள ஒற்றுமையை உற்றுக் கவனித்து உதாரணத்தோடு சொன்னது அருமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாதகாணிக்கை'யில் வீடு வரை உறவு பாடலைப் பற்றித் தங்களின் ஆய்வே தாங்கள் கவியரசருக்குச் செய்திருக்கும் பெரிய பாத காணிக்கை.

**இளைஞனே என்னைப் பார்த்து விழித்துக்கொள்.**
**காலம் பொன்னானது காலம் தாழ்த்தி**
**உணர்ந்து கொள்ளாதே!**

என்ற கவியரசரின் சமூக அக்கறையை நீங்கள் பதிவு செய்திருப்பது உங்கள் சமூக அக்கறையைக் காட்டுகிறது.

மணிமேகலைப் பிரசுரத்தின் வெளியீடு என்றாலே மணியான படைப்பு என்பதை நம்புகிறவன் நான்.

'எனக்கு இதுவெல்லாம் புகழ் அல்ல என் காலத்திற்குப் பிறகு என்னை எத்தனை பேர் நினைக்கிறார்களோ அதுதான் எனது உண்மையான புகழ்'' என்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறுவார்.

அந்த வகையில் கவியரசரைப் பற்றித் தாங்கள் இப்போது எழுதும் காவியமே

**நான் நிரந்தரமானவன் அழிவதில்லை...**
**எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை...**

என்ற கவியரசரின் வரிகளுக்கு உயிர்தந்து புகழ் சேர்த்திருக்கிறீர்கள், தொடருங்கள்.

மகிழ்ச்சியுடன்
உங்கள் R. பாண்டியராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னையறிந்தால்...

கடல் ஆர்ப்பரிக்கிறது, அந்தக் கடலின் செழிப்பு அகில உலகமும் பரந்து கிடக்கிறது, அந்தக் கடலலை கரைமீது அடித்துச் சிதறியபோது ஒரு சிறுதுளி தெறித்துக் கரும்பாறை மீது விழுகிறது. சூரிய ஒளியில் ஆவியாகிய அந்தச் சிறுதுளி கருமுகிலுடன் ஒரு துகளாகக் கலந்து மீண்டும் ஒரு துளி மழையாக அந்தக் கடலினுள் விழுந்து மறைகிறது.

அந்தக் கடல்தான் கவியரசர் கண்ணதாசன், அதிலே இருந்து தெறித்து விழுந்த சிறுதுளிதான் இந்த அற்ப எழுத்தாளன். மழைத்துளி, கடலின் மகத்துவத்தைப் பற்றி என்னதான் எழுதிவிட முடியும்?

தனது அந்தச் சிறு பரப்பளவுக்குள் இருக்கும் சொற்ப அறிவைக் கொண்டு ஒரு அற்புதக் கவிஞனைப் பற்றி எழுதப்போகிறேன் என்று நான் கனவிலும் எண்ணியது கிடையாது.

''உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்'' எனும் அந்த மகாகவியின் வார்த்தைகளை நான் உச்சரிக்காத பொழுதே கிடையாது. அந்த உச்சரிப்பின் விளைவுதான், அந்த அற்புதப் படைப்பாளியின் பல புத்தகங்களை, பல பாடல்களை, பல கவிதைகளைப் படித்ததினால் நெஞ்சினில் எழுந்த உணர்ச்சிகளுக்கு வடிகால் அமைக்க ஒரு வேகம் பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தமிழ்ப் பூங்காவில் ''கண்ணதாசன் கார்னர்'' என்று விழுந்த சிறு கவிதை, தோழி நிர்மலாவின் ''நிலாச்சாரல்'' இணைய இதழில் ''கண்ணதாசன் எனுங் காவியம்'' என்னும் செடியாக முளைத்து தொடர்ந்து 51 வாரங்கள் பூத்துக் குலுங்கியது.

அதிலே அதைப் படித்து ரசித்த வாசகர்கள் மூலம் கிடைத்த ஊட்டச்சத்துத்தான் இந்த நூலுக்கு வித்திட்டது. கவியரசர் கண்ணதாசனைப் பற்றி எத்தனையோ இலக்கிய மேதைகள் அற்புதமான ஆராய்ச்சி நடத்திப் பலநூல்கள் வெளியிட்டு விட்டார்கள். அந்த அளவிற்கு இலக்கியம் படித்தவனோ அன்றி இலக்கிய ஞானம் பெற்றவனோ அல்ல நான்.

எனது அறிவு அவரது பாடல்களைக் கேட்டு ரசித்ததன் மூலம், அவரது நூல்களைப் படித்து வியந்ததன் மூலமே கிடைத்தது.

இந்த நூலை ஒரு மாபெரும் எழுத்தாளன் எழுதிய ஆய்வு நூல் என்னும் பார்வையில் பார்க்காதீர்கள். ஏனெனில் நான் ஒரு பெரிய எழுத்தாளனுமல்ல, இந்த நூல் ஓர் இலக்கிய ஆய்வு நூலுமல்ல.

கம்பனின் பாடல்கள் சாதாரண பாமரனைச் சென்றடைய வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தவர் கண்ணதாசன். அவரைப்பற்றி, அவர் பாடல்களைப் பற்றி ஒரு பாமரன் பார்வை எப்படியிருந்தது என்பதனையே என்னுடைய நூல் எடுத்துக் காட்டுகிறது.

இதிலே குறிப்பிட்ட பல விடயங்கள் இடையறாத் தேடல்கள் இணையத்தில் மேற்கொண்டதாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசரோடு பழகிய சிலரது அனுபவங்களைக் கிரகித்துக் கொண்டதாலும் விளைந்தவை.

பலமான பணிச்சுமைகளுக்கு மத்தியில் இந்நூலுக்கான வாழ்த்துரையை வழங்க முன்வந்த நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர், எழுத்தாளர் அன்புநிறை திரு. ஆர். பாண்டியராஜன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழமை போல இந்நூல் அருமை நண்பர் ரவி தமிழ்வாணனின் மூலம் வெளிவருவது எனக்கு மனதை நிறைக்கிறது. மணிமேகலைப் பிரசுர அன்பு நண்பர்களின் அயராத உழைப்பிற்கு நன்றிகள்.

இந்தத் தொடர் நிலாச்சாரலில் வந்தபோது தொடர்ந்து ஊக்கப்படுத்தி உற்சாகம் தந்த அருமைத் தோழி நிலா என்னும் நிர்மலாவிற்கும், நிலாச்சாரல் வாசகர்களுக்கும், எப்போதும் போல தட்டிக் கொடுத்து தளர விடாமல் பார்த்துக் கொண்ட எனது மனைவி மைதிலிக்கும் எனது அன்பான நன்றிகள்.

என்றும் என்னோடு துணை நின்று என்னை நல்வழிப்படுத்தி வழிகாட்டும் திருவண்ணாமலையில் அமர்ந்திருக்கும் அண்ணாமலையானின் பாதம் பணிந்து இந்நூலை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

''என்னையறியும் பயணம் இன்னும் தொடர்கிறது.''

அன்பான வாசக நேயர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகள்.

அன்புடன்

**சக்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசன்
# ஒரு காவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

கவிஞர் கண்ணதாசனைப் பற்றி இலக்கிய ரீதியில் ஆராயக்கூடிய அளவிற்குப் பாண்டித்தியம் பெற்றவனல்ல நான். சாதாரண பாடல்களின் கருத்தால் கவரப்பட்ட ஒரு சராசரி ரசிகன்தான் நான். கண்ணதாசனின் பாடல்களில் சொந்த அனுபவங்களின் வாயிலாக எழுந்தவையே மிகவும் பிரபல்யம் வாய்ந்தவையாக அமைந்தன. சாதாரண மக்களின் அன்றாட அனுபவங்களைத் தொட்டு இந்தப் பாடல்கள் அமைந்ததின் காரணமே இவற்றின் வெற்றிக்குக் காரணம். எட்டாவது வகுப்பு மட்டுமே படித்த முத்தையா என்ற இயற்பெயர் கொண்ட கண்ணதாசன் பிறந்தது, வணிகத்திலே புகழ் பெற்ற செட்டி நாட்டைச் சேர்ந்த சிறுகூடல்பட்டி எனும் கிராமமேயாகும். தான் சிறுவயதினிலேயே சுவீகாரம் கொடுக்கப்பட்டதை மனதில் வைத்து எழுதப்பட்ட ''ஒருத்தி மகனாய் பிறந்தவனாம் ஒருத்தி மகனாய் வளர்ந்தவனாம்'' என்ற பாடல் இந்தக் கவிதைத் தலைவனின் அனுபவக் கவிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

வாழ்வினிலே எடுப்பார் கைப்பிள்ளை போன்று எல்லோரையும் நம்பி, தன் வாழ்க்கையில் தான் பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்களை, தானே தனது சுயசரிதையில் மிகவும் அழகான எளிய தமிழில் எடுத்துரைத்து இருந்தார் கவிஞர். அவரது வாழ்க்கைப் பாதை பல முட்புதர்கள் நிறைந்த கடுமையான ஒன்றாக அமைந்தது. அவர் தானாகவே ஏற்படுத்திக் கொண்ட இடர்கள் ஏராளம், அதை அவரே பல இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், தான் வாழ்க்கையில் செய்த தவறுகளைப் பகிரங்கமாக மக்களுடன் பகிர்ந்து, தன்னைத் தானே சுயவிமர்சனம் செய்யும் மனப்பக்குவத்தைத் தன்னுடைய வாழ்வின் இறுதிப் பாகத்தில் அடைந்திருந்தார். இக்கசந்த அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுவதனால் ஒரு சிலருக்காவது நன்மை கிடைக்குமானால் அதுவே தமக்குத் திருப்தி அளிக்கும் என்னும் கருத்தைக் கொண்டிருந்தார்.

கண்ணதாசனுக்கு இருந்த தமிழாற்றல் தமிழன்னையால் அவருக்கு அளிக்கப்பட்ட ஓர் உன்னத வரப்பிரசாதம். அதை அவர் பல வழிகளில் உபயோகித்தார். அரசியல் எனும் அந்த ஆழமறியா சமுத்திரத்திலே அவர் மூழ்கும்போது தமிழையே அவர் கரைசேர்க்கும் தோணியாகப் பாவித்தார். தமிழ்நாட்டின் மூத்த தலைவர்கள் அனைவருமே இவரின் புகழ் மாலைக்கும் பின் ஒருபோது வசை மாலைக்கும் இலக்காகியிருக்கின்றார்கள். இதை அழகாகக் கலைஞர் கருணாநிதி அவர்கள் குறிப்பிடுகையில், "கண்ணதாசன் என்னை உயரத் தூக்கி வைத்துப் புகழ்பாடிய காலங்களும் உண்டு, பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிருந்து என்னைத் தொப்பென்று கீழே போட்ட காலங்களும் உண்டு. ஆனால் கீழே விழுந்தபோது அவனது தமிழின் அழகு எனக்கு மெத்தையாக இருந்தது'' என்ற பொருள்படக் கூறியுள்ளார்.

பலர் இவரை அரசியலில் ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்தியுள்ளார்கள்.

ஆரம்பகாலங்களில் பத்திரிகைகளில் எழுத்தாளராக வாழ்க்கையை ஆரம்பித்தவர், பின்பு கவிதைகளிலும், பாடல்களிலும் தனது கவனத்தைச் செலுத்தினார். அவருக்கு முதன்முதலில் பாடல் எழுதும் சந்தர்ப்பங்கள் அந்நாளில் திமுகவின் கோட்டையாக விளங்கிய மாடர்ன் தியேட்டர்ஸ் மூலமே கிடைத்தது. பின்பு படங்களுக்கு வசனம் எழுதும் சந்தர்ப்பமும் கிடைத்தது. தானே சொந்தமாகப் படங்களையும் தயாரித்துள்ளார். அவர் தயாரித்த படங்களில் வானம்பாடி, மாலையிட்ட மங்கை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

'தென்றல்' எனும் பத்திரிகையில் எழுத ஆரம்பித்தவர், பின்பு அந்தப் பத்திரிகையை வாங்கித் தானே நடத்தியுள்ளார். இப்படிப் பல துறைகளிலும் இறங்கிய அவருக்கு அழியாப் புகழை அளித்தது அவரது பாடல்கள்தான். தமிழ்பேசும் சமூகம் வாழும் எந்த மூலை முடுக்களிலும் இவரது பாடல்கள் முணுமுணுக்கப்படாத இடமே கிடையாது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கும் இவருக்கும் மிகவும் ஆழமான நட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியது. ஆயினும் அரசியல் வேறுபாடுகளினால் இருவருக்கும் இடையே கடுமையான கருத்து வேறுபாடுகளும் நிலவியது. அதன் காரணமாக ஒருவரையொருவர் தமது வெளியீடுகளிலே சாடியதும் உண்டு. இருப்பினும் எங்கேயாவது சந்தித்துக் கொண்டால் அவர்களது நட்பு தலைதூக்குவது உண்டு.

இப்படியாக, காவியம் படைத்த நாயகன் தனது வாழ்க்கையின் இரண்டாம் பாகத்திலே நாத்திக வாதத்திலிருந்து முழு ஆத்திகவாதியானான். அதன் விளைவாக எமக்குக் கிடைத்த படைப்புகளில் ஒன்றே ''அர்த்தமுள்ள இந்துமதம்'' என்ற பொக்கிஷம்.

இத்தகைய புகழ்படைத்த தமிழ்ப் புதல்வனை குறுகிய காலத்தினுள்ளே தன்னுடன் சேர்த்துக் கொண்டான் ஆண்டவன்.

ஆனால், கண்ணதாசனால் ஏற்றப்பட்ட இந்த இலக்கியச் சுடர், என் போன்ற ரசிகர்கள் இதயத்தினுள்ளே அணையாத் தீபமாக என்றுமே ஒளிவீசிக் கொண்டிருக்கும் என்பது உறுதி.

அவரது வார்த்தைகளிலே பார்த்தோமேயானால்,

**நான் நிரந்தரமானவன் அழிவதில்லை**
**எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை**

என்று பாடியுள்ளார். அது எத்தகைய உண்மை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY ... ENIYA
25 SEP 2010
LIBRARY

## 2

கவியரசர் முக்கியமாகக் கொண்டிருந்த நோக்கம் தனது பாடல்களின் மூலம் சங்க காலத் தமிழ் இலக்கியத்தை, ராக்கெட் வேகத்தில் போகும் இந்த அவசரச் சமுதாயத்திற்கு விளங்கக்கூடிய வகையில் எளிமையாகத் தமிழில் வழங்குவதாகும். கம்பனின் இலக்கியத்தை எவ்வாறு இலகுவான தமிழில் நமக்கு நமது கவியரசர் கொடுத்தார் என்பதைச் சில உதாரணங்களுடன் பார்ப்போம்.

**கம்பனும் கண்ணதாசனும்**

இலக்கியவாதிகளும், ஆன்மீகவாதிகளும் மட்டுமே அறிந்திருந்தவர் கம்பர். கம்பனின் சாயல் கண்ணதாசனில், எழுத்துகளில் நிறையவே தெரியும்.

கைகேயி பெற்ற வரத்தின்படி இராமனுக்கு அரசு இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதைக் கேட்டதும் ஆதிசேட அவதாரமான இலட்சுமணனுக்கு அடக்கமுடியாத கோபம் வந்துவிட்டது. அந்தக் கோபத்தினால் கைகேயி, பரதன், தசரதன் எல்லோரையும் ஒழித்து விடுகின்றேன் என்று வில்லை வளைத்து ஒலி எழுப்புகின்றான். அப்போது அங்கே வந்த இராமன் இலட்சுமணனை சாந்தப்படுத்துகின்றார். ''தம்பி கோபப்படலாமா? இது தவறல்லவா? நதிக்குப் போகின்றோம், நதியினில் தண்ணீர் இல்லை, அதற்காக நதியைத் திட்ட முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 SEP 20



நதியின் மீது தவறுண்டா? அது போலத்தான் இதுவும். எனக்கு அரசில்லாமல் போனது தசரதர் குற்றமில்லை, கைகேயியின் குற்றமில்லை, பரதன் குற்றமுமில்லை, பின் யார் குற்றம்? விதியின் குற்றமப்பா, விதியின் குற்றம்'' என்கின்றார். இதற்கான கம்பரின் பாடல் பின்வருமாறு:

நதியின் பிழை அன்று நறும்புனல்
இன்மை அற்றே
பதியின் பிழை அன்று பயந்து
நமைப் புரந்தான்
மதியின் பிழை அன்று மகன்பிழை
அன்று மைந்த!
விதியின் பிழை இதற்கு என்னை
வெகுண்டது என்றான்.

இந்தப் பாடலின் கருத்தை மறந்துவிட்டு, பாடலை மட்டும் படித்துப் பாருங்கள். சுலபத்தில் பொருள் விளங்காது. கடினமாக இருக்கும். இதே கருத்தை மிகவும் சுலபமாக நம் மனதினில் பதிய வைக்கும் கண்ணதாசன் பாடலைப் பார்க்கலாம். 'தியாகம்' என்ற படத்தில் வரும் அந்தப் பாடல் வரிகள் இதோ :

நதிவெள்ளம் காய்ந்து விட்டால்
நதி செய்த குற்றமில்லை
விதி செய்த குற்றமின்றி
வேறு யாரம்மா?

நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை
- *கம்பர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதிவெள்ளம் காய்ந்துவிட்டால் நதி செய்த குற்றமில்லை

- *கண்ணதாசன்*

விதியின் பிழை

- *கம்பர்*

விதி செய்த குற்றம்

- *கண்ணதாசன்*

எப்படி எல்லாம் வாழக் கூடாதோ,
அப்படி எல்லாம் வாழ்ந்திருக்கிறேன்.

ஆகவே, 'இப்படித்தான் வாழ
வேண்டும்' என்று புத்தி சொல்லக் கூடிய
யோக்கியதை எனக்கு உண்டு.

- *கவிஞர் கண்ணதாசன்*

## 3

காவியத் தலைவன் கண்ணதாசன் ஒரு கவிப்பெருங்கடல். அவரின் படைப்புகள் ஒவ்வொன்றுமே தமிழன்னையை அலங்கரிக்கும் நவநாகரிக அணிகலன்கள். அந்தக் கவிதைக் கடலில் எழுந்த அலை அடித்தபோது எங்கோ பட்டுத் தெறித்த நீர்த்திவலை போன்றதுதான் என் கவியறிவு. ஆனால் அந்தக் கடலின் ஓர் ஓரத்தில் மூழ்கி எழுந்து மகிழ்வது என் அவா. அந்த அனுபவத்தினை நண்பர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வது என் நோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாரம் கவியரசர் **பகவத்கீதையை** எமக்குப் புரியவைக்கும் முயற்சியின் ஓர் அங்கத்தினைப் பார்ப்போம்.

**கீதையின் கூற்று**

பூர்யமானம் அசலப்ரதிஷ்டம்
ஸமுத்ரமாப : ப்ரவிசந்தி யத்வத்
த்வத்வத்காம யம் ப்ரவிசந்தி ஸர்வே
ஸ சாந்திமாப்நோதி ந காமகாமீ

என்ன? ஒன்றுமே புரியவில்லையா? வருத்தப்படாதீர்கள். எனக்கும்தான் புரியவில்லை. ஆனால் கவிச்சக்கரவர்த்தியின் முயற்சியின் முழு வெற்றியையும் உணர வேண்டுமானால் கீதையை அப்படியே கூறி, பின்பு அதை அவர் எப்படிக் கையாளுகின்றார் என்று அறியத் தரவேண்டும்.

**மேலே கூறிய கீதையின் விளக்கம்**

கடல் நிறைந்து காணப்படும். அதனுள் எவ்வளவு மழைத் தண்ணீர் வந்து எவ்வழியில் சேர்ந்தாலும் அது ஒரு போதும் துள்ளிக் குதித்து கரையை மீறுவது கிடையாது. அதே போன்று அந்தக் கடலின் நீர் வெய்யிலின் நிமித்தம் நீராவியாகிப் போகின்றது. இருந்தபோதும் அது ஒருபோதும் உள்ளே சென்று மறைவதில்லை, என்றுமே நிலைகுலையாது அமைதியாக உள்ளது. நிலையான உள்ளம் கொண்ட மனிதன் ஒருபோதும் கலங்கமாட்டான். ஆனால், உள்ளம் நிலையற்று இருப்பவன் ஒருபோதும் அமைதியடைய மாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனுக்குத் தாசனான கண்ணதாசன் கண்ணனின் கீதையை எப்படி எம் மத்தியில் புகுத்துகின்றார் என்று பார்ப்போம்.

'**அவன்தான் மனிதன்**' படத்திலே வரும் '**ஆட்டுவித்தால் யாரொருவர்**' எனும் பாடலில் மேற்கூறிய கீதையின் விளக்கத்தை சாதாரணத் தமிழில் கண்ணதாசன் தனக்கே உரிய பாணியில் கூறுவதைப் பாருங்கள் :

கடலளவு கிடைத்தாலும் மயங்க மாட்டேன்
அது கையளவே ஆனாலும் கலங்க மாட்டேன்
உள்ளத்திலே உள்ளதுதான் உலகம் கண்ணா
இதை உணர்ந்து கொண்டேன்
துன்பமெல்லாம் விலகும் கண்ணா

எவ்வளவு பெரிய தத்துவம்! எவ்வளவு பெரிய கீதையின் கூற்று! எப்படி எளிமையாக மக்கள் அனைவருக்கும் புரியக்கூடிய வகையில் கவியரசர் கூறியிருக்கின்றார்!

இந்த வியத்தகு கவிஞரின் ஆற்றலை எடுத்துக்காட்ட இன்னுமோர் உதாரணமாக பட்டினத்தாரின் பாடலை அவர் எப்படி எளிமைப்படுத்தியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம் :

**பட்டினத்தாரின் பாடல்**

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே
விழி அம்பு ஒழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்மி விம்மி இரு
கைத்தல மேல் வைத்தழுமை ந்தரும்
சுடுகாடு மட்டே
பற்றித் தொடரும் இருவினை
புண்ணிய பாவமுமே

**இதன் கருத்து**

**செல்வமும் உறவும் வருவது வீடுவரைதான். கதறி அழும் மனைவி வருவது வீதி வரை மட்டும்தான். அடித்துக் கொண்டு அழும் பிள்ளையின் விஜயம் சுடுகாடு மட்டும்தான். ஆனால் கடைசி வரை கூட வருவது செய்த புண்ணியமும் பாவமும் மட்டும்தான்.**

பட்டினத்தாரின் இப்பாடலைப் பற்றி நம்மில் பலர் அறிந்திருக்க மாட்டோம். ஆனால் அந்த ஞானியின் தத்துவத்தை எவ்வாறு எம்மிடையே கவிஞர் உலவ விடுகின்றார் என்று பாருங்கள் நண்பர்களே!

'**பாதகாணிக்கை**' எனும் படத்தில் வரும் பாடலிது :

வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ

கவனித்தீர்களானால் கடைசி வரியான **பாவமும் புண்ணியமும்தான் கடைசிவரை கூடவரும்** என்ற வாக்கியத்தைக் கவிஞர் விட்டு விட்டார். இதைப்பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் ஒருவர் வினவியதற்குக் கவிஞர், ''அப்படி ஓர் அருமையான வாக்கியத்தைச் சொல்லும் உரிமை பட்டினத்தாருக்கே உண்டு. அதனால் தான் அதைப் பாடலில் குறிப்பிடவில்லை'' என்றாராம்.

மற்றவரின் ஆற்றலை மதிக்கும் மனப்பான்மை கவிஞரிடம் சிகரம் தொட்டு நிற்பதைப் பார்த்தீர்களா? இன்று பட்டினத்தாரின் கருத்தைப் பட்டி தொட்டிகளெல்லாம் ஒலிக்கச் செய்த கவிஞரின் ஆற்றலை என்னவென்பது?

## 4

தமிழ் என்னும் அந்த ஆலயத்தில் தமிழன்னை என்னும் தெய்வத்தின் முன்னே, அணையாது ஒளிவீசிக் கொண்டிருக்கும் தீபங்களில் முன்னிற்பது கண்ணதாசன் எனும் அந்தக் காவியக்கடல். 'சாந்தி நிலையம்' என்னும் படத்திற்காக அவர் எழுதிய பாடலின் அர்த்தத்தைச் சுவைப்போம் வாருங்கள்.

சில நேரங்களிலே நாம் செய்வதறியாது ''போர்'' அடித்துப் போய் உட்கார்ந்திருப்போம் அல்லவா? அப்படித்தான் கவிஞர் கண்ணதாசனின் கற்பனையில் இருந்த கடவுளுக்கும் ஒரு நாள் போரடித்து விட்டதாம். ''என்னடா நான் படைத்த உலகத்தை ஒருமுறை பார்த்து வருவோமே'' எனக் கிளம்பி விட்டாராம். பிறந்தது அந்த முதல் வரி தமிழ்க்குமரனின் எண்ணக் கருவறையிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் ஒருநாள் உலகைக் காண
தனியே வந்தாராம்

வந்தவர் சும்மா இருக்கவில்லையே தெருவில் போவோர் வருவோரை எல்லாம் ''சுகமாக இருக்கின்றீர்களா?'' என விசாரிக்க வேறு தொடங்கி விட்டாராம். எப்படிப் போகின்றது கவித்தலைவனின் கற்பனைத் தேர்!

வழியில் வந்த மனிதரையெல்லாம்
நலமா? என்றாராம்

சும்மா இருப்பானா நம் மனிதன்? எல்லாவற்றையும் பற்றி முணுமுணுப்பவனல்லவா. 'ஹா இதுவல்லவா வாழ்க்கை, இதைவிட என்ன சொர்க்கம் இருக்கய்யா?' என்று மகிழ்கின்றான் ஒருவன். மற்றொருவனோ ''சே, போய்யா என்ன வாழ்க்கை இது?'' என்கின்றான்.

ஒரு மனிதன் வாழ்வை இனிமை என்றான்
ஒரு மனிதன் அதுவே கொடுமை என்றான்

என்ன அருமையாக வார்த்தைகளோடு விளையாடியிருக்கின்றார் கண்ணதாசன் பார்த்தீர்களா? சாதாரணமாக யாராவது பாட்டெழுதினால்,

ஒரு மனிதன் வாழ்வை இனிமை என்றான்
ஒரு மனிதன் வாழ்வைக் கொடுமை என்றான்

என்று எழுதியிருப்பார்கள். அதில் ஒரு தப்பில்லை. ஆனால், கவித்தலைவனோ அதற்கு இன்னுமொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தத்தையும் கொடுக்க எண்ணினான். அதாவது ஒரு மனிதன் வாழ்வை இனிமை என்னும்போது, அவனது இனிமையான வாழ்வைப் பொறுக்க முடியாமல் மற்றவன் இவனது இனிமையான வாழ்க்கையே தனக்குக் கொடுமை என்கின்றான்.

''ஒரு மனிதன் **அதுவே** கொடுமை'' என்றான் என்பதன் மூலம், மனித மனத்தின் பொறாமைக் குணாம்சத்தை எப்படி விளக்கியுள்ளார் இந்தக் கவிச்சக்கரவர்த்தி பார்த்தீர்களா? இதைக் கேட்டதும் படைத்தவனுக்கு ''என்ன மனிதர்களடா? இப்படிப் பொறாமை படைத்தவர்களாக இருக்கின்றார்களே'' என்று எண்ணிச் சிரிப்பு வர உடனே சிரித்து விட்டானாம் நம் கடவுள்.

**படைத்தவனோ உடனே சிரித்து விட்டான்.**

சிரிப்புடன் கூடவே கடவுளுக்குச் சிந்தனையும் வந்தது. என்னடா இது, இவர்களுக்குப் படைக்கும் போது நான் கொடுத்தது கள்ளம் இல்லாப் பிள்ளை உள்ளம் தானே, எப்படியடா காசு, பணம், சொத்து என்று அலைந்து, எல்லாவற்றையும் அடையும் பேராசை வந்தது?

எல்லையேயில்லாத நீரும், நிலமும், வானும் நான்தானே கொடுத்தேன், சொந்தக்காரன் நானிருக்கும்போதே சொந்தம் கொண்டாடுகிறார்களே பாவிகள். என்ன மனிதரோ! படைத்தவனுக்கு வந்துவிட்டது குழப்பம், நம் மனிதனின் சுயநலப் போக்கைக் கண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளம் இல்லாப் பிள்ளை உள்ளம் நான் தந்தது
காசும் பணமும் ஆசையும் இங்கே யார் தந்தது?
எல்லை இல்லா நீரும் நிலமும் நான் தந்தது
எந்தன் சொந்தம் என்னும் எண்ணம் ஏன் வந்தது?
இறைவனுக்கே இது புரியவில்லை
மனிதரின் கொள்கை தெரியவில்லை

கண்ணதாசன் மேலே அர்த்தத்தோடு வரிகளைக் கையாண்டிப்பதைப் பாருங்கள் தோழர்களே! கடவுள் எல்லையில்லாதவன். அதனால் அவன் படைத்த நீரும், நிலமும் எல்லையில்லாதது என்று கூறி, கடவுள் எல்லையில்லாமல் வியாபித்திருப்பவன் என்று நம்மை உணர வைக்கின்றார் கவிஞர்.

இவற்றையெல்லாம் பார்த்துச் சலித்துப்போன கண்ணதாசனின் கடவுள் ஓர் இடத்தில் நின்றுவிட்டாராம், எங்கே?

பள்ளிக்கூடம் செல்லும் வழியில் கடவுள் நின்றாராம்.

அங்கே நிற்கின்ற நம் கடவுள் இந்த மகிழ்ச்சியாக, எந்தவித வேறுபாடுகளுமற்ற உள்ளத்துடன், உண்மைத் தோழமையோடு ஓடி வரும் குழந்தைகளைக் கண்டதும் ‘‘அடடா! போட்டி, பொறாமை கொண்டு அலையும் இந்த மனிதர்களால் குழந்தைகளின் வெள்ளை உள்ளத்தை மட்டும் இன்னும் கெடுக்க முடியவில்லை, அன்பைத் தவிர வேறு ஒன்றுக்குமே மயங்காத இந்தக் குழந்தைகள் இருக்கும் வரை என் படைப்பின் தத்துவம் அழியாது’’ என்று எண்ணினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமடா எனது பூமிச் சுற்றுலா எனத் திரும்பி தனது மேலுலகிற்கே திரும்பி விட்டாராம்.

பச்சைப்பிள்ளை கிள்ளை மொழியில்
தன்னைக் கண்டாராம்
உண்மை கண்டது போதும் என்று
வானம் சென்றாராம்.

**கண்ணதாசன் கூற்று :**

அன்று எத்தனையோ புத்தகங்கள் எழுதக்கூடிய அளவிற்கு உடலில் வலுவிருந்தது.

ஆற்றல் பொங்கி வழிந்தது.

ஆனால் வெறும் இரத்தத் துடிப்புக்கு முதலிடம் கொடுத்து பொன்னான காலத்தை விரயமாக்கினேன்.

இன்று எத்தனையோ எழுத வேண்டும் என்று துடிக்கின்றேன், அனுபவங்கள் பொங்கி வழிகின்றன. ஆனால் எனது பாழாய்ப்போன உடம்பு விட்டுக்கொடுக்க மறுக்கின்றது.

இளைஞனே என்னைப்பார்த்து விழித்துக் கொள்.

காலம் பொன்னானது காலம் தாழ்த்தி உணர்ந்து கொள்ளாதே!

*(கண்ணதாசனின் பல நூல்களில் இருந்து திரட்டியவை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

இவர் ஒரு கவிஞரா? தத்துவாசிரியரா? இல்லை ஓர் ஆன்மீகவாதியா? விளங்க முடியாப் பல வித்தியாசங்களுக்குள் தன்னை முழுவதுமாய்ப் புதைத்துக் கொண்டவர் தான் இந்த இலக்கிய மேதை. தனது வாழ்க்கை அனுபவங்களைப் பாடங்களாக வகுத்துக் கொண்டு அதை பள்ளிச் சிறுவர்களுக்கு போதிப்பது போன்று எமக்குப் புகட்டியவர் தான் கவிஞர் கண்ணதாசன். ''நான் காவியத்தாயின் இளைய மகன், காதல் பெண்களின் பெருந்தலைவன்'' என்று தானே பாடல் காட்சியில் தோன்றி நடித்திருந்தார் 'இரத்தத்திலகம்' எனும் திரைப்படத்திற்காக. அந்த வரிகளிலேயே தனது திறமையின் மீது தனக்கிருக்கும் நம்பிக்கையை வெளிக்காட்டியிருந்தார் கவிஞர். இவர் உலகெங்கும் வியாபித்திருக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் கவித்தலைவன்.

கவிஞரின் காதல் பாடல் ஒன்றை எடுத்துச் சிறிது உற்று நோக்கலாம்.

ஆலயமணி என்ற படத்திற்காக கவிஞர் இயற்றி, டி.எம்.எஸ். கணீரென்று குரல் கொடுக்க, நடிப்புச் சக்கரவர்த்தி சிவாஜி கணேசன் நடித்த ''கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா'' என்ற பாடலைவிட இந்த இடத்திற்குப் பொருத்தமான பாடல் வேறு எதுவாக இருக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா**
**கலையெல்லாம் கண்கள் சொல்லும் கலையாகுமா**
**சொல்லெல்லாம் தூய தமிழ்ச் சொல்லாகுமா**
**சுவையெல்லாம் இதழ் சிந்தும் சுவையாகுமா**

*என்ன வார்த்தைக் கோர்ப்புகள் பார்த்தீர்களா?*

*கல்லாகுமா?, கலையாகுமா?, சொல்லாகுமா?, சுவையாகுமா?*

அவன் காதலியின் பெருமையைக் கூறுகின்றான். கற்களிலே மாணிக்கக் கற்கள் எவ்வளவு சிறந்தவையோ அதைப் போன்றவளாம். கலைகளிலே அவள் கண்கள் கூறும் கலைகளைப் போலே அவன் எங்கும் கண்டதில்லையாம்! சொற்களிலே எத்தனையோ சொற்கள் இருந்தாலும் அந்தத் தூய தமிழ்ச் சொற்களைப் போல் இனிமையானது எங்கும் இல்லையென்று, தமிழ் நெஞ்சங்களின் உணர்ச்சியலைகளை எழுப்பி விட்டு அவன் காதலி அவன் இதயத்திலும் அதேபோன்ற உணர்ச்சியை ஏற்படுத்துகின்றாளாம். மா, பலா, தேன் எனச் சுவைகள் பலவகைப் பட்டவையாம்! ஆனால் அவன் காதலியின் இதழ் சிந்துகின்ற சுவையிருக்கின்றதே! அப்பப்பா! அவனுக்கு அதற்கு இணையான சுவை இப்புவியினில் ஒன்றுமே இல்லையாம்.

*கவிஞரின் ஆற்றலைப் பாருங்களேன்!*

**கன்னித்தமிழ் தந்ததொரு திருவாசகம்**
**கல்லைக் கனியாக்கும் உந்தன் ஒருவாசகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
630627

*இதுதான் காவியக் காதலோ?*

**உண்டென்று சொல்வதுந்தன் கண்ணல்லவா**
**- வண்ணக் கண்ணல்லவா**
**இல்லையென்று சொல்வதுந்தன் இடையல்லவா**
**- மின்னல் இடையல்லவா**

*நிலையில்லா உலகமாம்! அதில் எதையாவது நிச்சயம் என்று சொல்வது தன் காதலியுடைய விழிகள்தானாம்.*

*மின்னல் தோன்றி மறைவது கண்ணிமைப் பொழுதினில் அல்லவா! அதைப்போன்றே இருந்தும் இல்லை என்கிற மிகவும் மெல்லிய அந்த மின்னல் உயிர்வாழ்கின்ற சொற்ப வினாடிகள் நேரத்தில் எவ்வளவு சிறிதாக இருக்கின்றதோ அதேபோன்ற சிறியதுதானாம் தன் காதலியின் இடை.*

*கவிநாயகனின் கற்பனைக்கு எல்லை போடமுடியுமா?*

**கம்பன் கண்ட சீதையுந்தான் தாயல்லவா**
**காளிதாசன் சகுந்தலையுன் சேயல்லவா**
**அம்பிகாபதி அணைத்த அமராவதி**
**- மங்கை அமராவதி**
**சென்றபின்பு பாவலர்க்கு நீயே கதி**
**- என்றும் நீயே கதி**

*கற்பிற்சிறந்த பெருமகள் சீதையைத் தாயாகவும், கவிநாயகி சகுந்தலையைத் தனது மகளாகவும் கொள்ளக்கூடிய பெருமை வாய்ந்தவளாம் அவனது காதலி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமா!

அம்பிகாபதி அணைத்த அமராவதி, அவளை எப்போது அணைத்தான் அம்பிகாபதி? சாவிலே அணைத்தான். அவளின் மறைவிற்குப் பின்னர் பாவலர்கள் தமது பாட்டுக்குப் பொருளின்றித் தவித்தார்களாம், அவனது காதலியைக் காணும்வரை.

எப்படிப் பார்த்தீர்களா எமது கவிஞரின் கற்பனைத் தேரின் ஊர்வலத்தை?

இந்தக் கவிதைச் சிற்பியின் மற்றுமோர் ஆக்கத்தை அடுத்து ஆராதிப்போம்.

## 6

கவிஞர் கண்ணதாசன் கவிதை மட்டுமல்ல, திரைப்படப் பாடல்கள் மட்டுமல்ல, கதைகள் மட்டுமல்ல, கட்டுரைகள் மட்டுமல்ல - யாவற்றிலுமே சிறந்து விளங்கினார். கவிஞரின் கட்டுரைத் தொகுப்புகளில் ''**எண்ணங்கள் ஆயிரம்**'' என்பதும் ஒன்று. இதன் முதல் கட்டுரையைப் பார்க்கும் முன் அதன் முன்னுரையாகக் கவிஞர் கூறியவற்றைப் பார்ப்பது இந்த இடத்திற்குப் பொருந்தும் என்பது எனது எண்ணம்.

**அன்றும் இன்றும்**

*(இது 10.4.1978இல் எழுதப்பட்டதாகும்)*

ஒரு காலத்து எழுத்துகள் மறு காலத்தில் அதிசயமாவதும் உண்டு, கேலிக்கிடமாவதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பழைய எழுத்துகள் சிலவற்றை இப்போது நானே படித்துப் பார்த்தால் ''நாமா இப்படி எழுதினோம்?'' பழைய எழுத்துகளோ ''சீ! இவ்வளவு மட்டமாகவா எழுதினோம்'' என்று எண்ணவும் தோன்றுகிறது. புத்தகம் வெளியிடுவதில் புதிய உற்சாகம் பொங்கி வழியும் காலம் இது. புது நூல்களோடு எனது பழைய எழுத்துகளில் தரமானவையும் விடாமல் தொகுக்கப்படுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னால் நண்பர் சோ அவர்கள், தனது ''துக்ளக்'' பத்திரிகையில் எதாவது எழுத வேண்டும் என்று கேட்டார். ''எண்ணங்கள் ஆயிரம்'' என்ற தலைப்பையும் அவரே சொன்னார். சிலகாலம் அந்தத் தலைப்பில் எழுதி வந்தேன்.

அவை இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. என் குழந்தைகளுக்குப் புத்தகம் போடுவதில் இப்போது தீராத ஆசை. அண்மையில் திருமணமான என் மூத்த மகன் ''காந்தி'' (இது எழுதப்பட்டது 1978ஆம் ஆண்டு), பாதிப் பங்காளியாக உள்ள ''கீதாசமாஜம்'' இந்த நூலை வெளியிடுகின்றது.

பல்வேறு காலத்திய கருத்துகள் என்றாலும், என்னுடைய சிந்தனையோட்டம் ஒரே மாதிரி இருப்பதை இந்தக் கட்டுரைக் குவியல் சுட்டிக் காட்டும்.

அன்பன்
**கண்ணதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே உள்ள கண்ணதாசன் அவர்களின் முன்னுரையை நான் தந்ததற்குக் காரணம், கவிஞரின் சிந்தனைத் தடாகத்தின் நீர் எவ்வளவு தெள்ளத் தெளிவாக இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்கே. அவர் தன்னைத் தானே விமர்சித்தார். அதன் மூலம் எழுந்த வினாக்களுக்குத் தானே விடை காண முற்பட்டார். உண்மைகள் பூதாகரமாக அவர் முன்னே எழுந்து நின்றபோது அவர் ஓடி ஒளிந்து கொள்ளவில்லை. அதைத் துணிவாக எதிர்கொண்டார். அதன் மூலமே அவருடைய எழுத்தாக்கங்கள் எந்தவொரு காலகட்டத்திற்கும் உகந்ததாக மிளிர்கின்றது.

இனிக் கவிஞரது கட்டுரை ஒன்றைப் பார்ப்போம்.

**நம்பிக்கை 1**

நம்பிக்கையில்தான் நானும் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். ஆனால், என் நம்பிக்கை வரையறுக்கப் பட்டிருக்கின்றது. என் தகுதிக்கும், திறமைக்கும் உட்பட்டே, அந்த நம்பிக்கை தன் ராஜ்ஜியத்தை நடத்துகின்றது. தகுதி வளர்ந்தால்தான் எனது நம்பிக்கை வளர்கிறது. சிறிய கொடிகளில் பெரிய பூசணிக்காய் காய்ப்பது போல், சிலரது நம்பிக்கை அவர்களது சக்தியை விட அதிகமாக இருக்கின்றது.

பெரிய மரம் சிறிய கனிகளை ஈன்றெடுப்பது போல, எனது சக்தி, எனது நம்பிக்கையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலாட்டுகின்றது. ''இமயமலையின் மீது ஏறிவிடலாம்'' என்று மனிதன் நம்புகிறான்; ஏற முயற்சிக்கிறான். கால்களில் வலுவில்லை. கடைசியில் ஒரு குன்றின் மீது நின்று கொண்டு ''இதுதான் இமயம்'' என்று சாதிக்கிறான்.

சொல்லித் திருத்த முடியாத வாதங்களை ஏற்றுக் கொண்டு விட்டால் தொல்லை இல்லை என்பதால், மற்றவர்களும் அதை ஒப்புக் கொள்கிறார்கள். களிமண்ணால் சிலை செய்ய முயற்சிக்கும் ஒரு சிற்பி, மண்ணாலேயே ஒரு மாளிகை கட்ட முயற்சிக்கிறான். ''காகிதக் கப்பலைக் கடலிலே விடுவேன்; அதை ஓட்டியும் காட்டுவேன், கரையிலும் சேர்ப்பேன்'' என்பது ஒருவனது வாதம்.

இரண்டு காலடிகள் ஒழுங்காக விழுந்து விட்டதாலேயே, கால்களில் எண்ணெயைத் தடவிக் கொண்டு வழுக்குப் பாதைகளில் ஏறுவேன் என்பது இன்னொருவரின் வாதம். ஒரு வெற்றி, பல வெற்றிகளைக் கனவு காண்கின்றது. ஒரு சக்தி, பல சக்திகள் தனக்கிருப்பதாக நம்புகின்றது. மத்தளத்தில் புல்லாங்குழல் வாசிக்க ஒரு முயற்சி.

தாரையும், கொம்பும் ஸ ரி க ம ப த நி பாடுகின்றன. சிலகாலம் அவற்றையும் ஏற்றுக் கொள்கின்றன. ஆனால் நம்பிக்கை அளவுக்கு மீறியதாக ஆகும் போது, அழிவும் கேலியும் எதிரே நிற்கின்றன. கோழிக்குஞ்சைப் பிடித்து விட்ட தைரியத்தில் ஒருவன் யானையையும் பிடிக்கத் தயாராகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரம்போர்டில் வெற்றி பெற்றுவிட்ட மயக்கத்தில் கிரிக்கெட் பந்தயத்திற்கு ஒருவன் தயாராகிறான். போலந்தையும், செக்கோஸ்லாவாகியாவையும் பிடித்த மயக்கத்தில் சோவியத் யூனியனுக்குள் நுழைந்த ஹிட்லரைப் போல், நீச்சல் குளத்தில் நீந்தப் பழகியவன், ''கடலிலும் குதித்துக் கரையேறுவேன்'' என்கிறான்.

நம்பிக்கை தரும் வெற்றிகளை விட தோல்விகள் அதிகம். அந்தத் தோல்விகளும், வெற்றிகளே என்பது ஒருவனது நம்பிக்கை. நம்பிக்கையின் அளவு எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை மனிதர்கள் மிருகங்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

தங்கள் சக்திக்கேற்ப அவை நம்பிக்கை வைக்கின்றன. நம்பிக்கை துளிர்விடும் போது அச்சம் அற்றுப் போகின்றது. அச்சம் அற்றுப்போன இடத்தில், ''எது செய்தாலும் சரியே'' என்ற துணிவு வருகின்றது. அந்தத் துணிவு, தோல்வியைக் கூட்டி விடுகிறது. தோல்வி நம்பிக்கையைச் சாக அடிக்கிறது. மனித மனம், பழைய நிலைக்குத் திரும்புகின்றது. மனிதனது கடைசி நம்பிக்கை, மயானம். இந்த நம்பிக்கை மட்டும் தோல்வியடைந்ததே இல்லை.

பாஞ்சாலியைத் துகிலுரிந்த போது கௌரவர்களுக்கிருந்த நம்பிக்கை பாரதப்போர் வரையிலும்தான் இருந்தது. எதிரியின் சக்தி என்ன என்று தெரியும்வரை, ஒருவன் கொண்டிருக்கும் நம்பிக்கையை யார் தடுக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் சிலரது நம்பிக்கைகளை வியப்போடும், திகைப்போடும் பார்க்கிறது. நான் யாருடைய நம்பிக்கையையும் வேடிக்கையாகப் பார்க்கிறேன். மரணத்தின் பின் மனித ஏடுகள் பரிசீலிக்கப் படும்போது, எது சரி, எது தவறு என்பது தெரியப் போகிறது. அதுவரை சர்க்கஸ்காரனுக்கு அடங்கும் புலியைப்போல், என் நம்பிக்கையை என் அளவுக்குள் வைத்திருக்க விரும்புகிறேன்.

(கவிஞர் கண்ணதாசனின் ''எண்ணங்கள் ஆயிரம்'' எனும் தொகுப்பிலிருந்து. - நன்றி)

மேலேயுள்ள கட்டுரை கவிஞர் வாழ்க்கையின் நடைமுறைகளை யதார்த்த முறையில் தத்துவங்களோடு பின்னிப் பார்த்து விளக்கும் அழகைச் சித்திரிக்கின்றது.

## 7

இப்போது நாம் பார்க்கப் போகும் இந்தப் பாடல் கவிஞரின் கற்பனைக்கு ஒரு கலசம். தன் கணவனைப் பிரிந்த ஒரு பெண், மீண்டும் அவனைச் சந்திக்கும் போது ஏற்படும் அந்த உணர்ச்சிக் குவியலை ஒவ்வொன்றாகப் பிரித்தெடுத்து எம்மையும் அதே உணர்ச்சி வீதியில் ஊர்கோலம் அழைத்துச் செல்கிறார்.

கவிஞரின் பாடலுக்கு, பி. சுசிலாவின் காந்தர்வக் குரல் உயிர் கொடுக்க பலரது மனவானிலும் மறையாது நிலை கொண்டிருக்கும் பாடலிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் சிறகைக் காற்றினில் விரித்து
வானவீதியில் பறக்கவா?
கண்ணில் நிறைந்த கணவனின் மார்பில்
கண்ணீர்க் கடலில் குளிக்கவா?

அருமையான கற்பனை, ஒரு பெண்ணால் பறக்க முடியுமா? முடியும் என்கிறார் கவிஞர். அவளது காதல் சிறகை விரித்தால், அவளுக்கு வானம் எனும் வீதி சாதாரணமாகி விடுகின்றதாம்.

அவளால் வானில் பறக்கக்கூட முடியும். ஆனால் அடைய முடியா அந்த இலக்கை அடைந்து பறப்பதா இல்லை பிரிந்து மீண்டும் இணைந்த கணவனின் மார்பில் தனது முகத்தைப் புதைத்து இவ்வளவு காலம் அவனைப் பிரிந்திருந்த சோகச் சுமையைக் கொட்டித் தீர்ப்பதா எனக் குழம்பிப் போகின்றாளாம்!

அடேயப்பா, தமிழறிவெனும் உளியால், தமிழெனும் கருங்கல்லில் சிற்பம் வடிக்கக் கூடிய திறன் கவிஞரின் தனிப்பெருமை.

எண்ணங்களாலே பாலம் அமைத்து
இரவும், பகலும் நடக்கவா?
இத்தனை காலம் இருந்ததை எண்ணி
இருகை கொண்டு வணங்கவா?

கவிஞர் இந்த ஒரு வரியில் தனது கணவனைப் பிரிந்திருக்கும் துயரை இவ்வளவு காலமும் அவள் எவ்வாறு சகித்துக் கொண்டாள் என்று அருமையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கியுள்ளார். அதோடு அடுத்த வரிகளில் இறைவனுக்கு அவள் கணவனை உயிரோடு வைத்திருந்ததற்காகவும், அதேசமயம் தனது கணவனும் இத்தனை காலமும் இன்னொருத்தியை நாடாது தன் நினைவுகளுடனேயே இருந்ததற்காகவும் நன்றி சொல்வதற்காக இரு கை கொண்டு வணங்கப் போகின்றாளாம். எப்படி இரு கருத்துகளை ஒரே வாக்கியத்தில் உள்ளடக்கியிருக்கிறார் பார்த்தீர்களா?

முதல்நாள் காணும் திருமணப் பெண்போல்
முகத்தை மறைத்தல் வேண்டுமா?
முறையுடன் மணந்த கணவர் முன்னாலும்
பரம்பரை நாணம் தோன்றுமா?

ஆமாம் இவ்வளவு காலம் பிரிந்திருந்தோமே? அவரைப் பார்த்ததுமே முகத்தை மறைக்க வேண்டுமோ?

சும்மா போங்கடி! அவர் என்னை முறையாக மணந்த கணவர்தானே? பின்னும் என்ன அங்கேயும் பரம்பரை நாணம் வந்திடுமோ? புரியாமல் தவிப்பதைத் தனக்கே உரிய பாணியில் படம் பிடித்துக் காட்டுகின்றார் தமிழ் எனும் காமிரா கொண்டு.

பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும் போது
அழுதால் கொஞ்சம் நிம்மதி
பேச மறந்து சிலையாய் இருந்தால்
அதுதான் தெய்வத்தின் சந்நிதி.

முதல் மூன்று பந்திகளிலும் வினாக்களை வீசிய நமது தமிழ்ப்பெண் கடைசியில் தானே அதற்கு விடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகருகின்றாள். பலநாள் காணாமல் கண்ட தன் கணவனின் முன்னால் தான் அழுவதும், அப்படியே அமைதியாய்ச் சிலைபோல் நிற்பதுவும் சரியான ஒரு நிகழ்வுதான் என மனத்தை சாந்தியாக்கிக் கொள்கிறான்.

கவிஞரின் பாடல் எனும் தோட்டத்தினுள் நான் நுழைந்து விட்டால் வெளியேறும் வழியைத் தொலைத்து விடுகிறேன். வெளிக்கதவைப் பூட்டி அதன் சாவியைத் தமிழமுது எனும் பூந்தொட்டியின் கீழ் மறைத்து விடுகிறார் கவிஞர்.

என்னோடு சேர்ந்து இந்தப் பூந்தோட்டத்தில் பயணித்ததற்கு நன்றி, நீங்களும் இந்த அழகில் மனம், லயித்திருப்பீர்கள் என நம்புகின்றேன்.

## 8

கவிஞர் கண்ணதாசன் புவியில் வாழ்வைத் துறந்தபோது அவரின் நண்பர் கலைஞர் கருணாநிதி வடித்த இரங்கல் கவிதை இங்கே :

என் இனிய நண்பா
இளவேனிற் கவிதைகளால்
இதயசுகம் தந்தவனே! உன்
இதயத்துடிப்பை ஏன் நிறுத்திக் கொண்டாய்!

தென்றலாக வீசியவன் நீ - என்நெஞ்சில்
தீயாகச் சுட்டவனும் நீ! அப்போதும்
அன்றிலாக நம் நட்பு நிகழ்ந்ததயன்றி
அணைந்த தீபமாக ஆனதே இல்லை; நண்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணதாசா! என்
எண்ணமெல்லாம் இனிக்கும் நேசா!
கவிதை மலர்த் தோட்டம் நீ – உன்னைக்
காலமெனும் பூகம்பம் தகர்த்துத்
தரைமட்டம் ஆக்கிவிட்டதே!

கைநீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெல்லாம்
கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ!
கல்லறைப் பெண்ணின் மடியிலும்
அப்படித்தான் தாவி விட்டாயோ
அமைதிப்பால் அருந்தித் தூங்கி விட!

இயக்க இசைபாடிக்களித்த குயில் உன்னை
மயக்க மருந்திட்டுப் பிரித்தார் முன்னை
தாக்குதல் கணை எத்தனைதான் நீ
தொடுத்தாலும்
தாங்கிக் கொண்ட என்நெஞ்சே உன் அன்னை!
திட்டுவதும் தமிழில் நீ திட்டியதால் –
சுவைப்பிட்டு என ஏற்றுக்கொண்ட என்னை;

தித்திக்கும் கவித்தமிழா! பிரிவின்
மத்தியிலே ஏன் விட்டுச் சென்றாய்?
அடடா! இந்த இளமைக் கழனியில்
அன்பெனும் நாற்று நட்டோம்!

ஆயிரங்காலத்துப் பயிர் நம் தோழமையென
ஆயிரங்கோடி கனவு கண்டோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடைக்கு யாரோ வந்தார்!
உன்னை மட்டும் அறுத்துச் சென்றார்

நிலையில்லா மனம் உனக்கு! ஆனால்
நிலைபெற்ற புகழ் உனக்கு!

இந்த அதிசயத்தை விளைவிக்க உன்பால்
இனியதமிழ் அன்னை துணை நின்றாள்!

என் நண்பா!

இனிய தோழா!

எத்தனையோ தாலாட்டுப்பாடிய உன்னை
இயற்கைத் தாய் தாலாட்டித் தூங்க வைத்தாள்!
எத்தனையோ பாராட்டுப் பெற்ற உனக்கு
இயற்கைத்தாயின் சீராட்டுத்தான் இனிக்கிறதா?

என்னை மறந்தாய்! எமை மறந்தாய்! உனை
மறக்க முடியாமல் உள்ளமெல்லாம் நிறைந்தாய்!

மேலேயுள்ள கவிதை அவர்களிருவருக்கும் இடையில் இருந்த நட்பின் ஆழத்தை அளந்து காட்டுகின்றது. கலைஞர் தனக்கே உரிய பாணியில் தமிழைத் தாலாட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

கவிதை உலகின் காவியத்தலைவன் கண்ணதாசனைப் பற்றிப் பேசுவதென்றால் உலகத்தில் வேறு எதுவுமே தேவைப்படாது. முந்தைய பகுதியில் அவர் தம் பாடல்கள் சிலவற்றையும், கட்டுரையையும் பார்த்தோம். இப்போது சிறிது வித்தியாசமாக வேறு ஒரு கோணத்தில் கவியரசரைப் பார்ப்போம்.

இத்தகைய ஒரு சிறந்த கவிஞனுக்கு இத்தகைய சிறந்த பாடல்களைச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அமைப்பதற்கு உந்துதலைக் கொடுத்தது எந்தச் சக்தி என்று சிந்தித்தேன். இயற்கையிலே இறைவன் அளித்த அந்தத் தமிழ் இலக்கிய ஞானம் இருந்தாலும், தன் அனுபவங்களே தனக்குப் பல இடங்களில் கைகொடுத்துள்ளன எனத் தன் சுயசரிதத்தில் கவிஞரே குறிப்பிட்டுள்ளார்.

தகவல் சேகரிப்பதற்காகப் பல இணைய தளங்களில் தேடியதற்கு நல்ல பலன். அவர் எழுதிய வெற்றிப் பாடல்களின் பின்னணியில் உள்ள சம்பவங்கள் சிலவற்றை அறிய முடிந்தது. அதன் அடிப்படையில் மூன்று சம்பவங்களைத் தொகுத்துத் தருகிறேன். படித்துப் பாருங்களேன்! சுவையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIV... 25 SEP 2010 ...NIYA

## பாடல் பிறந்த சம்பவம் – 1

''அவன் தான் மனிதன்'' என்னும் படத்தை உங்களில் பலர் பார்த்து ரசித்திருப்பீர்கள்; சிவாஜிகணேசனின் அற்புதமான நடிப்பில் வெளிவந்த அருமையான படம். அதிலே வந்த பாடல்கள் அனைத்தும் உங்கள் மனத்தில் இன்றும் நிலை பெற்றிருக்கும் என நம்புகிறேன். 'அவன்தான் மனிதன்' படம் 1973ஆம் ஆண்டு மே மாதம் சிங்கப்பூரில் படமாக்கப் பட்டது. இதற்குப் பாடல்கள் எழுதுவதற்காகக் கவியரசர் கண்ணதாசனைக் கேட்டிருந்தார்கள். எதையும் மிகவும் இலகுவாக எடுத்துக் கொள்ளும் கவியரசரின் பழக்கத்தை மனத்திற் கொண்டு அந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள், அவரோடு அடிக்கடித் தொடர்பு கொண்டு 'மே மாதம் பாடல்கள் தேவை, மறந்து விடாதீர்கள்' என நசசரித்த வண்ணமே இருந்தார்ககள். கடைசியாக ஒருநாள், பாடல்களை அன்றே எழுத வேண்டும் என வற்புறுத்தினார்கள். கவியரசரும் வற்புறுத்தல் தாங்காது சென்னையில் 'ஹோட்டல் அட்லாண்டிக்'இல் அத்தனை பாடல்களையும் எழுதி முடித்தார்.

அவை மிகவும் பிரபலமான,

''ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ கண்ணா?'',

''அன்பு நடமாடும் கலைக்கூடமே!'',

''மனிதன் நினைப்பதொன்று'' மற்றும்

''எங்கிருந்தோ அந்தக் குரல்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 SEP 2010

எனும் பாடல்களாகும். பாடல்களை எழுதிக் கொடுத்துவிட்டு வெளியேறும் போது தனது உற்ற நண்பரான எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களிடம், ஒரேயொரு பாட்டை மட்டும் கவனமாகக் கவனி என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அனைவரும் ஏன் கவியரசர் அப்படிக் கூறினார் என்று மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கையில், எம்.எஸ். விஸ்வநாதனுக்குப் பட்டென்று வெளிச்சமானது. உற்ற நண்பராயிற்றே! மே மாதம், மே மாதம் என்று கவிஞரைப் போட்டுத் தயாரிப்பாளர்கள் நச்சரித்ததைத் தாங்காமல் தனக்கே உரிய பாணியில் ஒரு பாடலில் தனது ஆதங்கத்தை வெளியிட்டிருந்தார். அடுத்தமுறை ''அன்பு நடமாடும் கலைக்கூடமே'' எனும் பாடலைக் கேட்கும்போது உங்களுக்குப் புரியும். ஆமாம் அந்தப் பாடலின் ஒவ்வொரு வரியின் முடிவிலும் ஒரு 'மே'யைச் சேர்த்திருந்தார். அதாவது தயாரிப்பாளர்கள் தன்னிடம் மே, மே என்று குறிப்பிட்டது தனக்கு எரிச்சல் மூட்டியது என்பதை அறியத் தருவதற்காக. அப்பப்பா! என்னே சாமர்த்தியம், எப்படியான ஒரு சந்தர்ப்பக் கவி, இவை அனைத்தையும் தரணியில் உயர்ந்த கவிஞனால் தான் சாதிக்க முடியும்.

**பாடல் பிறந்த சம்பவம் – 2**

''கௌரவம்'' என்னும் ஓர் அருமையான படம் நண்பர்களுக்கு ஞாபகமிருக்கும் என்று நம்புகிறேன். அதிலே வந்த அருமையான சில பாடல்களும் உங்களுக்கு நன்றாக நினைவில் இருக்கும். அது 1973/ 74 ஆம் ஆண்டுக் கால கட்டம். அப்போது கவியரசர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மருமகனை முன்னுக்குக் கொண்டு வருவதற்காக அவரைத் தனக்கு உதவியாளராக வைத்துக் கொண்டிருந்த காலம். அந்தச் சமயத்தில் கவியரசர் மலேசிய விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அந்த நேரத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள நினைத்தார் கவியரசரின் மருமகன். எதையும் இலகுவாக எடுத்துக்கொள்ளும் கவியரசரின் மனப்பான்மையை மேற்கோள் காட்டி, அந்தப் படத்தில் பாடல் எழுதும் சந்தர்ப்பத்தைத் தனக்குத் தருமாறு வேண்டினார். ஆனால் அப்படத்தின் தயாரிப்பாளர்களோ கவியரசர் மீதே நம்பிக்கை கொண்டிருந்தார்கள். எனவே அவர் வரும் வரைக்கும் காத்திருந்தார்கள். கவியரசர் வந்ததுமே இந்தச் செய்தி அவர் காதுகளுக்கு எப்படியோ எட்டி விட்டது. ‘‘நான் வளர்த்த என் வீட்டுப் பையனே எனக்குத் துரோகம் புரிய முற்பட்டானா?’’ - அவரது அனுபவப் பட்டறையில் அடுத்ததொரு ஆயுதம். கலங்கவில்லை கவிதை ராஜன். எடுத்தான் பேனாவை, வடித்தான் தமிழ் ஓவியத்தை, ரசிகர்களான எங்களுக்குக் கிடைத்தன அருமையான பாடல்கள் இரண்டு :

பாலூட்டி வளர்த்த கிளி,
பழம் கொடுத்துப் பார்த்த கிளி

நீயும் நானுமா? கண்ணா நீயும் நானுமா?

அடுத்த தடவை இந்தப் பாடல்களைக் கேட்கும் போது கண்களை மூடிக்கொண்டு, மனக்கண்ணிலே கவியரசரின் இந்தக் காட்சியைக் கற்பனை பண்ணிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கள். புதுவிதமான அர்த்தங்களும் இதை எழுதும்போது கவிஞரின் மனத்தில் ஓடிய எண்ணங்களும் உங்களுக்கு நிதர்சனமாகும்.

ஒரு கவிஞன் கை வலிக்காமல் பாடல்களை எழுதுவது பெரிதல்ல. அந்தப் பாடலில் பிரதிபலிக்கும் உணர்ச்சிகளை ரசிகர்களாகிய நம் மனங்களில் உருவாக்குவதுதான் பெரிது. அதில்தான் அவனது வெற்றி தங்கியுள்ளது. கசப்பான அனுபவங்கள் கொடுத்த உணர்ச்சிகளுக்குத் தமிழ் எனும் இனிப்புத் தடவி எமக்குச் சுவைக்கக் கொடுக்கும் உன்னதக் கவிஞனின் ஆற்றலுக்கு இணை எங்கேயுண்டு!

இன்னும் சில சம்பவங்களைப் பார்ப்போம்.

**பாடல் பிறந்த சம்பவம் – 3**

கே. பாலச்சந்தருக்கும், கவியரசர் கண்ணதாசனுக்கும் உள்ள நட்பு வித்தியாசமானது. ஒவ்வொருவரும் மற்றவருடைய திறமையை மதித்து மிகவும் கௌரவமாகப் பழகினர். 60ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியிலும், 70ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் கே. பாலச்சந்தர் வெளியிட்ட பல படங்களின் வெற்றியின் பின்னணியில் கவியரசர் கண்ணதாசன் பாடல், எம்.எஸ். விஸ்வநாதன் இசையமைப்பு எனும் கூட்டுறவு மிளிர்ந்தது.

இந்தப் பட்டியல்களில் ஒன்றுதான் ''பட்டினப் பிரவேசம்.'' இந்தப் படத்திற்காக எம்.எஸ். விஸ்வநாதன் ஒரு மெட்டு மீட்டியிருந்தார். அது கே. பாலச்சந்தருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பிடித்திருந்தது. ஆனால் கேள்வி ''பூனையின் கழுத்தில் யார் மணி கட்டுவது?'' ஆமாம், இந்த மெட்டிற்கேற்றவாறு பாடலை அமைக்கும்படி யார் கவியரசரைக் கேட்பது? ஒரு கால கட்டத்திலே இசையமைப்பாளர்களின் கட்டளைப்படியே பாடலாசிரியர்கள் பாடல்கள் எழுதினார்கள். ஆனால் இந்தக் கலாச்சாரத்தை மாற்றியதே கண்ணதாசன் எனலாம். கண்ணதாசன் இந்தக் கட்டுப்பாட்டிற்குப் பணிய மறுத்த கவிஞர். எனவே இந்தப் பொறுப்பை கவியரசரின் உற்ற நண்பரான எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களிடமே கே. பாலச்சந்தர் ஒப்படைத்திருந்தார். இதைச் செயலாக்குவதற்கு எம்.எஸ்.வி. ஒரு தந்திரத்தைக் கையாண்டார். ஒரு சவாலாக ''எங்கே இந்த மெட்டிற்கு ஒரு பாடல் எழுது பார்க்கலாம்'' என்று கவியரசரிடம் கேட்டார். முதலில் தனது பாணியில் மறுத்தாலும் பின்பு ஒருவாறு கவிஞர் ஒத்துக்கொண்டு 15 நிமிடங்களில் அந்தப் பாட்டை எழுதி முடித்தார். அதுதான் உங்கள் நினைவிலும், என் நினைவிலும் என்றும் நிறைந்திருக்கும் ''**வான் நிலா நிலா அல்ல**'' என்னும் பாடல்.

எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் இன்னிசைக் குரலில் ஒலிக்கும் கானம் இது. இந்தப் பாடலை எழுதி முடித்த பின் கவிஞரே இதன் பெருமை பற்றிக் குறிப்பிடுகையில், நகைச்சுவையாக தன் ஒவ்வொரு வரியும் ''லா''வில் முடிகிறது. இதில் நான் குறிப்பிடாத முக்கியமான மூன்று ''லா''க்கள் ''மதர் - இன் - லா (மாமியார்), பாதர் - இன் - லா (மாமனார்), டாட்டர் - இன் - லா (மருமகள்)'' என்று குறிப்பிட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசர் கண்ணதாசன், எம்.எஸ். விஸ்வநாதன் ஆகியோரின் நட்பு மிகுந்த இணையை தனது படம் ஒன்றினில் புகுத்த ஆவலாக இருந்த கே. பாலச்சந்தர், ''வறுமையின் நிறம் சிகப்பு'' படத்தில் ''**சிப்பி இருக்குது முத்தும் இருக்குது திறந்து பார்க்க நேரமில்லடி ராஜாத்தி**'' என்னும் பாடலைப் புகுத்தினார்.

அதனை நினைவு கூர்ந்தீர்களானால், ஸ்ரீதேவி ராகத்தைக் கொடுக்க கமல்ஹாசன் அதற்கேற்றவாறு பாடலைக் கொடுப்பதாக அந்தக் காட்சி அமைந்திருந்தது. இதில் ஸ்ரீதேவி எம்.எஸ். விஸ்வநாதனையும், கமல்ஹாசன் கவியரசர் கண்ணதாசனையும் பிரதிபலிப்பது போன்ற அர்த்தத்தைத்தான் இந்தக் காட்சியில் கே. பாலச்சந்தர் வெளிக்கொணர்ந்தார்.

மற்றுமொரு திரைப்படம் கே. பாலச்சந்தர் அவர்களின் ''அபூர்வ ராகங்கள்.'' அதில், கதையின் முடிவுரையாக பாடல் ஒன்றை அமைக்கும்படி கே. பாலச்சந்தர், கவியரசரைக் கேட்டார். அதற்காகவே பிறந்த அருமையான பாடல் ''**கேள்வியின் நாயகனே இந்தக் கேள்விக்குப் பதிலென்ன?**'' என்பதாகும். இந்தப் படத்தின் கருத்தையே மிகவும் ஆழமாக விவரித்தது இது.

நண்பர்களே! மேலே நான் குறிப்பிட்ட சம்பவங்கள் உங்களுக்குச் சுவையூட்டுபவையாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

கண்ணதாசன் என்ற தனிமனிதன் தமிழ் நெஞ்சங்களில் ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரியது. தமிழ் இலக்கிய உலகிலே அவரது பங்களிப்பு ஈடு இணையற்றது. கவிஞர் மறைந்து இத்தனை ஆண்டுகள் ஆகியும் இன்னமும் இன்றைய பாடல்களை அளக்கும் அளவுகோலாக கவித்தலைவனின் ஆக்கங்களே அமைகின்றன. ஒரு பாடலின் வெற்றியை ஒப்பீடு செய்ய அவரது படைப்புகளே முன்னிற்கின்றன.

அவரது இனிய திரைகானம் ஒன்று நமக்குச் சொல்ல வந்த செய்தியை, அந்தப் பாட்டைப் பகுப்பதின் மூலம் பார்ப்போம்.

ஆறு மனமே ஆறு - அந்த
ஆண்டவன் கட்டளை ஆறு
தேர்ந்து மனிதன் வாழும் வகைக்கு
தெய்வத்தின் கட்டளை ஆறு
தெய்வத்தின் கட்டளை ஆறு (ஆறு)

ஒன்றே சொல்வார் ஒன்றே செய்வார்
உள்ளத்தில் உள்ளது அமைதி இன்பத்தில் துன்பம்
துன்பத்தில் இன்பம்
இறைவன் வகுத்த நியதி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுக்குச் செய்கை பொன்னாகும் - வரும்
துன்பத்தில் இன்பம் பட்டாகும் - இந்த இரண்டு
கட்டளை அறிந்த மனதில்
எல்லா நன்மையும் உண்டாகும் (ஆறு)

உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும் - நிலை
உயரும்போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்

உண்மை என்பது அன்பாகும் - பெரும்
பணிவு என்பது பண்பாகும் - இந்த
நான்கு கட்டளை அறிந்த மனதில் எல்லா
நன்மையும் உண்டாகும் (ஆறு)

ஆசை, கோபம், களவு கொள்பவன்
பேசத் தெரிந்த மிருகம்
அன்பு, நன்றி, கருணை கொண்டவன்
மனித வடிவில் தெய்வம் - இதில்
மிருகம் என்பது கள்ள மனம் - உயர்
தெய்வம் என்பது பிள்ளை மனம் - இந்த
ஆறு கட்டளை அறிந்த மனது
ஆண்டவன் வாழும் வெள்ளை மனம் (ஆறு)

இந்தப் பாடல் உங்களில் பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

ஆண்டவன் கட்டளை என்னும் படத்திற்காக கவிஞர் இயற்ற, டி.எம்.எஸ். குரல் கொடுத்து, நடிகர் திலகம் நடித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதன் அமைதியான வாழ்வு வாழ எளிமையான ஆறு கட்டளைகளைத் தெரிந்து கொள்ளச் சொல்கிறார்.

அதிலே ஒரு சிறப்புப் பாருங்கள். ஒரு சராசரி மனிதன் வாழ்விலே அவன் விரும்புவது பொன், பட்டு என்பதுவே. அதாவது வாழ்க்கை வசதிகளைக் குறிப்பிடுகிறார்.

சொல்லுவதையே, செய்பவன் வாழ்க்கையில் அவன் சொல்வதும் அதைச் செய்வதும் பொன்னைப் போலே அவனுக்கு இன்றியமையாததாம். அது மட்டுமல்ல இன்பம் வருகிறது. அந்த இன்பத்திலே ஒளிந்து துன்பம் தொடர்கிறது. துன்பம் என்று பதைத்துப் போகிறோம். அந்தத் துன்பத்திலே இன்பம் குடிகொள்கிறது. இதிலே துன்பத்ினூடாக வரும் இன்பம் அவனுக்குப் பட்டைப் போன்றதாகும்.

ஒரு வாழ்க்கையின் இன்றியமையாத தத்துவத்தைச் சொல்லிய அழகைப் பார்த்தீர்களா?

உண்மையைப் பேசுங்கள், நன்மையைச் செய்யுங்கள் உலகம் தானாக உங்களைத் தேடி வரும். உங்கள் நிலை உயரும்போது, முன்பு இருந்த நிலையை மனத்தில் கொண்டு பணிவாக நடந்தீர்களானால் நீங்கள் வணக்கத்துக்குரியவர்களாவீர்கள் என்கிறார் கவிஞர்.

இந்த நான்கு கட்டளைகளை அறிந்தாலே நன்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை அன்புக்கும், பணிவைப் பண்புக்கும் ஈடு கட்டி அதன் முக்கியத்துவம் வாழ்க்கையில் எப்படிப் பேணப்பட வேண்டும் என்று அழகாக எடுத்தியம்புகிறார்.

ஆசை, கோபம், களவு இந்தக் குணங்கள் ஒரு மனிதனை மிருகமாக்குகின்றன. இதைக் கடந்தவன் வாழ்க்கை தெய்வாம்சங்கள் பொருந்திய ஒரு தூய்மையான வாழ்க்கையாக மாறுகிறது என்று நமக்கெல்லாம் ஒரு இலட்சியப் பயணத்தை மேற்கொள்ளுமாறு அறைகூவல் விடுகிறார்.

மிருகம் என்பது கள்ள மனமின்றி வேறொன்றுமில்லை. அதேபோல தெய்வமனம் பிள்ளை மனம் என்று நமது கண்ணுக்குப் புலப்படக்கூடிய ஒரு உதாரணத்தின் மூலம் உயர்த்திக் காட்டுகிறார் நமது கவிஞர்.

## கண்ணதாசன் கூற்று

**பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவில் ஊசலாடிக் கொண்டிருப்பதல்ல பிறப்பின் நோக்கம். சுகமான சிந்தனைக்கு அவகாசம் வேண்டும். அங்கே; எப்படிக் கிடைக்குமோ அப்படி; எதனால் கிடைக்குமோ அதனால் கொண்டுவரப்பட வேண்டும்.**

**புள்ளிகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான் கோலங்கள் ஆகின்றன. எண்ணங்கள் பூர்த்தியடையும்போது அதற்கு நிம்மதி என்று பெயர் வருகிறது. எது தேவையோ அதைப் பெற்றுவிட முயற்சி செய்வோம்; இல்லையேல் விட்டுவிடத் தயாராகுவோம். காரணம் எமக்குத் தேவை நிம்மதி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

கண்ணதாசன் சாலை, கண்ணதாசன் பதிப்பகம், கண்ணதாசன் இல்லம். அப்பா! இம்முறை எனது சென்னை விஜயத்தின் போது நான் கடந்த இந்த காவியத் தலைவனின் ஞாபகச் சின்னங்கள் கணக்கிலடங்கா. கலையுலகில் சினிமா உலகில் பலர் உலா வருகிறார்கள் ஆனால் மக்கள் மனத்தில் தமக்கென ஒரு நீங்காத இடத்தை ஏற்படுத்திச் செல்பவர்கள் ஒரு சிலரே. அவரின் இல்லத்தின் வாயிலில் நிற்கும்போது ஒரு கவிதையுணர்ச்சியுடன் கூடிய அமைதி நெஞ்சை நிறைக்கிறது.

இந்த ஆக்கத்திலே அவரது பாடல் ஒன்றை முதலில் பார்ப்போம். அவர் தனது பாடல்களிலே தமிழ்ச் சொல்வளத்தாலே கருத்துகளுக்கு உயிர் வடிவம் கொடுத்தார். அவர் பாடல்கள் சராசரி மனிதரின் இதயங்களின் மென்மையான பகுதிகளைத் தீண்டியது. வாழ்க்கை தம்மை நோக்கி வீசிய இடர்ப்பாடுகளுக்கு முகம் கொடுக்க முடியாது தவிக்கும் ஒருவனுக்கு, அவரது பாடல்களினால் இதயத்தின் வலி தாங்கக் கூடியதாக இருந்தது. இதுவே இந்தக் கவிமகன் புகழேணியின் உச்சிக்குச் செல்ல ஏதுவாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆக்கத்திலே நாம் பார்க்கப் போகும் பாடல், இந்த உலகிலே எமது வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை மிகவும் எளிமையாக எமக்குப் புரிய வைக்கும் பாடல். வாழ்க்கையைப் பற்றி எவ்வளவோ கனவு கண்டு, அதற்காக எத்தனையோ பாடுபடும் நமக்கு, அந்த வாழ்க்கையின் தத்துவத்தைச் சில வரிகளிலே புரிய வைத்து விடுகிறார் கவிஞர்.

இந்தப் பாடல் 'நீர்க்குழி' எனும் திரைப்படத்திலே இடம் பெற்றது. நகைச்சுவை மன்னன் நாகேஷ் அவர்களின் நடிப்பிற்கு, வெண்கலக் குரலோன் சீர்காழி கோவிந்தராஜன் குரலில், கவிஞரின் தம்பியெனும் உரிமை பெற்ற திரு. விஸ்வநாதன் அவர்களும் திரு. ராமமூர்த்தியும் இணைந்து வழங்கிய இசையில் மக்களின் மனத்தை நிறைத்த பாடல்.

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

எத்தகைய ஒரு நிதர்சனமான உண்மையை எப்படி எளிமையாக எமக்குப் புரிய வைத்திருக்கிறார் கவிஞர்.

எத்தனை ஆட்டம் போடுகிறான் மனிதன்? எத்தனை ஏக்கர் நிலத்தை வாங்கிக் குவிக்கிறான், எத்தனை பேரை ஏமாற்றித் தனது காரியங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகிறான்! அவனுக்கென ஆண்டவன் கணித்து வைத்திருப்பதோ ஆறடி நிலம்தான்!

முதலில் எமக்கெல்லாம் தொட்டிலடா
கண்மூடினால் காலில்லாக் கட்டிலடா
பிறந்தோம் என்பதே முகவுரையாம்
பேசினோம் என்பதே தாய்மொழியாம்
மறந்தோம் என்பதே நித்திரையாம்
மரணம் என்பதே முடிவுரையாம்
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

ஒரு வைத்தியர் நோயாளிக்குக் கசப்பான மருந்தை இனிப்புத் தடவிக் கொடுப்பதைப் போல, வாழ்வின் கசப்பான உண்மைகளை இனிப்பான தமிழ் வார்த்தை கலந்து எம்மையெல்லாம், எம்மையறியாமலே பாடலை முணுமுணுக்க வைத்து விட்டார் இந்த ஆய கவி.

வாழ்க்கை என்பது ஒரு நிகழ்வு. அந்த நிகழ்வில் மறதி முக்கியமானது அல்லவா, மறதி என்பது இல்லாவிட்டால் மனிதன் பைத்தியக்காரன் ஆகிவிடுவானல்லவா? அங்கேதான் நித்திரை எமக்குக் கை கொடுக்கிறதாம். எவ்வளவு ஆழமான கருத்து!

சிரிப்பவன் கவலையை மறக்கின்றான்
தீமைகள் செய்பவன் அழுகின்றான்
இருப்போம் என்றே நினைப்பவர் கண்களை
இறந்தவர் அல்லவோ திறக்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

இடுக்கண் வருங்கால் நகுக என்றான் வள்ளுவன், அதை எத்தனை எளிமையாக எமது கவிஞர் கவலையிலும் சிரித்திருங்கள் என்கிறார்.

நாமெல்லோரும் சர்வமாகப் பல காலம் இருப்போம் என்ற மாயையில் பல காரியங்கள் புரிகின்றோமாம், எமது கண்களைத் திறப்பது, எமக்கு முன்னாலே இறப்பவர்கள் தானாம், அப்போதுதான் இந்த வாழ்க்கை நிலையற்றது என்ற எண்ணம் எமக்கு வருகின்றதாம்.

வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை
வந்தவரெல்லாம் நிலைப்பதில்லை
தொகுப்பார் சிலரதைச் சுவைப்பதில்லை
தொடங்குவார் சிலர் அதை முடிப்பதில்லை
ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
ஆடி அடங்கும் வாழ்க்கையடா

தமது வாழ்க்கை என்ற புத்தகத்தை அழகாய்த் தொகுப்பார்களாம். ஆனால் அதைச் சுவைக்க அவர்களால் முடிவதில்லையாம். ஆஸ்திகளைச் சேர்த்து வைத்து விட்டு அனுபவிக்க முடியாது போகும் எமது நண்பர்களைப் பற்றித்தான் இங்கே விளக்கம்!

தொடங்கிய உடனே மறைந்து விடுவதால், முடிக்காமலே போய்விடும் சிலரும் இருக்கிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் எனும் முடிவுரையைக் கொடுப்பது காலன், ஆனால் தாம் தொடங்கிய வாழ்க்கையை முடிக்காமலே போகிறவர்கள் யார் தெரியுமோ? தம்மைத் தாமே அழித்துக் கொள்பவர்கள் தான்.

எப்படி இருந்தது இந்தக் கவிப்பயணம்?

## 12

இதோ இன்னுமொருமுறை கவிஞரின் ஆழ்ந்த கவியாற்றலை, அனுபவத்தோடு படிந்த கருத்தெனும் தேனை மெதுவாகச் சுவைத்துப் பார்க்கும் ஒரு சிறிய அவா.

இளம் வயதினிலே கவிஞரின் திரைகானங்கள் வெவ்வேறு உணர்ச்சிகளின் வெளிப்பாடாக மனத்தைக் கவர்ந்தன. அம்மாவின் முந்தானையைப் பற்றிப் பின் தொடரும் போது தாயின் பெருமைப் பாடல்கள் நெஞ்சைத் தொட்டன.

தந்தை காலத்திற்கேற்ற சுதந்திரத்தை அளித்தபோது, தந்தையின் மீதான பாசத்தை அள்ளித் தெளிக்கும் பாடல்கள் அடி நெஞ்சில் அலையாடின.

கன்னியின் பின்னே காதல் என்றெண்ணி கவர்ந்திழுக்கப்பட்டு அலையும்போது காதல் பாடல்கள் கருத்தைக் கவர்ந்தன.

வாழ்க்கையில் பட்டுத் தெளிந்தபோது அனுபவப் பாடல்கள் ஆறுதலளித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னே! ஓர் இடத்தில் இவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது, அவையனைத்தையுமளித்த கவிஞரின் ஆழமான ஞானம் அதிசயிக்க வைத்தது. இன்றும் அதிசயிக்க வைக்கிறது.

நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போவது, கவிஞரின் இறைமைத் தத்துவத்தைப் புதைத்து வைத்த பாடலொன்றை! இந்தப் பாடல் டி.எம்.எஸ். அவர்களின் கணீரென்ற குரலிலே, செவாலியே சிவாஜிகணேசன் அவர்களின் நடிப்பில் மக்களின் மனத்தைக் கொள்ளை கொண்ட பாடல்.

இந்தப் பாடலின் சிறப்பு இதன் எளிமை, அதனுள் புதைந்துள்ள ஆழமான தத்துவம், கவிஞர் பயன்படுத்தியுள்ள தமிழ்ச்சொற்கள் ஒரு சாதாரண பாமரனைக்கூடக் கவர்ந்து அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தூண்டும் தன்மை வாய்ந்தவை.

**பூஜ்ஜியத்திற்குள்ளே ஒரு**
**ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு**
**புரியாமலே இருப்பான் ஒருவன் - அவனைப்**
**புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்**

பூஜ்ஜியம் என்றால் ஒன்றுமேயில்லை. என்ன இறைமையின் ஆரம்பத்தை இதற்குப் போய் ஒப்பிடுகிறாரே கவிஞர் என ஆதங்கப்படுகிறீர்களா?

ஆரம்பத்தை ஒன்றிலிருந்து ஆரம்பித்து இருக்கலாமே! இல்லை முக்கால், அரை, கால் என அளவுகள் ஒன்றிற்குப் பின்னாலும் ஓர் அர்த்தத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து கொண்டேயிருக்கிறது. எனவே நாம் கையை விரிக்கும் பூஜ்ஜியத்திற்கே நம்மை அழைத்துச் சென்று விடுகிறார். பூஜ்ஜியம், அதாவது தனக்கென ஒரு பெறுமானமும் அற்ற, லாப நட்டம் வேண்டாத ஓர் ஆரம்பம். இதைத்தவிர எதை நாம் ஆரம்பத்திற்கு உதாரணமாகக் கொள்ளலாம்?

கவிஞர் கூற விழைவது என்னவெனில், எதுவுமேயற்ற ஒரு தற்பெருமையில்லா ராஜ்ஜியத்தின் தலைவன்தான் இறைவன். தனக்கென ஒரு பெறுமதியைக் கொண்டிருக்காவிட்டாலும் 1, 2, 3 என்னும் இலக்கங்கள் தமது பெறுமதியை ஏற்றிக் கொள்வது தம் பின்னால் சேர்க்கும் பூஜ்ஜியத்தின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது. அதேபோல, இறைவனின் சேர்க்கை இல்லா வாழ்க்கை பெறுமானமற்றது என்கிறார் கவிஞர்.

அது மட்டுமல்ல. இந்த ராஜ்ஜியத்தின் தலைவனை எவன் புரிந்து கொள்கிறானோ அவன் மனிதன் அல்ல இறைவன் என்று நாம் அர்த்தம் கொள்ளக்கூடாது. இங்கே கவிஞர் அந்த ராஜ்ஜியத்தின் தலைவனை அறிந்து கொண்டால், அந்தத் தலைவனே இறைவன் என்று கூறுகிறார்.

தென்னை இள நீருக்குள்ளே
தேங்கியுள்ள ஓட்டுக்குள்ளே
தேங்காயைப் போலிருப்பான் ஒருவன் - அவனைத்
தெரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவிதமான உறைகளாலே மறைக்கப்பட்டு இருப்பதுதான் தென்னங்காய். அதனுள் இருக்கும் தேங்காயையோ அன்றி இளநீரையோ அதைத் தாங்கியிருக்கும் ஓட்டையோ பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொள்ள முடியாது. எமக்கப்பாற்பட்ட சக்தி என்று எம்மால் நோக்கப்படும் அந்த இறைவனும் அதைப் போன்றவனே என்று எம் கண்முன்னே, பாமர மனிதனுக்குக் கூடத் தெரியக்கூடிய ஓர் உதாரணத்தை எடுத்துக்காட்டுகிறார் கவியரசர்.

எம் மனத்திலுள்ள ஆணவம் எனும் அந்த மாயையை எத்தனையோ சிரமப்பட்டு அகற்றினாலே அங்கு இறைவன் எனும் உண்மையை அறிகிறோம்.

இங்கே நான் கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகவாதிகளுக்கு ஒன்றைக் கூற விழைகிறேன். நீங்கள் ஆணவம் என்னும் மாயயினைக் களைந்து இறைவனைக் காணுகிறீர்கள் என்று கூட எண்ணத் தேவையில்லை. உங்களின் உள்ளத் தெளிவு எனும் உண்மையைக் காணுகிறீர்கள் என்று எடுத்துக் கொள்ளுங்கள். மனச்சஞ்சலங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தெளிவான, அமைதியான சிந்தனை நீரோட்டத்தைக் காணுவதாக எடுத்துக் கொள்ளுங்கள். கவிஞர் இங்கே கூற விழைவது அதுதான்.

அத்தகைய ஒரு சுத்திகரிப்பின் பின் உங்கள் மனம் எத்தகைய அமைதியைக் காணுகிறதோ, அந்த அமைதியின் பெயரே தெய்வம் என்கிறார் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றும் கசந்ததென்று
பற்றற்று வந்தவர்க்குச்
சுற்றமென நின்றிருப்பான் ஒருவன் - அவனைத்
தொடர்ந்து சென்றால் அவன்தான் இறைவன்

என்ன பார்க்கிறீர்கள் நண்பர்களே!

வாழ்க்கையின் எல்லா இன்பத்தையும் அனுபவித்து, அனுபவத் தூணில் அடிபட்டு முற்றையும் துறந்துவிட்டு தனியாக வரும் ஒருவனுக்கு பற்றே இருக்காதே! அவனுக்குக் கூட அத்தகைய சூழலில் ஒரு தனிமை இருக்கத்தானே செய்யும். அப்படிப் பட்டவர்களுக்குத் தான் சொந்தமென ஒரு சக்தி அமைதியைக் கொடுக்கிறதே! அந்த அமைதியை அறிந்து கொண்டு, அவ்வழியே நாம் அந்த அமைதியைப் பின்பற்றினால் அதுதான் தெய்வம்!

கோழிக்குள் முட்டை வைத்து
முட்டைக்குள் கோழி வைத்து
வாழைக்குள் கன்று வைத்தான் ஒருவன் - அந்த
ஏழையின் பேர் உலகில் இறைவன்

முட்டை முதலில் வந்ததா? கோழி முதலில் வந்ததா? என்பது மனித மனத்தினில் உலவும் விடையற்ற வினாக்களில் ஒன்று. விடையற்ற வினாவை மனத்தில் தொங்கவிட்டது ஒரு சக்தியென்றால் அந்தச் சக்தியே இறைவன் என்று எடுத்துக் கொள்ளுங்களேன்.

கோழியைப் படைத்து, முட்டையைப் படைத்து, வாழைக் கன்றைப் படைத்து பல அரிய செயல்களைப் புரிந்தவன் ஓர் ஏழையாம், அவனே இறைவனாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமாக இங்கே கவிஞர் விளக்க விழைவது அந்தஸ்து என்பதற்கு இறைவனின் சந்நிதானத்தில் அர்த்தமேயில்லை என்பதுவே!

நண்பர்களே! இறைவன் எனும் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட சக்தியை நம்பி உங்கள் தன்னம்பிக்கையை இழப்பது என்றுமே உண்மையான ஆன்மீகமாகாது. அதேசமயம் ஆன்மீகப் போர்வையில் செய்யும் அநாகரிகச் செயல்களை மூடிமறைப்பதும் ஆன்மீகமாகாது.

உங்கள் மனத்தின் குறைபாடுகளை உள சுத்தியோடு ஏற்றுக்கொண்டு அதன் நிவர்த்திக்காக உண்மையாக, நேர்மையாக எவன் ஒருவன் ஆக்கபூர்வமாகச் செயல்படுகிறானோ அவன் தான் உண்மையான ஆன்மீகவாதி என்பதுவே யதார்த்தமாகும்.

சமீபத்தில் எமது உள்ளங்களை, வாழ்க்கையைப் பாதித்த இயற்கை அனர்த்தங்களுக்குக் காரணம் தேடிக் குழம்பும்போது, கவிஞரின் சில அனுபவப் பாடல்கள் ரணமான உள்ளங்களுக்குச் சிறிய ஒத்தடம் கொடுக்கிறது.

என்னோடு சேர்ந்து நீங்கள் மேற்கொண்ட இந்தப் பயணத்தில் ஆனந்தமடைந்தது உங்களைவிட நானே என்பதுவே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

கற்பனைக் கடலினில் தேரோடித் தான் கண்டெடுத்த முத்துகளை மலையாக்கி, ரசிகர்கள் கழுத்தினில் பூட்டி அழகு பார்த்துக் களித்திருந்த கவிச்சக்கரவர்த்திதான் கண்ணதாசன். அனைத்தையுமே கற்பனைக் கடலினில் கண்டெடுத்தவை என்று வகைப்படுத்தி விடவும் முடியாது. ஏனெனில், தனது வாழ்க்கைப் பயணத்தில் அனுபவம் எனும் பாதையில் நடக்கும் போது காலில் தைத்த முட்களை அடுத்தவருக்கு பல்லுக்குத்த உதவுமே என்று சேகரித்து உருவாக்கிய அரும் படைப்புகளும் உண்டு.

இந்தப் பகுதியில் அவரை வெள்ளித்திரை வசனகர்த்தாவாக எடுத்துப் பார்க்கவே விழைந்தேன். 2005 டிசம்பர் மாதம் 26ஆம் நாளில் சுனாமி என்னும் அந்தப் பேரழிவு - பேரிடர் - பேரலை கொய்தெடுத்த எம் அரும்பெரும் உறவுகளை நினைத்து எமது மனம் அனைத்தும் சொல்லொணாத் துன்பத்தில் அமிழ்த்தியது.

இதனால் புண்ணாகிப் போயிருக்கும் எமது இதயங்களுக்கு, விடையற்ற வினாக்களை இயற்கையை நோக்கி வீசிக் கொண்டிருக்கும் ஆன்மீகப் பலத்தை உலுப்பிப் பார்க்கும் இக்காலகட்டத்திலே, கண்ணதாசனின் எந்தப் பாடல் எமது மனங்களில் சிறிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலைத் தோற்றுவிக்கும் என்று எண்ணிப் பார்த்து அதைச் சிறிது நோக்கலாம் என எண்ணினேன்.

எனது மனத்தில் உதித்தது ஒரு பாடல். தனது ஆருயிர் மனைவியை இழந்து, அதிலெழுந்த சோகத்திலாழ்ந்து கணவன் பாடுவதாய் வரும் ஒரு காட்சி.

''பாலும் பழமும்'' எனும் திரைப்படத்தில் சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்பிற்கு, டி.எம்.எஸ்.ஸின் காந்தர்வக் குரலில் ஒலித்த இந்தப் பாடல் அனைவரது நினைவுகளையும் விட்டகல மறுக்கும் ஒரு பாடல்!

அந்தப் பாடலைப் பார்ப்போமா?

**போனால் போகட்டும் போடா**
**இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் - யாரடா**
**போனால் போகட்டும் போடா!**

தன்னுடைய உயிருக்குயிரான மனைவியின் சாவைத் தடுக்கும் சக்தி தனக்கில்லை என்பதைப் புரிந்து கொண்டவன், 'விரக்தியைத் தத்துவமாக்குகிறான்!

**வந்தது தெரியும், போவது எங்கே**
**வாசல் நமக்கே தெரியாது**
**வந்தவரெல்லாம் தங்கி விட்டால் - இந்த**
**மண்ணில் நமக்கே இடமேது?**

வந்தது நமக்குத் தெரியும் என்கிறார். ஆமாம், எமது அன்னை எம்மை இந்த உலகில் தள்ளிய வரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குத் தெரிந்த ஒன்றுதானே! ஆனால் எப்போது போகப் போகிறோம்? எங்கே போகப் போகிறோம்? தெரிந்தவர் யார்?

இப்படி ஒரு சின்னத் தத்துவத்தை உலகின் கடைசி மனிதனுக்கும் புரியக்கூடிய வகையில் எடுத்துக் காட்டுகிறார் இந்த ஒப்புயர்வற்ற கவிஞர்.

இழப்பால் தள்ளாடும் மனங்களுக்கு, காலத்தால் மறையாக் கவிஞனின் ஆறுதல் என்ன? எம்மை நோக்கி ஒரு கேள்விக் கணையைத் தொடுக்கிறார். இந்தப் பூமியில் பிறந்தவரெல்லாம் மரணமின்றி நிலையாக வாழ்ந்து விட்டால் புதிய பிறப்புகளுக்கு இடமேது என்கிறார் கவிஞர்.

**வாழ்க்கை என்பது வியாபாரம் - வரும்**
**ஜனனம் என்பது வரவாகும் - அதில்**
**மரணம் என்பது செலவாகும்**
**போனால் போகட்டும் போடா!**

சொந்தத்தை இழந்து தவிக்கும் மனங்களுக்கு, வாழ்க்கையை வியாபாரம் என்றெண்ணி ஆறுதல் அடையுங்கள் என்கிறார் கவியரசர். எப்படி என்கிறீர்களா? பிறப்பை வரவு என்று எடுத்துக் கொள்ளுங்கள்; அப்படியானால் செலவு இருக்கத்தானே வேண்டும்? எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத மரணத்தைச் செலவு என்றெண்ணிக் கொள்ளுங்கள். கணக்கு முடிந்து விடுகிறது. மிகவும் எளிமையாக எடுத்துரைத்து விடுகிறார். ஆனால் எம்மால் இந்தத் தத்துவத்தை எண்ணுவதன் மூலம் ஆறுதலடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகிறதா? இல்லை. வரவின்போது மகிழும் நாம், செலவின்போது அழத்தான் செய்வோம். இது இயற்கை நியதி. ஆனால் கவிஞரின் கூற்று, சில நேரங்களிலே விளக்கமற்ற செய்கைகளை விளக்குகிறது.

அடுத்துப் பார்ப்போம்!

**இரவல் தந்தவன் கேட்கின்றான் - அதை**
**இல்லை என்றால் அவன் விடுவானா?**
**உறவைச் சொல்லி அழுவதினாலே**
**உயிரை மீண்டும் தருவானா?**
**கூக்குரலாலே கிடைக்காது -**
**இது கோர்ட்டுக்குப் போனால் ஜெயிக்காது - அந்தக்**
**கோட்டையில் நுழைந்தால் திரும்பாது**
**போனால் போகட்டும் போடா!**

நம் வாழ்க்கை இறைவனிடம் வாங்கிய இரவல். அவன் அதைத் திருப்பிக் கேட்கும்போது நாம் கொடுக்காமல் இருந்துவிட முடியுமா? அப்படிச் சொல்லி விட்டால் கூட அவன் விட்டு விடுவானா? மறைந்தவருக்கும் எமக்கும் உள்ள நெருக்கமான, உருக்கமான, உன்னதமான உறவைச் சுட்டிக்காட்டி, கூக்குரல் போட்டு அழுது புரள்வதினாலே, மாண்டு போன அந்த உயிரை என்ன எமக்கு மீண்டும் தந்து விடுவானா? மனமே துயரை மறந்து ஆறுதல் அடைந்துவிடு என்கிறார் கவிஞர்.

அடுத்தென்ன?

**எலும்புக்கும் சதைக்கும் மருத்துவம் கண்டேன்**
**இதற்கொரு மருந்தைக் கண்டேனா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் அவளைத் தன்னந் தனியே
எரியும் நெருப்பில் விடுவேனா?
நமக்கும் மேலே ஒருவனடா - அவன்
நாலும் தெரிந்த தலைவனடா - தினம்
நாடகம் ஆடும் கலைஞனடா!
போனால் போகட்டும் போடா!

இந்தப் பாடல் ஒலிக்கும் காட்சியில் வரும் அந்தக் கணவன் ஒரு டாக்டர். தனது மனைவியின் மரணத்தைத் தடுக்க வகை சொல்லாக் கல்வி என்ன கல்வி என்று விரக்தியின் விளிம்பில் அங்கலாய்ப்பது போல் பாடலைப் புனைந்திருக்கிறார் கவிஞர். அப்படி அந்தக் கல்வியின் மூலம் வகையறிந்திருந்தால் என் அன்பு மனைவி இப்படித் தீயினுள் கருகும் நிலையை நான் கண்ணுற வேண்டி வந்திருக்காதே என்று வெம்புகிறான். என்ன சொல்ல விழைகிறார் கவிஞர்? இறைவனின் இந்த உயிரழிப்புத் தத்துவத்தைப் புகட்ட எந்தக் கல்வியுமே கிடையாது. துயர் எவருக்குமே பொதுவானது. மரணம் வரும்போது இருப்பவன், இல்லாதவன், கற்றவன், கல்லாதவன் என்று வேறுபாடு பாராட்டுவது கிடையாது.

முடிவாக நமக்கு ஓர் அருமையான, ஓர் எளிமையான தத்துவத்தைக் கூறுகிறார் அமரர் கண்ணதாசன். 'என்னிடம் பணம் இருக்கிறது. என்னிடம் அறிவு இருக்கிறது. என்னிடம் அழகு இருக்கிறது. நான் உயர்ந்தவன். அவன் தாழ்ந்தவன் என்றெல்லாம் பிதற்றிக்கொண்டு பொய்மையில் உழலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரைப் பார்த்துக் கவிஞர் சிரிக்கிறார். நீங்கள் எல்லோருமே இறைவன் எனும் இயக்குனர் இயக்கும் நாடகத்தில் ஒரு பாத்திரமே. அவன்தான் எல்லாம் தெரிந்தவன். நமது வருகையும் மறைவும் அவன் கையிலேயே இருக்கிறது.

நண்பர்களே! கவிஞர் கண்ணதாசன் எனும் அந்த உயரிய கலைஞன் எனக்கு வாழ்க்கையில் விட்டுச் சென்ற அரிய பொக்கிஷங்கள், அவரது படைப்புகளே! அது உள்ளோர், இல்லாதோர் எனும் பாகுபாடின்றி அனைவரின் ஆளுகைக்கும் உட்பட்டது. அதை ரசிப்பதற்கு எங்கள் இதயத்தின் மனிதத்துவப் பகுதியைக் கொஞ்சம் திறந்தால் போதும்.

'சுனாமி' எனும் அந்த இயற்கையின் கொடூரத் தாண்டவத்திற்குத் தம்மைப் பலிகொடுத்தவர்கள், அவர்தம் உறவினர்கள் ஆகியோரின் இழப்புகள் ஈடுகட்ட முடியாதவை. ஆனால் புண்பட்ட இதயத்திற்குக் கொஞ்சம் களிம்பு தடவுவது போல மனதைத் தேற்றும் சிலவற்றை நினைவு கூருவோம்.

கடலோடு ஐக்கியமாகிவிட்ட உதிரத்தின் உறவுகளுக்குக் கண்ணீர் அஞ்சலிகள்! உறவுகளை இழந்து ஏதிலிகளாகியவர்களுக்கு உறவுகளாய் நாமுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

தமிழக சட்டசபையில் முதலாவது ஆஸ்தான கவிஞர் எனும் புகழ் பெற்ற கவியரசர் கண்ணதாசன் அவர்களை இதுவரை இந்தப் பகுதியிலே கவிஞராக, கட்டுரையாளராகப் பார்த்திருந்தோம். இந்தப் பகுதியிலே என் உள்ளங்கவர் கவிஞரை ஒரு திரைப்பட வசனகர்த்தாவாகப் பார்ப்போம் என எண்ணினேன்.

கவிதைகளில் எப்படி அழகிய தமிழை ஆராதித்தாரோ, கட்டுரைகளில் எப்படித் தமிழை இறகாக்கி எம்மிதயங்களை வருடிக் கொடுத்தாரோ, திரையிசைப் பாடல்களில் எப்படி அனுபவம் எனும் வாசனையைக் கலந்து தமிழ் எனும் பன்னீரை எம்மீது தெளித்தாரோ, அதே போன்று திரைக்கதை வசனங்களிலும் அவரது ஆழ்ந்த அனுபவத்தின் சாயல் பூசப்பட்ட தமிழைக் காணக்கூடியதாக இருக்கும்.

கிடைக்கக்கூடிய தரவுகளை வைத்துப் பார்க்கும்போது கவிஞர் உரைநடை எழுதிய படங்கள் பதினாறுதான். பாட்டுகள் எழுதுவது அவரது தனித்திறன் என்றாலும் திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதுவதில் தணியாத தாகம் கொண்டார். அந்த ஆசைக் கனவை நனவாக்கவே பல திரைப்படங்களைத் தானே தயாரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படங்களுக்குப் பாட்டெழுதுவதில் ஈட்டிய பொருளையெல்லாம், திரைப்படங்கள் தயாரிப்பதில் இழந்தார் என்றே கூற வேண்டும். ஆனால் அந்த இலட்சிய மனிதன் தன் இலக்கியத் தாகம் தணிக்கும் பொருட்டு பணத்தைப் பெரிதென மதிக்காது கனவை நனவாக்கி மகிழ்ந்தார்.

திரைப்படங்களுக்கு வசனம் எழுதும் முயற்சியில் மாடர்ன் தியேட்டர்ஸில் பணி புரியும்போது, மற்றோரை முன்னேற விடாது தடுக்கும் மனோபாவம் கொண்டவர்களால் இவரது திறமை மறைக்கப்பட்டது. இதைத் தனது வனவாசம் எனும் சுயசரிதை நூலில் அழகாகக் குறிப்பிட்டுள்ளார். அதோடு ''**வசனத் துறையில் எனக்கென ஒரு தனிப்பாணி உண்டு. சமூகக் கதைகளை விடச் சரித்திரக் கதைகளிலேயே அதை நிறைவேற்ற வாய்ப்புகளுண்டு**'' என்று அவர் குறிப்பிடுவதுண்டு.

முதலாவதாக ''**தெனாலிராமன்**'' எனும் திரைப்படத்திலே கவிஞரின் சக உயிரினங்களின் மீது அன்பு கொள்ளும் மனப்பாங்கைப் படம் பிடித்துக் காட்டும் ஒரு காட்சியையும் அதற்கு அவர் எழுதிய உரைநடையையும் பார்ப்போம்.

கோயிலிலே ஆடு ஒன்றைப் பலியாக்குவதற்காக ஒரு கும்பல் முனைகிறது. இதைத் தெனாலிராமன் தடுக்கிறான்.

''*யாரடா* ***அது... தாயின் பூசையைத் தடுப்பது?***'' என்கிறான் அந்தக் கும்பலின் தலைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவன். அதற்குத் தெனாலிராமன், ''**தாயின் பூசை! வாயற்ற உயிரின் வாழ்வை முடிப்பதா தாயின் பூசை? நீங்களெல்லாம் இரக்கமற்ற அரக்கர்களா?**'' என்பான்.

இந்த இடத்தில் கவிஞரின் பாடல் ஒன்றின் சில வரிகளையும் நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

> அரக்கர் குலமெல்லாம் அன்றோடொழியவில்லை
> இரக்கமில்லா வடிவாக இன்னும் இருக்குதய்யா

என்று வரும். இது கருணை மறந்த உள்ளங்களைப் பற்றி அவர் கொண்டிருந்த நிலைப்பாட்டை நன்கு புரிய வைக்கும்.

''**ராஜா தேசிங்கு**'' என்னும் படத்தில் வரும் காட்சி ஒன்றில் புறா ஒன்றை மகபத்கான் அடித்து வீழ்த்துவதாகக் காட்சி வரும். அதை ஆயிஷா பெண்களுக்கேயுரிய கருணையுடன் கையிலெடுத்து,

''**பறந்து வரும் புறா! பிறருக்குத் தீங்குச் செய்யத் தெரியாத குலத்தில் பிறந்த உனக்கா இந்தப் பரிதாபம்! உன்னைத் துடிக்க வைத்த அந்தப் பாவி யார்? இந்த இரக்கமற்ற கொடுமையை எமது மனித குலந்தாம் செய்யும்**'' என்று பேசுவதாக எழுதியிருந்தார்.

அடுத்தொரு படமான ''**சிவகெங்கைச் சீமையிலே**'' மருது பாண்டியரின் அரண்மனையில், ஊமைத்துரை தஞ்சம் அடைந்ததைக் காட்டும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனத்தைக் கவிஞர் அமைத்திருந்தார் அது பின்வருமாறு :

**''கணை துளைத்திருக்கிறது. சிறகு ஒடிந்திருக்கிறது. அனாதைப் புறா, ஆதரவில்லாமல் இங்கே வந்து விழுந்திருக்கிறது.''**

இந்த வசனத்தின் மூலம் ஒரு ஊமைப் புறாவையும், ஊமைத்துரையையும் ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறார் எமது ஒப்பற்ற கவிஞர்.

இங்கே கவிஞர் மற்றைய உயிரினங்களின் மீது தான் கொண்டிருந்த அன்பினை வெளிப்படுத்தும் சில உரைநடைகளையே பார்த்தோம்.

நண்பர்களே! இந்தத் தலைப்பில் நான் உங்களோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய விடயங்கள் எண்ணிக்கையிலடங்காதவை. ஏனெனில் எமது கவியரசர் தன்னிகரற்றவர். கண்ணதாசன் எனும் இந்தத் தமிழ் வனத்திற்குள் நான் என்னைத் தொலைத்த காலங்கள் எத்தனையோ! ஆனால் அங்கே வழி தெரியாமல் திண்டாடவில்லை, பதிலாக இவ்வளவு சீக்கிரம் வெளியேறுவதற்கு வழி கிடைத்து விட்டதே என்று ஆதங்கப்பட்டதுதான் உண்டு.

இந்த ஆக்கங்களை ஒரு பல்சுவைப் பகுதியாக வெளியிடுவதே எனது தாகம். இடையிடையே இது போன்ற வேறு உரைநடைகளையும் எடுத்துப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15

நமது வாழ்க்கையிலே சில சமயங்களில் தாங்கவொண்ணாத் துயரங்களில் அழுந்துகிறோம். நம்மைச் சுற்றியுள்ள சொந்தங்கள் எனும் பந்தங்கள் நாம் எதிர்பார்த்தபடி ஆறுதலாக இல்லாமல், நமது மனத்தின் துயரத்திற்குக் காரணமாக அமைந்து விடுகிறார்கள். நடந்த நிகழ்வுகளை நடக்கவிடாமல் பாதுகாப்பதற்கு நாம் பகீரத முயற்சி செய்திருந்தாலும், கைக்கு மீறிக் காரியங்கள் நடந்து விடுகின்றன. துயரச் சுமையினால் தோய்ந்துபோன உள்ளத்துடன் தவிக்கின்றோம்.

மேலே குறிப்பிட்ட சம்பவம் நம் எல்லோருடைய வாழ்க்கையிலும் ஒரு காலகட்டத்தில் நடந்திருக்கும். இல்லையானால் இனி நடக்கவும் கூடும். அப்படியான ஒரு சம்பவத்திலே ஒரு நண்பன் அருகே அமர்ந்து கொண்டு தன்னுடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை எடுத்துக் கூறி, அது எதனால் நிகழ்ந்தது என்று தனது மனதில் படுகிற விதத்தில் எடுத்துரைத்தானாகில், எமது மனம் எவ்வாறு இலேசாகும் என்று சிறிது எண்ணிப்பாருங்கள்.

இத்தகைய மன அமைதியைத்தான் கவியரசரின் பாடல்களும் கட்டுரைகளும் எனக்குத் தந்திருக்கின்றன. என் உள்ளத்தைத் திறந்து சொல்லப்போனால், 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்னும் அவரது அரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷ நூல்களைப் படிக்கும் வரை, நான் இந்து என்று பெயரளவில்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். ''அர்த்தமுள்ள இந்து மதம்'' என்னை மதவெறியனாக ஆக்கியது என்று சொல்ல வரவில்லை, என்னை மனிதாபிமானமிக்க இந்துவாகப் பரிணமிக்க வைத்தது என்றே சொல்லுவேன். மனிதனுக்கு மதம் ஒரு அணிகலனே தவிர ஆடையில்லை என்பதை உணர்ந்து கொண்டேன்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நெளிவு, சுழிவுகளையும் புரிந்து வைத்துக் கொண்ட நம் கவியரசு அதை அழகாய்த் திரைப்படப் பாடல்களிலும் கட்டுரைகளிலும் வரைந்து நமது மனப் புண்களுக்கு மருந்திட்டார். அவரது அனுபவம் எனும் பட்டறையில் பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொண்டு உருவாக்கப்பட்டதால்தான் கருத்தெனும் ஆயுதம் கூர்மையாக வாசிக்கும் உள்ளங்களில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது.

இங்கே அவரது வாழ்வைத் தொட்ட துயரத்தின் சாயலைக் கொண்டு ஒரு திரைப்படத்தில் அவர் படைத்த பாடலோடு தொடர்புடைய சம்பவம் ஒன்றைப் பார்ப்போம்.

'மீண்ட சொர்க்க'த்தில் ஆரம்பித்துக் கவியரசுக்கும், டைரக்டர் ஸ்ரீதருக்கும் இடையிலான நட்பு இறுதிவரை தொடர்ந்ததென்றே கூறவேண்டும். ''சுமைதாங்கி'' எனும் படத்தைக் கவியரசர் தயாரிக்க, டைரக்டர் ஸ்ரீதர் இயக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் படத்தின் கதாநாயகனாகக் காதல் மன்னன் ஜெமினி கணேசன் நடித்திருந்தார். அதிலே ஒரு காட்சியில், ஜெமினி கணேசன் கடற்கரையோரத்தில் ஒரு பாடல் பாடுவது போன்ற காட்சி, அதற்கான பாடல்,

**மனிதன் என்பவன் தெய்வமாகாலாம்.**

இந்தக் காட்சி படமாக்கப்பட்ட இடம் தான் கவியரசர் முதன்முதலில் சென்னைக்குக் கையில் ஒரு பைசா கூட இல்லாமல் வந்தபோது நின்ற இடமாம். அப்போது அங்கே தூங்கக்கூடாது என்றுகூட அவரை ஒரு போலிஸ்காரரர் விரட்டியிருக்கிறாராம். இந்தப் பாடல் அந்த இடத்திலேதான் படமாக்கப்பட வேண்டும் என்பதில் கவியரசர் மிகுந்த பிடிவாதமாக இருந்தாராம். அது மட்டுமல்ல அந்தக் காட்சி படமாக்கப்படும் நேரத்திலே, ஸ்டூடியோ விளக்குகளை உபயோகிப்பதற்குப் பதிலாக, தனது எட்டு அம்பாஸிடர் கார்களின் விளக்குகளை கதாநாயகன் மேல் விழச்செய்து அந்தக் காட்சியைப் படமாக்கினாராம்.

இதற்குத் தனது கார்களை உபயோகித்தது தனது பெருமையைப் பறை சாற்ற அல்ல, ஒருவன் தனது சொந்தத் திறமையை உபயோகித்து, எட்டுக் கார்கள் வைத்துக் கொள்ளக்கூடிய நிலைக்கு உயரமுடியும் என்ற உண்மையை எடுத்துக் காட்டுவதற்காகவே.

இங்கே நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் கவியரசரின் உள்ளத்தில் காலமகள் ஏற்படுத்திய வடுக்களை அவர் எப்படி அனுபவப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களாகக் கொண்டார் என்பதை எடுத்துக்காட்டவேயாகும்.

கவியரசர் தொட்டது என்னைப் போன்ற சாதாரண ரசிகர்களின் மனத்தை மட்டுமல்ல, கலையுலகச் சிகரங்களின் உச்சியில் வீற்றிருந்தோரின் மனத்தில் அவர் வகித்த இடம் மகத்தானது. இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக, 1984ஆம் ஆண்டளவில் நடிப்புச் செம்மல் கமல், செவாலியே சிவாஜி கணேசனுடன் சேர்ந்தளித்த ஒரு பேட்டியின் போது, பாலும் பழமும் படத்தில் சிவாஜி கணேசன் நடித்த 'போனால் போகட்டும் போடா' எனும் பாடல் காட்சியில் அவர் நடிப்பைப் புகழ்ந்து பாராட்டினார். அதற்கு நடிகர் திலகமோ அந்தப் பாடலின் சிறப்பு தனது நடிப்பினால் அல்ல மறைந்த கவியரசரின் பாடல் வரிகளும், அதன் பொருளுமே என்று கூறி "எமக்கெல்லாம் தத்துவம் சொன்னார் கவிஞர், இப்போ அவரே தத்துவமாகி விட்டார்" என்று கூறி தனது கண்களில் திரண்ட கண்ணீர்த் துளிகளைச் சுண்டி விட்டாராம்.

கவியரசரின் தத்துவம், அதை நன்றாய்ப் பயன்படுத்திய வகை, அவருடைய கருத்துகளின் ஆழம் அளக்க முடியாதவை. அவருக்கும் எழுத்து "க"விற்கும் உள்ள தொடர்பும் நெருக்கமானதே! எப்படி என்கிறீர்களா?

"க"ண்ணதாசன், அவருடைய முதலாவது பாடல் 'கள்வனின் காதலி' எனும் படத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்ற ‘‘க’’லங்காதிரு மனமே! கடைசியாகக் கவிஞர் எழுதிய பாடல் ‘மூன்றாம் பிறை’ எனும் படத்தில் இடம்பெற்ற ‘‘க’’ண்ணே கலைமானே ஆகும்.

இப்படிக் ‘‘க’’வோடு தொடங்கி முடிந்த திரைப்படப் பாடல்களின் நாயகன், ‘‘க’’விதை உலகிலும், ‘‘க’’ட்டுரை உலகிலும் கோலோச்சியவன் ‘‘க’’டைசிவரை என் போன்ற ரசிகர்களின் மனத்தை ஆட்சி செய்வான் என்பது அசைக்கமுடியாத உண்மை.

## 16

எங்கே தொடங்கப் போகிறேன்? எங்கே முடிக்கப் போகிறேன்? என் கண்முன்னே நான் கண்டு வாசித்து அறிந்த கவியரசரைப் பற்றி எழுதுவதற்கான முயற்சியே எனது கைகளில் இல்லை எனும் ஒரு நிலை இருக்கும்போது, எப்படி இந்த வாழ்க்கையை மட்டும் நான் எனது எண்ணப்படிதான் வாழுகிறேன் என்று எண்ணமுடியும்? இதையேதான் கவியரசர் தனது பல படைப்புகளில், பாடல்களில், கட்டுரைகளில் தெளிவாக, அழகாக விளக்கியிருக்கிறார்.

ஒரு மனிதன் அறிவுரை கூறும்போது, ‘‘மது அருந்தாதே’’ என்று கூறுகிறான் என வைத்துக் கொள்ளுங்கள். அவனது சொந்த வாழ்க்கையில் அந்த மனிதன் ஒரு நாளுமே மதுவைத் தீண்டியது கூட இல்லையானால் ‘‘என்ன, இவன் தான் அறியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தை, எம்மை அடைய விடாது தடுக்கிறானே'' என்று சிலர் ஆதங்கப்படுவார்கள் (''மது அருந்துவது இன்பமானது'' என்று நான் கூறுகிறேன் என்று வாசகர்கள் தவறாகப் பொருள் கொள்ளாதீர்கள்). அதே மனிதன் முன்பு நன்றாக மது அருந்திக் களித்தவன் இப்போது தனது பழக்கத்தை மாற்றிக் கொண்டு அறிவுரை கூறுகின்றானானால் ''தான் மட்டும் அனுபவிக்கும் வரை அனுபவித்து விட்டு இப்போது எங்களைத் தடுக்க வந்து விட்டான்'' என்று ஒரு சாரார் விசனப்படலாம்.

ஆனால் எமது கவியரசரோ, ''நான் இப்படி நடந்தேன், இவ்வாறு இருந்தேன்'' என்று தனது தவறான பழக்க வழக்கங்களை ஒளிவு மறைவின்றி நம்மோடு பகிர்ந்து, தன்னையே அதற்கு உதாரணமாய் எடுத்துக் கொண்டு நம்மை நல்வழிப்படுத்த முயற்சி எடுத்துள்ளார். அதனால்தான் அவரது எழுத்து வெற்றியடைந்தது. அர்த்தமுள்ள இந்துமதம் கூட அன்றாட வாழ்க்கை முறைகளுடன், மதத்தின் வழிமுறைகளைப் பிணைத்துக் காட்டியதே தவிர, நம்மால் புரிந்து கொள்ளாதபடி மதத் தத்துவங்களை அள்ளி வீசவில்லை.

இத்தகைய கவியரசரின் வாழ்க்கையிலே அவர் மது, மங்கை என்று தனது வாழ்நாளைக் கழித்தபோது சில கவிதைகள் எழுதியிருந்தார். அப்படியான கவிதைகள் சிலவற்றை இங்கே எடுத்துப் பார்க்க விழைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முன்னால் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் கூற்று ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

''எப்படியெல்லாம் வாழக்கூடாதோ அப்படியெல்லாம் வாழ்ந்திருக்கிறேன். ஆகவே இப்படித்தான் வாழவேண்டும் என்று சொல்லும் யோக்கியதை எனக்குண்டு.''

இனி மேலே குறிப்பிட்டவாறு அவரது கவிதைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

**மதுவை ஓர் கையில் வைத்து**
**மங்கையோர் புறத்தே வைத்தால்**
**எதுவரை உலகம் போகும்**
**எங்கெங்கோ போகும், நானும்**
**அதுவரை போவேன்.**

இந்தக் கவிதையின் கருத்தை உற்று நோக்கினால் கவிஞரின் அன்றைய வாழ்க்கை முறையை நன்றாக எடுத்துக் காட்டுகிறது. சாதாரண மனித மன ஆசை எனும் நதியினில் நீச்சலடித்து விட்டுத்தான் அந்தப் பயணத்தின் சிரமம் பற்றி நமக்கெல்லாம் எடுத்துரைத்திருக்கிறார், நம் கவிஞர்.

இது ஏதோ பெரிய சாதனை என்று நான் சொல்லுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. கவிஞனின் வாயிலிருந்து, அந்தந்தக் காட்சிகளுக்கேற்றவாறு வெற்றிப் பாடல்கள் வந்து விழுவதன் பின்னணி, இவற்றைப் பற்றி அறிந்திருப்பதால் மிகவும் எளிதாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இதே வரிசையில் இன்னுமொரு கவிதையைப் பார்ப்போம்!

காதலை, மதுவை, இன்பக்
காட்சியை வென்றேனென்று
ஓதுவோர் எவரும் இந்த
உலகிற்குத் தேவையில்லை

கவிஞர் தனது கருத்துகளோடு பின்னொரு காலத்தில் தானே முரண்பட்டு நின்றார். அவரே தனது சுயசரிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இதுவும் கவிஞரிடம் நான் ரசித்த உயர்ந்த குணங்களில் ஒன்று. மேலே குறிப்பிட்ட கவிதையின் கருத்தைப் பார்த்தீர்களானால், கவிஞரே யார் உலகிற்குத் தேவையில்லை என்று கூறினாரோ அதே மனிதனாகத் தானே மாறியிருந்திருக்கிறார்.

மனத்தினில் ஒரு காலத்தில் ஒரு செயலைப்பற்றி ஒரு கருத்தைக் கொண்டிருந்தோமேயானால், பின்னால் நமது எண்ணம் பிழையானது என்றறிந்து அதை ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் நம்மில் எல்லோருக்கும் வந்துவிடாது. அதை அடைந்து விட்டால் நாம் மனிதத்துவம் எனும் பரீட்சையில் தேறி விட்டோம் என்றே பொருள். அந்த வரிசையில் கவித்தலைவர் தன்னுடைய மனிதத்துவத்தை நிலைநாட்டி விட்டார் என்றே கூறவேண்டும்.

இங்கே நாம் எடுத்துப் பார்த்தது கவிஞரின் மற்றொரு பக்கம், அதுதான் அவரது ஆன்மீகக் கதவைத் திறந்த சாவியாகும். கண்ணதாசனின் பக்கங்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டும்போது நாம் இந்தப் பக்கங்களையும் பார்க்கத்தான் வேண்டும், அதைத்தான் அவரும் விரும்பினார். ஏனென்றால் அவர் வாழ்க்கையில் மற்றவர்களிடம் அர்த்தத்தைத் தேடவில்லை, தன்னிடமே தேடினார்.

## 17

கண்ணதாசனைப் பற்றி நான் அள்ளி அள்ளி இறைத்துக் கொண்டு இருக்க என் மனக்கேணியில் மேலும் மேலும் ஊறிக்கொண்டேயிருக்கிறது. இம்முறை அவரைப்பற்றிய ஆக்கத்தை வித்தியாசமான முறையில் பார்ப்போம். கற்பனைக் கதாபாத்திரத்தை உருவாக்கி அவரது சில பாடல்களையும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இணைத்துப் பார்ப்போம் என்றொரு ஆசை. எங்கே போவாமா கனவுலகம்?

இங்கே நமது கதாபாத்திரமாக ராம் என்றொரு 24 வயது இளைஞனைக் கற்பனை பண்ணிக் கொள்ளுங்கள். வசதியான குடும்பத்தில் பிறந்த அவன் பெற்றோருக்கு ஒரே பிள்ளை.

கேட்டதெல்லாம் கிடைத்துத் தனது வாழ்க்கையில் எந்தப் பொறுப்பையும் உணராத ராம் மதுவிலும் மங்கையிலும் தனது நேரத்தைக் கழிக்கிறான். என்ன ராம் பாடுகின்றானா?

**ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு**
**ஒரு கோலமயில் என் துணையிருப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசமாய் தனது வாழ்க்கையைக் கழித்த ராம் தற்செயலாக எளிமையே உருவான பாந்தமான அழகுடைய உமாவைப் பார்த்து விடுகிறான். கேட்க வேண்டுமா?

காலங்களில் அவள் வசந்தம்
'கலைகளிலே அவள் ஓவியம்

கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுக்கும் அவன் தந்தை உமாவை மட்டும் வாங்கித் தரமாட்டாரா என்ன? பின்னென்ன பெண் பார்க்கும் படலம். பணத்திற்கு முன் உமாவின் ஏழைத் தந்தை மனத்தையா பார்க்கப் போகிறார்? பெண்களுக்கே உரிய அந்த மௌனம் (இங்கே ஏழ்மையால் பிறந்தது) என்ற சம்மதத்துடன் உமா மிஸஸ். ராம் ஆகிறாள். என்ன ஊமை ராகமோ?

யாருக்கு யாரென எழுதியவன் - என்னை
அவனுக்குத் தானென எழுதி விட்டான்

குடிகாரக் கணவன் வாழ்க்கையில் கண்டிப்பில்லாமையால் தான் இப்படியோ என உமா யாரைக் கேட்கிறாள்?

கலைமகள் கைப்பொருளே? - உன்னைக்
கவனிக்க ஆளில்லையோ

விஸ்கி போத்தலை நடுவீட்டில் உடைக்கிறாள், தானா? மதுவா? கெடுவைக்கிறாள். எங்கே ஓடுகிறான் ராம்? ஓ! பாடுகிறானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைமுதல் குடிக்க மாட்டேன்
சத்தியமடி தங்கம்

சபதம் போட்டு விட்டான்.

இனிமையான தாம்பத்தியம் தொடங்குகிறது. தந்தையின் வியாபாரத்தைப் பொறுப்பேற்கிறான் ராம்.

தேனிருக்கும் மலரினிலே
நீ இருக்கச் சம்மதமா?
பாலிருக்கும் கனிகளிலே
பழகிவரச் சம்மதமா?

சந்தோஷமான இல்லறத்தின் பயனாக இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையாகிறான் ராம். கண்ணின் மணிபோல பிள்ளைகளை வளர்த்து வருகிறார்கள் ராமும் உமாவும்.

நீரோடும் வைகையிலே
நின்றாடும் மீனே!

காலங்கள் உருண்டோடி பிள்ளைகள் பெரியவர்களாகின்றனர். எதிர்பாராதவிதமாக அவனது வியாபாரம் கவிழ்ந்து விடுகிறது. தந்தையுடன் கருத்து வேறுபட்டு பிள்ளைகள் பிரிகின்றனர்.

யாரை நம்பி நான் பிறந்தேன்?
போங்கடா போங்க

கணவனும் மனைவியும் தனிமையில் தத்தளித்து கொடுமையான வறுமையில் வாடி, நோய்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகிய ராம் இந்த உலகை விட்டு மறைகின்றான். என்ன அசரீரியா?

**வீடுவரை உறவு**
**வீதிவரை மனைவி**
**காடுவரை பிள்ளை**
**கடைசி வரை யாரோ?**

நண்பர்களே இது கவிஞரின் முத்துகளைக் கோர்த்து ஒரு சிறிய மாலையாக்கும் முயற்சி. ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் ஒவ்வொரு பாடல் என ஒரு வாழ்க்கை தொடங்கியது முதல் முடியும் வரை அவர் தொடுத்த பாடல்கள் கூட வரும்.

இந்தப் பகுதியை அவருடைய ஒரு கவிதையின் சிறு பகுதியுடன் இதனை நிறைவு செய்கிறேன்.

**இமயமுடி மீதேறிக் காஷ்மீரில் இறங்குவேன்**
**இயற்கையை ரசித்திருப்பேன்**
**இளகியதோர் காலையில் புதுடில்லி ஓடுவேன்**
**இந்தியில் பேசி மகிழ்வேன்.**

மிகவும் எளிமையாக நான்கே நான்கு வரிகளில் இந்தியாவின் பரப்பளவையும் அதன் பெருமையையும் உள்ளடக்கி விட்டார். இதில் சிறப்பான அம்சம் என்னவெனில் இது மிகவும் எளிய தமிழில் அனைவருக்கும் புரியக்கூடிய வகையில் அமைந்திருப்பதுதான்.

ரசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

கவிதை ஒன்றைத் தாளில் வடிக்கும் போது அங்கே உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. அந்த உணர்ச்சி மனதில் நிலைகொள்ளுவது ஒரேயொரு கணம் என்று கூடச் சொல்லலாம். ஆனால் அந்த ஒரு கணத்தில் பிறக்கும் அந்தக் கவிக்குழந்தை அந்தக் கவிஞனின் மனநிலையை அவன் பயணித்த அந்தப் பயணத்தின் தூரத்தை அளந்து விடுகிறது.

முதலாவதாக நான் பார்க்கவிழைவது ''நான் மனிதரைப் பாடமாட்டேன்'' என்ற அவரது கவிதையின் சில பகுதிகள்.

மானிடரைப் பாடிஅவர்
மாறியதும் ஏசுவதென்
வாடிக்கை யான பதிகம்
மலையளவு தூக்கிஉடன்
வலிக்கும் வரை தாக்குவதில்
மனிதரில் நான் தெய்வ மிருகம்

கவிஞர் கண்ணதாசன் தன்னைத்தானே கேள்விக்கணைகளால் துளைத்து அதன்மூலம் வாழ்க்கையின் ஒவ்வொரு திருப்பத்திற்கும் காரணம் தேடி அலைந்தவர். எதையும் உண்மை எனும் தராசில் வைத்து அளந்து பார்த்தார். தன் பக்கம் எடை குறைந்திருந்தாலும் அதை வார்த்தைகளில் வடிக்கத் தவறவில்லை கவியரசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் பக்க கவிதைப் பகுதியைப் பாருங்கள். தலையங்கமே ஒரு கதை சொல்லுகிறது. ஏன் தான் மனிதரைப் பாடமாட்டேன் என்கிறார். அப்படியானால் என்ன அவர் மனிதரைப் பாடவேயில்லை என்று அர்த்தமா? இல்லை. பாடிய மனிதர்கள் பின்பு அவர் மனதில் மகிமையை இழக்கும் சந்தர்ப்பத்தில் விரக்தியின் உச்சிக்குத் தள்ளப்பட்டு அங்கே தன் உள்ளத்தின் ஓலத்தை வெளிப்படுத்துகிறார்.

என்ன அழகாகத் தனது மனதின் உணர்ச்சிகளை வார்த்தை மொழியின் துணை கொண்டு வடிக்கிறார்.

தான் மானிடரைப் பாடுகிறாராம். ஆனால், பாடிய மானிடர் மாறிவிடும் போது ஏசுகிறாராம். ஆனால், இதிலிருந்து தான் மாறுவதில்லையாம். ஏனெனில், இதுதான் தனது வழக்கமாம். புகழும் போது அவர்களை மலையளவு உயரத்தில் தூக்கிக் கொண்டாடிப் பின்னர், வலிக்கும்படி தொப்பெனத் தரையில் போடும் தனது பாங்கை இம்மியளவும் மறைக்காது, தனது வார்த்தை ஜாலங்களில் வடித்திருக்கிறார் கவியரசர். கவிஞரின் தமிழ் அங்கு வலிக்கும்படி விழுவோருக்குக் கூட ஒத்தடம் கொடுக்கிறது.

கவியரசர் கண்ணதாசன் தம் மனத்தினுள் தம்மைக் கண்டு கொள்ள விழைந்த போதெல்லாம் அவர் வடித்த கவிதைகள் உண்மையின் விளை நிலமாகத்தானிருந்தன. அந்த உண்மை எனும் வேப்பங்காயை தமிழ் எனும் தேன் தடவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்கனியாக்கினார். இந்த இதழில் அவரது கவிதைகளின் சில பகுதிகளைப் பார்ப்பதன் மூலம் அவர் எவ்வாறு தன்னைப் பகுத்தார் எனப் பார்ப்போம்.

இந்தக் கவிதையின் மற்றொரு பகுதியைப் பார்ப்போம்.

**நானிடறி வீழ்ந்த இடம்**
**நாலா யிரமதிலும்**
**நான்போட்ட முட்கள் பதியும்**
**நடைபாதை வணிகனென**
**நான்கூறி விற்ற பொருள்**
**நல்லபொருள் இல்லை அதிகம்**

கவிஞரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தவர்கள் அவர் வாழ்க்கையில் பட்ட பல துன்பங்களை அறிவர். எதையும் சரியாகச் சீர்தூக்கிப் பார்க்காமல் தனது மனம் சரியெனக் கூறியதை அப்படியே அப்பட்டமாக எடுத்துரைப்பவர் கவிஞர். இவரின் இந்தக் குணம் இவருக்குப் பல நண்பர்களையும் உருவாக்கியது, பல எதிரிகளையும் உருவாக்கியது.

அவரது கவிதை வரிகளைப் பாருங்கள்!

தான் நடந்த வாழ்க்கைப் பாதையில் இடறி விழுந்த இடம் நாலாயிரம் என்கிறார். அதாவது இடறி விழுவது என்றால் தன் காலே தட்டி விழுவதாகும், அதாவது தனது விழுகைக்குக் காரணம் தான்தான் என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல வடுக்கள் பதியும் அளவிற்கு விழுந்திருக்கிறார் என்று பொருள்.

தனது வாழ்க்கைப் பாதையில் தான் ஒரு நடைபாதை வியாபாரி போல் விற்றதில் அதிகம் நல்லவை இல்லை என்கிறார்.

கவிஞர் இங்கே என்ன சொல்ல முற்படுகிறார் என்றால், தான் நடந்து வந்த வாழ்க்கைப் பாதையில் தானடைந்த சோதனைகள் அதிகமானவை; தன்னாலே தனக்கு ஏற்படுத்தப்பட்டவை, அதனை அனுபவம் என்று தான் விற்கும்போது ஏனோ நல்ல சந்தர்ப்பங்கள் அதிகம் இல்லை என்று வருதப்படுகிறார்.

நண்பர்களே, கவிஞருடைய நல்ல கவிதையின் உதாரணமாக இரு பகுதிகளை எடுத்து அவர் எவ்வாறு தன்னை நிறுத்துப் பார்த்தார் என்று பார்த்தோம். தன் தவறுகளைக்கூட தமிழ் எனும் தேன் தடவி சுட்டிக்காட்டி எமைச் சிந்திக்க வைக்கிறார் கவிஞர்.

## 19

கவியரசரின் கவித்திறனை அவரது கவிதையின் சில பகுதிகளைப் பகுத்துப் பார்த்தோம். சக்திதாசன் இம்முறை எமக்கு என்ன வழங்கப் போகிறான் என்று எண்ணுகிறீர்களா?

கண்ணதாசன் ஒரு கடல். அதிலே நான் ஒரு ஓரத்திலிருந்து கை வாளி கொண்டுதான் அள்ளுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது படைப்புகள் அள்ள அள்ள ஊறும் ஒரு தமிழ்க்கேணி.

கவிஞர் மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடியவர். அதனால் தான் மிகவும் வேதனையான சூழல்களில் கூட அவரிடமிருந்து அமுதம் போலத் தமிழ்ப் பாடல்கள் பொங்கி வந்திருக்கின்றன. அதைக் கேட்கும் ரசிகர்கள் அவர் நீந்திய அந்தச் சோக நதியில் தாமும் நீந்துவது போன்ற உணர்வையடைகிறார்கள் இங்கே இப்போது நாம் பார்க்கப் போவது எமது கவியரசரின் வாழ்வில் நடந்ததாகக் கூறப்படும் சில சம்பவங்களும் அதனால் பிறந்தவையும்.

ஒரேயொரு சம்பவத்தை நினைவு கூருங்கள் நண்பர்களே, கவியரசர் பிறந்தது சிறுகூடல்பட்டியில், ஆனால் இந்த உலகை விட்டு மறைந்ததுவோ எத்தனையோ ஆயிரம் மைல்களுக்குப்பால் உள்ள சிக்காகோ நகரில்.

''**நெஞ்சில் ஓர் ஆலயம்**'' எனும் படத்திற்காகக் கவிஞர் எழுதிய ''**நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்**'' எனும் பாடலை நினைந்து கொள்ளுங்கள்! அதில் ஒரு வாசகம்,

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்?
இதுதான் பாதை இதுதான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது

என்ன? தனது வாழ்வை மனதில் கொண்டுதான் இந்தப் பாடலை எழுதினாரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் பாடல்கள் எத்தனை வருடங்களானாலும் மனதை விட்டகலா மந்திரம். ஏனென்றால் வாழ்க்கையின் உண்மை நிலைகளைப் புரியும் தமிழில் புனைவதுதான்.

தமிழ்த்திரையுலக இயக்குனர்களில் ஏ.பி. நாகராஜன் மிகவும் பிரசித்தி பெற்றவர். கவிஞருக்கும், இவருக்குமிடையில் அரசியல் கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பத்திரிகைகளில் அறிக்கைப் போர் நடந்தது. பின்பு இதை வெறுத்து இருவருமே ஒன்று சேர்ந்தார்கள். இவர்களின் சேர்க்கையின் விளைவு அரிய பல படங்களும் அவற்றில் இசைத்த பாடல்களும்.

அந்தத் திரைப்படங்களில் ஒன்றுதான் ''திருவிளையாடல்.'' அதிலே ''**ஒருநாள் போதுமா**'' ''**இசைத்தமிழ் நீ செய்த அருஞ்சாதனை**'', ''**பாட்டும் நானே**'' என்ற மூன்று பாடல்களையும் தந்த கவியரசரின் ஆற்றலை விவரிக்க வார்த்தையேது? ஒரு திரைக்கதைச் சம்பவத்தைப் பின்னணியாக வைத்து மூன்று பாடல்களைத் தரும் திறன் நிகரற்றது.

அது மட்டுமா? ''**பாட்டும் நானே**'' எனும் பாடல் மனிதனை நோக்கி இறைவன் பாடுவதாக அமைந்தது. இத்தகைய ஒரு பாடலைப் புனையும் ஆற்றல் கவியரசரிடமே மிளிர்ந்தது.

இந்தப் பாட்டின் உருவாக்கம் மிகவும் சுவாரஸ்யமானது. இந்தப் படத்தின் இசையமைப்பாளர் கே.வி. மகாதேவன். அனைவரும் ஒரு அறையில் உட்கார்ந்திருக்கும் போது, பாடல் வரிகளின் ஆரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காது கவியரசர் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கே.வி. மகாதேவன் நகைச்சுவை ததும்ப ''என்ன இன்னைக்குள்ளே பாட்டு முடிஞ்சிடுமா?'' என்று கவிஞரைப் பார்த்துக் கேட்க, கவிஞரின் வாயில் இருந்து உதித்தது.

ஒரு நாள் போதுமா? இன்றொரு நாள் போதுமா?
நான் பாட இன்றொருநாள் போதுமா?
நாதமா? கீதமா? அதை நான் பாட
இன்றொருநாள் போதுமா?

இங்கே, மற்றொரு சம்பவம் பார்ப்போம். ''**நான்**'' என்றொரு திரைப்படம். அதற்குப் பாடலாசிரியர் நமது கவிஞர். பாடல் பதிவு செய்யப்படும் அறையில் அனைவரும் அமர்ந்திருக்கிறார்கள். மிகவும் சிறிய அறையில் முண்டியடித்துக் கொண்டு இருக்கிறார்கள். பாடலுக்கான காட்சி விவரிக்கப்படுகிறது. கவிஞரின் தமிழருவியிலிருந்து தெறிக்கிறது தமிழ்த்துளி.

போதுமோ இந்த இடம்?

ஒரு தமிழ்க்கவிக்கு, சந்தர்ப்பம் கொடுக்கும் சாவிகளைக் கொண்டு புதிய கதவுகளைத் திறக்கும் ஆற்றலுண்டு என்பதற்கு இதைத்தவிர வேறென்ன ஆதாரம் வேண்டும்?

கண்ணதாசன் எனும் அந்தத் தேன்கூட்டிலிருந்து பலவந்தமாகத்தான் இந்தத் தேனீ வெளியேறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

கண்ணதாசனுடைய படைப்புகளில் முன்னணியில் இருப்பது அவரது ‘‘அர்த்தமுள்ள இந்துமதம்’’ எனும் தொகுப்பாகும். சமயத்தைப் பற்றி எத்தனையோ நூல்கள் எத்தனையோ பெரியவர்களினால் படைக்கப்பட்டு இருக்கின்றன. அர்த்தமுள்ள இந்து மதத்தின் தனித்தன்மை என்ன? அவை இந்த அளவிற்குப் பிரபலமானதற்குக் காரணம் என்ன என்றொரு கேள்வி நெஞ்சங்களில் எழுவது இயற்கையே. அர்த்தமுள்ள இந்துமதம் எனும் பெயர் சில சமயங்களில் தவறான அர்த்தத்தைக் கொடுத்து விடுகிறதோ என்று கூட நான் எண்ணுவதுண்டு. ஏனெனில், அது வாழ்க்கை முறை பற்றிய புத்தகம்.

மிகவும் எளிமையாக, சாதாரண மனிதனுக்கும் புரியக்கூடிய தமிழில் தெள்ளத் தெளிவாக, விளக்கமற்ற நிகழ்வுகளுக்கு தன் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அனுபவ உதாரணங்களைக் கொண்டு விளக்கம் அளித்திருப்பதே இந்தப் படைப்புகளின் தனிச் சிறப்பு.

கவிஞர் கண்ணதாசன் தன் வாழ்க்கையில் சகலவிதமான சூழல்களையும் அனுபவித்து வெளிவந்தவர். சாதாரண மனிதனுடைய ஆசாபாசங்கள், அங்கலாய்ப்புகள், எதிர்பார்ப்புகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றங்கள் எனச் சகலவிதமான உணர்ச்சிகளுக்கு உள்ளும் உட்படுத்திக் கொண்டவர். வாழ்க்கையில் எல்லோருமே இந்த உணர்ச்சிகளை ஏதாவது ஒரு கட்டத்தில் அனுபவித்திருப்பார்கள்தானே, அப்புறம் அவர்களைவிட கவிஞர் கண்ணதாசன் எந்த வகையில் வேறுபட்டவர் என நீங்கள் எண்ணக்கூடும். தான் சென்று வந்த உணர்ச்சிப் பயணத்தின் உண்மையை எல்லோருடனும் பகிர்ந்துகொள்ளும் வீரம் படைத்தவர் என்பதுவே அவரின் தனித்தன்மைக்குக் காரணம்.

நான் அடிக்கடி கூறுவதுண்டு, ஓர் உண்மையான கவிஞன் வாழுவது ஒரு கணம், அந்த ஒரு கண உணர்ச்சியின் வெளிப்பாடே பல சமயங்களில் உன்னதமான கவியாகி விடுகிறது. தமிழ் என்பது ஒரு அழகிய மொழி. அதை உபயோகிப்பவர்கள் அதற்கு என்ன வடிவம் கொடுக்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் அதை ரசிப்பவர்களின் மகிழ்வு இருக்கப் போகிறது.

அதேபோல பல சமயங்களில் வாழ்வின் நிகழ்வுகள் எம்மை ஆனந்தம் எனும் மலையுச்சியிலிருந்து விரக்தி எனும் பள்ளத்தாக்கிற்குத் தள்ளிவிடுகிறது, அதிலிருந்து மீண்டு மேலேறி வருவதற்கு உபயோகப்படும் ஏணி போன்றதே கவிஞருடைய ''அர்த்தமுள்ள இந்துமதம்.''

அர்த்தமுள்ள இந்துமதம் தொகுப்பின் ஒவ்வொரு புத்தகத்தையும் படிக்கும் போது நான் இந்து என்று என் மனதில் கொண்டிருந்த அந்த நினைப்பு புது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களை எடுக்கத் தொடங்கியது. கண்ணதாசன் அங்கே செய்ய முயற்சித்திருப்பது, மனத்தின் ஆன்மீக ராகங்களை மீட்ட, உன்னதமான மனித உணர்வுகளை மேலோங்கச் செய்ததுவேயாகும்.

"காலக்கணிதம்" எனும் கவிதையொன்றிலே கவியரசர் குறிப்பிடுகிறார். "**இகழ்ந்தால் என்மனம் புல்லரிக்காது, புகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது**" என்று. அதுமட்டுமல்ல இந்த உலகில் பல செயல்கள் மாறிக் கொண்டேயிருக்கின்றன. அதனால் நாம் கொண்ட கருத்து பிழையென்று உணர்ந்த மாத்திரத்தில் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்.

**மாறாதிருக்க யான் வனவிலங்கல்ல!**
**மாற்றம் எனது மானிடத் தத்துவம்!**
**மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்.**

அடுத்த பாகத்தில் கவியரசரின் அர்த்தமுள்ள இந்து மதத்தின் கூற்றுகள் சிலவற்றையும், அதற்கு வாழ்க்கை முறையோடு கைகோர்த்துச் செல்லும் சில உதாரணங்களையும் எடுத்துப் பார்க்கவுள்ளேன். நீங்களும் கூட வருவீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

கண்ணதாசனின் எழுத்துகளில், அனுபவ ஆராதனைகளில் முன்னிற்பது "அர்த்தமுள்ள இந்துமதம்." இது முற்றுமுழுதாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று. சமயத்தை, மதத்தை மனிதனின் நாளந்த வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களோடு சம்பந்தப்படுத்தி விளக்குவதனால், சாதாரண மனிதனுக்கும் அதன் அர்த்தம் விளங்கக் கூடிய வகையில் சமயத்தை இலகுவாக்கி, மதத்தை மனத்தில் பதிய வைத்தார்.

இந்த வாரம் அர்த்தமுள்ள இந்து மதத்திலிருந்து சில பகுதிகளைப் பார்க்க விழைகிறேன். கண்ணதாசன் என்றொரு மனிதன் தன் இதயத்தின் ரணங்களிலிருந்து வடித்த ரத்தத்திலிருந்து எடுத்த சோக பானம் கொடுக்கும் சுவையைக் கொஞ்சம் பார்ப்போம்.

வாழ்க்கை நிலையாமையைப் பட்டினத்தார் பாடல் கொண்டு நன்கு விளக்குகிறார் கண்ணதாசன். பட்டினத்தாரின்,

> விட்டுவிடப் போகுதுயிர்; விட்ட வுடனே உடலைச்
> சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்

எனும் பாடலை மேற்கோள் காட்டி வாழ்க்கையின் தத்துவத்தை அழகுற விளக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் எமது உயிரை இறைவன் கடனாகக் கொடுத்தார் என்கிறார். அந்தக் கடவுளின் காலம் முடியும் போது அதை அறவிட வரும் அமீனாவாக எமனைக் குறிப்பிடுகிறார். இதிலிருந்து அவர் எமக்குக் கூற விழைவது என்னவென்றால், இந்த உயிரே உனக்குச் சொந்தமானது இல்லை, பின் உனது எனது என ஏன் அடித்துக் கொள்கிறாய் என்பதுவே.

என்ன வாழ்க்கை? நிலையாமை என்று சொல்லிச் சொல்லி ஒரே போரடிக்கும் தத்துவத்தை அவர் சொல்லவில்லை, இந்து சமயத்தில் அடிக்கடி வாழ்க்கையின் நிலையாமை பற்றிக் குறிப்பிடப்படுவதின் காரணத்தை அழகாகப் பின்வருமாறு கூறுகிறார் :

''யாக்கை நிலையாமையை இந்து சமயத் தத்துவ ஞானிகள் அடிக்கடி கூறி வந்திருப்பது மனிதனை விரக்தி அடையச் செய்வதற்கு அல்ல. வாழ்க்கையில் ஒரு தைரியத்தை உண்டாக்குவதற்கே.''

மிக அழகாக வாழ்க்கையின் நடைமுறையோடு ஒத்துப்போகும் கருத்தைக் கூறுவதன் மூலம், தொடர்ந்து வரும் விரக்தி எனும் அந்த வீணான உணர்ச்சியிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ள ஒரு மார்க்கம் சொல்லுகிறார் கண்ணதாசன்.

மேலும் அவர் தத்துவப் பாடலுக்கு வாழ்க்கையோடு ஒத்துப் போகும் கருத்தைக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
25 SEP 2010

காயமே இது பொய்யடா
காற்றடித்த வெறும் பையடா

என்று பட்டினத்தார் பாடலைக் கூறி அதைப் பின்வருமாறு நியாயப்படுத்துகிறார்.

"இது இறைவன் படைத்த உடலை அவமானப்படுத்தப் பாடப்படவில்லை. நிலைக்காத, பொய்யான இந்த உடலைக் காப்பாற்றப் பொய் சொல்லாதே, திருடாதே, பிறரை ஏமாற்றாதே என்று எச்சரிப்பதற்காகவே பாடப்பட்டது" என்று கூறி இந்தத் தத்துவங்கள் தெரிந்திருப்பதால் நாமடையும் பயனை அழகாய் விவரிக்கிறார் கவிஞர்.

கண்ணதாசனைப் பொறுத்த வரையில் மரணத்தின் மகிமையை மனிதன் அறிந்து கொள்வது மிகவும் முக்கியம் என்கிறார். அதை எண்ணமே அறிந்து கொள்வதனால் பேராசை அடைவது தவிர்க்கப்பட்டு மனிதன் சீரிய நெறிக்குள்ளாகி மனதில் அமைதி காண விழைகிறான். இதுவே இந்துமத ஞானிகளின் நோக்கம் என்கிறார் எம் கவிஞர்.

இந்த அறிவு முதிர்ச்சியினால், சாவதற்கு முன் வாழ்ந்து பார்க்க வேண்டும் எனும் ஆவல் கொண்டு மனத்தில் இலட்சியம் வகுத்து முன்னேற மனிதன் துடிக்கிறான் என்பது கவிஞரது வாதம்.

முதற் சங்கு அமுதூட்டும், மொய்குழலார்
நடுச் சங்கு நல் விலங்கு பூட்டு - கடைச் சங்கம்
ஆம்போ ததூதும், அம்மட்டோ? இம்மட்டோ?
நாம்பூமி வாழ்ந்த நலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 SEP 2010

எனும் பட்டினத்தார் பாடலை எடுத்து வாழ்வை எளிய நடையில் விளக்க முற்படுகிறார் கவிஞர். வாழ்க்கை மூன்று சங்குகளால் வரைவிலக்கணம் அமைக்கப்படுகிறது. சடங்குகளில் சங்கூதப் படுவதைப் பார்த்திருக்கிறீர்கள். எமது வாழ்வின் கதை மூன்று சங்குகளில் அடங்குமாம்.

முதற் சங்கு எதைக் குறிக்கிறது? முதற் சங்கு அமுதூட்டும்! ஆமாம் நாம் பிறந்த போது எமக்குப் பாலூட்டப் பயன்படும் முதற் சங்கு. இது எமது பிறப்பைக் குறிக்கிறது.

இரண்டாவது சங்கு. அது என்ன? ''மொய்குழலார் ஆசை இடைச் சங்கம்.'' ஆமாம் நங்கையர் பால் ஈட்டம் கொண்டு திருமணம் எனும் பந்தத்தினுள் நுழையும் போது, திருமணச் சடங்கில் சங்கு ஊதப்படுகிறது. இது எமது இடை வாழ்க்கையைக் குறிக்கிறதாம்.

அப்போது அடுத்தது கடைச் சங்கம் தானே! ஆமாம் இவ்வுலகத்தை விட்டு நாம் பறக்கும், இறைவன் கொடுத்த கடனை அமீனா வசூலித்த பின்னே, நடக்கும் மரணச் சடங்கில் சங்கு ஊதப்படுகிறது.

என்ன அழகாகப் பட்டினத்தார் பாடலை எடுத்துக் கவியரசர் எளிமையான விளக்கத்தின் மூலம் வாழ்க்கையின் நிலையாமையை விளக்கி எமது வாழ்வின் கதை மூன்று சங்கூதல்களிலே அடங்கி விடுகிறது என்று மதச் சடங்கின் அர்த்தத்தை மனிதனின் அன்றாட வாழ்க்கையுடன் பிணைத்து விடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி இருந்தது இந்த அர்த்தமுள்ள இந்துமதப் பயணம்?

## 22

கண்ணதாசன் காலத்தால் அழியாத ஒரு கவிஞர். கற்பனையை மட்டுமே வைத்துத் தனது கவிதைக் கப்பலை ஓட்டியவர் அல்ல கண்ணதாசன். வாழ்க்கையின் உண்மை நிலையை, மொழியை ரசிப்பவர் அனைவரும் உணர்ந்து கொள்ளும் வண்ணம், மக்களின் நெஞ்சங்களைத் தொட்டவர்.

தீயைத் தீண்டினேன். அது என்னைச் சுட்டது. அந்தப் புண் கொடுத்த வேதனையால் வெந்தேன் எனத் தான் வாழ்க்கையில் செய்த தவறுகளை உளச்சுத்தியோடு கூறினார். அது மட்டுமல்ல, அத்தகைய தவறுகளைச் செய்யும் போது தனது நெஞ்சத்திலிருந்த உணர்ச்சிகளை விளக்கி மற்றையோர் அதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுரைகளை வாரி வழங்கினார்.

கவிஞரின் அருமையான வாழ்வின் யதார்த்தத்தை விளக்கும் ஒரு கவிதையில் எனது மனத்துக்குப் பிடித்த சில பகுதிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இக்கவிதை கவிஞரின் ''கண்ணதாசன் கவிதைகள்'' எனும் நூலின் தொகுப்பு ஐந்திலிருந்து எடுக்கப்பட்டது. இதைப் படிக்கும் போது ஏனோ எனது மனம் தாலாட்டப்பட்டது. இந்தக் கவிதையின் தலைப்பு ''அனைவத் தூங்க விடுங்கள்'' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே சில பகுதிகளைச் சுவைப்போம் வாருங்கள்!

அவனை எழுப்பாதீர்
அப்படியே தூங்கட்டும்
ஆழ்ந்த துயிலினிலே
அமைதியினைக் காணட்டும்
அன்புக் குழந்தையவன்
அரையாண்டுச் செல்வனவன்
இந்த வயதினிலே
இப்போது தூங்குவதே
சுகமான தூக்கம், அவன்
சுகமாகத் தூங்கட்டும்!

என்ன அருமையான, எளிமையான வரிகள். காதுகளில் தேனை வார்க்கும் இனிமையான தமிழருவி. 6 மாதக் குழந்தையை ஏன் எழுப்புகிறீர்கள் என வினவுகிறார். அவனது துயில் ஆழமானது, அதில் காணும் நிம்மதியே மகத்தானது எனும் நிதர்சனமான உண்மையை நீக்கமறத் தருகிறார் நித்தியக் கவிஞர். வயது முதிர்ந்ததும், அவன் வளர்ந்ததும் வாழ்க்கை எனும் கடலிலே பிரச்சனைகள் எனும் அலைகளுடன் அவன் போராடுவது தவிர்க்கப்பட முடியாததே எனும் தீர்க்கமான யதார்த்தத்தைத் துல்லியமாகக் கூறுகிறார் கவிஞர்.

இந்த வயதினிலே தூக்கத்தைத் தவறவிட்டால் பின் எப்போது கிடைக்கும் இந்தப் பஞ்சணைச் சுகம்? எனக் கேள்விகளை வீசி, சிந்தனைச் சக்கரத்தைச் சுழற்றுகிறார், இந்தச் சிந்தனைச் சிற்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்கே அடுத்தொரு பகுதிக்குள் நுழைவோம்!*

கண்ணை விழித்திந்தக்
காசினியைப் பார்க்குங்கால்
என்ன துயர்வருமோ
எங்கெங்கோ அடிவிழுமோ
காதல் வருமோ
காதலுக்குத் தடைவருமோ
மோதல் வருமோ
முறைகெடுவார் துணைவருமோ?
நன்றியிலா நண்பர்கள்தாம்
நாற்புறமும் சூழ்வாரோ
நலமிழந்த பெண்ணொருத்தி
நாயகியாய் வருவாளோ
செய்யத் தொழில்வருமோ
திண்டாட்டந்தான் வருமோ
வெய்யில் அழைத்துவரும்
வியர்வையிலே நீராடி
''ஐயா பசி'' என்
றலைகின்ற நிலைவருமோ?
என்ன வருமென்று
இப்போது யாரறிவார்

அவனை எழுப்பாதீர்
அப்படியே தூங்கட்டும்!

*அந்தக் குழந்தை வளர்ந்து தன் அகலக் கண்களால் புவியைப் பார்க்கும்போது அவனடையக் கூடிய துன்பத்தின் சாயல்களை மிகவும் எளிமையாக எமக்குப் புரியவைத்திருக்கிறார்...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையலைப் பார்த்து மையல் கொள்வான். மையலோடு பின்னிப் பிணைந்து சிக்கலும் வரும், அப்போது இழந்து விடுவானே தூக்கத்தை!

காதலிக்கத்தானே உரிமையுண்டு, அத்தோடு கூட வரும் தடைகளைத் தகர்க்கச் சமுதாயம் இடம் கொடுக்குமா என்ன? அவை கொடுக்கப்போகும் அந்தச் சோகத்தினாலே அவன் இழக்கப்போவதும் தூக்கத்தைத் தானே!

நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டு ஒரு நயவஞ்சகக் கூட்டம் அவனைப் படுகுழியில் தள்ளுமே, காதலெனும் பாதையைத் தாண்டி இவன் திருமணத்தினுள் நுழையும்போது, நாயகியாய் ஒருவள் வருவாளே! நாம் எவ்வளவு தான் வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளை அவனுக்குக் கற்றுத் தந்திருந்தாலும், அந்த நாயகி நலமிலாதிருந்தால் புரட்டி விடுவாளே அவனை!

அது மட்டுமா!

படிக்கிறான், படிப்பிக்க மட்டும்தானே எம்மால் முடிகிறது, அதைத் தொடர்ந்து அவனுக்கு ஒரு தொழில் தேவை, அது இல்லையென்றால் பட்டினிதானே, பாழும் வெய்யிலில் அலைந்து பிச்சை கேட்கும் நிலைக்கு வந்து விட்டால்!

அப்பப்பா! தூக்கத்தை இழக்க ஆயிரம் காரணங்கள் இருக்கும் இந்தப் புவியில், ஏன் நீங்கள் அவசரமாய் அவனை எழுப்புகிறீர்கள்? நயமாக வினவுகிறார் எமது நட்சத்திரக் கவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களே! பெற்றோர்களாக இருக்கும் போது, அதுவும் வாழ்க்கை எனும் கரடுமுரடான பாதையில் நடந்து களைத்தவர்க்கு, பிள்ளை எனும் அந்தக் குலக் கொழுந்து, வளரும் போது நுழைந்து, வெளிவரவேண்டிய சிக்கல்களை அழகுற எடுத்தியம்பி எம்மையெல்லாம் அந்த உணர்ச்சிக் குவியலுக்குள் முழுக்கி எடுத்துவிட்டார் கண்ணதாசன்.

இது ஒரு நீண்ட கவிதை, இதன் அழகிய அடுத்த பகுதிகளை அடுத்துப் பார்ப்போம். மீண்டும் கவிஞரின் கவியின்பம் சுவைப்போம்.

## 23

கவியரசரின் கவிதையொன்றின் சில பகுதிகளைப் பார்த்தோம். இதோ மீண்டும் அந்தத் தேன்குடத்தினுள் குதிக்கப் போகிறோம். தேனைச் சுவைத்தபின் எஞ்சியிருக்கும் கொஞ்சத்தை நாவால், அதரங்களைத் தடவிச் சுவைப்பதுபோல, இதோ எஞ்சியிருக்கும் அந்த இனிப்பைப் பருகுவோமா?

கோடிக் கதிபனெனக்
குறையாது வந்தாலும்
நாட்டுத் தலைவனென
நல்வாழ்வு பெற்றாலும்
கேட்ட பொருளெல்லாம்
கிடைத்தாலும், அவன் வீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டுக்கும் கூட
மரியாதை கிடைத்தாலும்
பஞ்சணைகள் இருந்தாலும்
பால்பழங்கள் உண்டாலும்
சொத்துள்ள காரணத்தால்
தூக்கம் பிடிக்காது!

அவனை எழுப்பாதீர்
அப்படியே தூங்கட்டும்!

காதல் வழி வந்த சோதனைகளைத் தூக்கிக் காட்டி, வாழ்வின் பஞ்சத்தின் வழி வரும் பல தடங்களைத் தட்டிக்காட்டி எமக்கு ஞானப்பால் ஊட்டிய கவித்தலைவன் இங்கே எதை நமக்கு எடுத்தியம்ப முயல்கிறான்?

பணத்தில் அவனுக்குப் பலமில்லை என்னும் நிலையில்லாமல், வாரி வாரிக் கொட்டிக் குவிக்கும் நிலையில் இருக்கிறான் என்றே வைத்துக் கொள்ளுங்கள். அதில் கூட மிகவும் நயமாக ''நாட்டுத் தலைவனென நல்வாழ்வு பெற்றாலும்'' எனும் வரியின் மூலம் அரசியல் வாழ்வில் லாபம் தேடும் பலரைப் பற்றிப் பூடகமாகச் சொல்கிறான் சொல்வேந்தன்.

அப்படி ஒரு நிலையை அந்தக் குழந்தை அடைகின்றதாக வைத்துக் கொள்ளுங்களேன். அவனைச் சுற்றிக் காக்கைக் கூட்டம் போல சுரண்டத் திரியும் கும்பல்கள் ஒருபுறம் அவனை வருத்தும். சோம்பேறிகளுக்கு உதவி செய்வது பாபம் எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால், உதவ மறுத்து, மனம் நிம்மதி இழந்து தவிக்கக்கூடுமே, பிற்கால வாழ்வில் அந்தக் குழந்தை!

அப்போது அவன் இழக்கப் போவது அவன் தூக்கத்தைத்தானே! பின் ஏன் இப்போது அவசரமாய் அவனை எழுப்புகிறீர் என வாழ்க்கையின் உண்மை நிலையை எடுத்தியம்பி விளிக்கிறார் இந்த கவி விற்பன்னர்.

அதாவது பணம் இல்லாவிட்டாலும் கஷ்டம், அது அளவுக்கதிகமாக இருந்தாலும் கஷ்டம். அதன் விளைவு தூக்கம் பறிபோவதுதானே, பாவம், குழந்தையாயிருக்கும் போதாவது தூங்கட்டுமே என்கிறார்.

பூப்போலத் தூங்குகிறான்
பூமியிலே உள்ளதெல்லாம்
பார்க்காமல் தூங்குகிறான்
பாவிகளை இன்றுவரை
சேராமல் தூங்குகிறான்;
தெய்வத்தின் காதினிலே
ரகசியங்கள் பேசுகிறான்;
"லாலிலா" பாடுகிறான்!
வெள்ளை மலர்முகத்தை
வெள்ளிநிலாப் பெட்டகத்தைப்
பிள்ளைக் கனியமுதைப்
பேதையீர் எழுப்பாதீர்!

அவனை எழுப்பாதீர்
அப்படியே தூங்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை மனமுடைய பிள்ளை, பெரியவனானதும், பாவிகள் அவனை வளைத்துப் போட்டு விடுவார்கள். அது மட்டுமா! இந்தப் பூமியிலே நம் கண்முன்னாலே காணும் அநீதிகள்தான் எத்தனை! அவற்றைக் காணாமல் இருக்கிறானே இந்தக் குழந்தை அந்த மட்டிலாவது மகிழ்வுறுங்கள் என்கிறார் இந்தத் தமிழ்த்தென்றல்.

நீங்கள் என்னப்பா கோயில் குளங்கள் என்று போய்த் தெய்வத்தைத் தேடுகிறீர்கள், ஆனால் இந்தக் குழந்தை பேசும் மொழி தெய்வத்தின் மொழிதானே! அந்தக் குழந்தை நீங்கள் தேடும் தெய்வத்தின் காதுகளில் கண்களை மூடிக்கொண்டே எத்தனை ரகசியங்கள் பேசிவிட்டது.

பேதை மனிதர்களே! அவன் பேசாமல் தூங்கட்டும், பிற்காலத்தில் தூக்கமின்றி அவன் தவிக்கும்போது உங்களால் அவனைத் தூங்க வைக்க முடியாதே!

கவியரசர் கண்ணதாசனின் அளவிலா அனுபவச் செல்வச்செழிப்புக்கு இது நல்ல எடுத்துக்காட்டு. தமிழைச் சுவைக்கும்போது கூடவே, வாழ்க்கையின் யதார்த்தம் எனும் உண்மையை நமக்குத் தெட்டத் தெளிவாக விளக்குகிறார்.

உண்மையான கவிஞன் அழகான கவிதைகள் எழுதுவதோடு மட்டுமல்லாமல் அதன் மூலம் ஒரு செய்தியைத் தருவான். அந்த வழக்கத்தைக் கவியரசர் அழகாகக் கையாண்டிருப்பதை ரசித்திருப்பீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

ஒரு விசித்திரமான கற்பனை. கவியுலகின் மைந்தன், காதல் பெண்களின் பெருந்தலைவன், மரணத்தை வென்றவன் கவிச் சக்ரவர்த்தி கண்ணதாசனை நேரில் கண்டேனென்றால் உரையாடல் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன்!

நீங்கள் அவன் பாடல்களை ரசித்தது போதும், இனி நான் ரசிக்க வேண்டாமா? என அந்த ஆண்டவனே கவியரசைத் தன்னுடன் அழைத்த பின்னால் எப்படிக் காண்பேன் என் கவித் தலைவனை? என்று உரையாடுவேன் அந்தத் தமிழ் அருவியுடன்?

கவியுள்ளம் கொண்டவர்கள் விளையாடும் திடலான கற்பனை உலகை எனது உதவிக்கு அழைத்தேன். ஆம்! கனவுலகில் கவியரசோடு உரையாடுவது சாத்தியமே!

வாருங்கள் கனவுலகிற்குள் நுழைவோம்!

கண்களை மூடினேன். கனவு வந்தது. கவிஞனும் வந்தான். சுனாமி எழுந்து உயிர் பறித்துக் களைத்து அமைதியாய் ஆடிக் கொண்டிருந்த அந்தக் கடற்கரைதனிலே ஒரு பாறை மீது தனியாய் உட்கார்ந்திருந்தேன். அதோ பளீரென்று கண்ணைப் பறிக்கும் வெள்ளை வேட்டி சட்டையுடன் அருகே வருவது யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசர் கண்ணதாசனல்லவா? திடுக்கிட்டு எழுந்தேன்.

''என்னப்பா அவசரம், உட்கார்'' என்றார் கனிவாக. தயங்கியவாறே திரும்பவும் அந்தக் கற்பாறையின் மீது உட்கார்ந்தேன். எதிர்த்தாற் போல இருந்த பாறையில் தானும் அமர்ந்தார்.

''என்ன சக்திதாசா? என்ன பலமான யோசனை?'' கனிவான விசாரணை. ''நீ சிந்திப்பது எனக்குப் புரிகிறது, நான் களிக்கும் கவிஞனை என் முன்னே கொண்டு வந்து நிறுத்திய காலத்தின் கனிவு எப்படி இந்த அமைதியான கடலலையைச் சுனாமியாக மாற்றியது என்பதுதானே?'' என்றார் முகத்தில் என்றும் தவழும் அந்தக் கள்ளமில்லாச் சிரிப்புடன்.

திடுக்கிட்டு விட்டேன்! எப்படி என் மனத்தின் ஆதங்கத்தைப் படம் பிடித்துக் காட்டி விட்டார் கவிஞர்!

அகலத் திறந்த கண்களைச் சுருக்க முடியாமல் ''ஆமாம் கவிஞரே! அப்படியே என் மனத்திலுள்ளவற்றை உரைத்து விட்டீர்களே!'' என்றேன் நான்.

சிரித்தார் கவிஞர்.

கறையுடைய நெஞ்சினரும்
திறனுடைய கவிஞர்களைக்
காலால் உதைக்கும் நேரம்
கடல் பெருகி மழை பெருகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுப்புய லாகவரும்
கலியுகம் முடியும் நேரம்!''

என்னப்பா! திகைத்து விட்டாயா? இது எனது 'கலியுகம் முடியும் நேரம்' எனும் கவிதையில் ஒரு பகுதி. கவிதை எழுதும் ஆற்றல் உள்ளவனாக இருந்தால் அர்த்தம் புரிந்திருக்குமேயப்பா? என்றார்.

''எனது உள்ளத்துக் கவி மழையின் மேகமே! தங்களுக்கு முன்னால் நானெல்லாம் கவியா?'' என்றேன் நான்.

சிரித்தவாறே! ''உலகம் முன்னேற்றம் எனும் பாதையில் மூர்க்கத்தனமாக ஓடிக்கொண்டிருக்கிறது. இருக்கும் உள்ளங்களில் சிலவும் மனிதத் தன்மையை இழந்து விட்டால், மனிதனின் இருப்புக்கு அர்த்தமேயில்லாமல் போய் விடாதா?'' என்றார் கவிஞர்.

''திரும்பும் இடமெல்லாம் துரோகம், பார்க்குமிடமெல்லாம் பரம வஞ்சம், எப்படி வாழ்ந்தீர்கள் உலகிலே?'' அறிவு ஏழை விசிறினேன் கேள்வியை.

''என்னைப் பற்றி பல விடயங்களை அறிந்து வைத்திருக்கிறாயே, இதை அறியவில்லையா?'' என்று கேட்டுவிட்டு,

கடவுள் செய்த பாவம் - இங்கு
காணும் துன்பம் யாவும் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமோ - என்ன குணமோ - அந்த
மனிதன் கொண்ட கோலம்

இதைச் சிந்தித்துப் பார்த்தாயா? உன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளுக்கு, எமக்கு அப்பாற்பட்ட சக்தியின் பெயரால் நியாயத்தைக் கற்பித்து விடு, மனம் இலேசாகி விடும் என்றார்.

எனது மனமோ ஆச்சரியத்தால் மலர்ந்தது. இந்தக் கவிஞனின் மீது நான் கொண்ட அபிமானம் வீணானது அன்று, எவ்வளவு துல்லியமாகப் பதிலளித்து விட்டார்!

## 25

"மனிதர்கள் மதத்தின் மீது கொண்ட "மதத்தினால்" மற்றையோரின் மனம் நோகும் வண்ணம் நடப்பது ஆன்மீகத்திற்கு இழுக்காகுமே கவியரசே! அப்படியான பல சந்தர்ப்பங்களை நான் காணுகின்றேனே, தாங்கள் இதை எப்போதாவது எதிர் கொண்டீர்களா? அத்தகைய சந்தர்ப்பங்களை எப்படிக் கையாண்டீர்கள்?" ஆவல் ததும்பும் கேள்வி பிறந்தது என்னிடமிருந்து.

மீண்டும் புன்சிரிப்பு! புண்ணான நெஞ்சத்தின் பொன்னான ஆபரணமே புன்சிரிப்புத்தானோ?

"இந்து மதத்தின் மீது நான் கொண்ட அபிமானம் அளவு கடந்ததே! நான் என் மதத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசிக்கிறேன். அது காற்றாக எனது உயிருக்கு வடிவம் கொடுக்கிறது. எனது வாழ்க்கையின் . அர்த்தத்தை எனக்குக் கற்பிக்கிறது. என்னைச் சுற்றிப் படரும் துன்ப வலையை எனக்கு விபரித்து அதிலிருந்து அறுத்துக் கொண்டு வெளியே வருவதற்கான கத்தரிக்கோலைக் கொடுக்கிறது. ஆனால் அதை அறுக்க வேண்டியவன் நானே, அது தானாகவே அறுபட முடியாதது. அந்த ஆயுதத்தால் எனது துன்ப வலையை அறுப்பதை விடுத்து அடுத்தவனைக் குத்தவும் முடியும். ஆனால் அப்படிச் செய்யும் போது அந்த உபகரணம் தனது மகிமையை இழப்பதோடு, துன்ப வலையில் சிக்குண்ட நான் வெளியே வர வழி கிடையாது தவிக்கிறேன்.

அன்பனே! சக்திதாசா, நீ கேட்ட கேள்விக்கு விடை கூறி விட்டேன். ஒரே வரியில் சொன்னால், மதம் வெறியாக மாறினால் அங்கே மனிதத் தன்மை சிதைந்து விடுகிறது. அதற்கப்புறம் நாம் மனிதர்களைப் பற்றிப் பேசவில்லை.

ஆகா! என்னே ஒரு அருமையான விளக்கம் இதைக் கவிஞரைத் தவிர வேறு எந்த அனுபவச் சிற்பியால் கொடுக்க முடியும், திகைப்பில் ஆழ்கிறேன் நான்.

திடீரெனக் கவிஞரின் வாயசைகிறது, அவரிடமிருந்து ஒரு பாடல் பிறக்கிறது!

பரமசிவன் கழுத்திலிருந்து
பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா? - யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமிடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே, கருடன் சொன்னது
அதில் அர்த்தம் உள்ளது

கேட்டதும் மகுடி கேட்ட நாகம் போல எனை மறந்தேன். என்னே தத்துவம், என்னே உயரிய அனுபவத்தின் உள்ளர்த்தம்.

"கவிஞரே! ஒரு சாதாரண மனிதன் எனும் கோட்பாட்டுக்குள் இருந்து கொண்டு உங்கள் பாடல்களில் பொதிந்திருக்கும் அர்த்தங்களையும் அது தரும் ஆத்மார்த்த உணர்வுகளையும் ஆசை தீரப் பருகிக் கொண்டும் ஏனோ, அன்றாட ஆசாபாசங்களுக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றேனே இது சரியாகுமா?"

மீண்டும் அவருக்கேயுரித்தான ஒரு அர்த்தம் பொதிந்த சிரிப்பு!

"லௌகீக வாழ்க்கையின் தேவைகளைத் துறந்தவன்தான் என் பாடல்களை ரசிக்க முடியுமானால் எனக்கு ரசிகர்களே இருந்திருக்க வாய்ப்பில்லை. நான் பெற்ற அனுபவங்களைப் பாடலாக்கினேன். ஆனால் அவற்றைத் திரும்பக் கேட்கும் போது நான் அவற்றைக் கடந்து விட்டேன். ஆனால் உன்னைப் போன்ற ரசிகர்களோ அந்த வாழ்க்கையின் வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே உங்கள் மனதைச் சாந்தப்படுத்தும் வகையில் எனது பாடல்கள் மூலம் ஆறுதல் அடைவீர்களானால் என்னைவிட பாக்கியசாலிகள் நீங்களே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் எத்தகைய அர்த்தம் பொதிந்த அனுபவ வாயிலான ஒரு விளக்கம்!

''நான் புறப்படும் நேரம் வந்து விட்டதப்பா! இன்னும் ஒரேயொரு கேள்வியை எடுத்து விடு. அத்துடன் நான் என்னுலகம் செல்லுகிறேன்'' என்றார் கவிஞர்.

''கவியரசே! அரசியல்வாதி, ஆன்மீகவாதி, கவிஞர், சினிமாப் பாடலாசிரியர் இவற்றில் நீங்கள் மனம் நிறைவாக ஆற்றிய பாத்திரம் எதுவெனக் கூறுவீர்களா?'' மீண்டும் ஆவலுடன் அடியேன்.

பலமாகச் சிரிக்கிறார் ''இதற்கு விடையறிந்திருந்தால் என் நிலைமை வேறாக இருந்திராதா?'' மனிதாபிமானமிக்க அரசியல்வாதியாக, நடைமுறை ஞானத்தைப் போதிக்கும் ஆன்மீக வாதியாக, உண்மையைப் பாடும் கவிஞனாக, மக்கள் மனதைத் தொடும் பாடலாசிரியனாக, இனியொரு பிறப்பெடுத்தால் வாழ வேண்டும் எனும் நம்பிக்கை பொதிந்த அனுபவத்தைப் பெற்ற ஒரு மனிதனாக வாழ்ந்தேன் என்பதே எனக்கு மனநிறைவைத் தருகிறது''- கூறியவாறே எழுந்து நடந்த கவியரசரின் உருவம் சிறுத்துக் கொண்டே வந்தது.

திடுக்கிட்டு விழித்தேன். நிஜ உலகம், நிம்மதி மறைந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26

கண்ணதாசன் எனும் இந்தக் கலைஞரின் வாழ்வில் அடித்த புயல்கள் ஆயிரம். ஆயினும் தான் அனுபவித்த அந்தப் புயற் காற்றின் வேகத்தை இனிமையான தென்றல் காற்றாக மாற்றி எமது வரண்ட மனமெனும் பாலவனத்தைச் சோலையாக்கினார். வாழ்வெனும் இந்தப் பயங்கர வனத்தைக் கடக்கும் போது எதிர்ப்படும் துன்பமெனும் விலங்குகளை எதிர்கொண்டு பயணத்தை இனிமையாக்குவதற்குத் தமிழ் எனும் இனிமை தடவிய அழகிய வார்த்தைக் கோப்புகளைத் துணையாக்கினார்.

கவிஞர் கண்ணதாசன் கம்பனைத் தனக்குத் துணையாக்கிய சம்பவங்கள் பலவுண்டு. ஒரு சிறு உதாரணத்தைக் கீழே பார்ப்போம்.

அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்

என்று தொடங்கும் கம்பனின் கவியை எவ்வாறு எமது கவிஞர் எமது வாய்களில் உருள விடுகிறார் என்று பாருங்கள்.

அன்றொருநாள் இதே நிலவில்
அவள் இருந்தாள் என்னருகே!

அருமையாக 'நாடோடி' எனும் திரைப்பட வாயிலாக எமது நெஞ்சங்களைக் கம்பனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துகளோடு கலந்து விடுகிறார் இந்தக் கவித் தலைவர்.

பல நூல்களைப் படித்து அதன் உள்ளார்ந்த அர்த்தங்களைப் புரிந்து அதை எமக்கு இலகுவாகப் புரியக் கூடிய வகையில் தமிழ் மணம் பூசி அள்ளித் தெளிக்கும் இந்த வித்தகரின் விளையாட்டை இன்னுமொரு இலக்கியச் சுனையில் பறித்த தாமரையாகப் பார்ப்போம்.

புறநானூற்றில் புலர்ந்த கவிதையை எவ்வாறு எமக்குப் புலப்படுத்துகிறார் பாருங்கள்!

இதோ புறநானூற்றுப்பாடல்:

**யானும் நீயும் யாராகி யாரோ**
**யென்னிதயம் உம்மிடையும் எவன் கொல்லோ**
**செம்புலப் பெயர் நீர் போல**
**அன்புடை நெஞ்சங்கள் தாம் கலந்தாடுவவே!**

இதைக் கவிஞர் எவ்வாறு எமக்கு ஊட்டுகிறார் பாருங்கள்!

**நேற்றுவரை நீ யாரோ? நான் யாரோ?**
**இன்று முதல் நீ வேறோ? நான் வேறோ?**

தமிழூறும் மனம் கொண்ட உன்னதக் கவிஞரின் படைப்புக்கு உவமை எங்குண்டு?

இதோ கவியரசரின் வாழ்வினிலே நடந்ததாகக் கூறப்படும் இன்னுமொரு சம்பவத்தைப் பார்ப்போம். ‘‘பாவ மன்னிப்பு’’ எனும் படத்திற்காகப் பாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் போது டைரக்டர் பீம்சிங், இசையமைப்பாளர்கள் எம்.எஸ்.வி., ராமமூர்த்தி ஆகியோருடன் கண்ணதாசனும் பாடல் எழுவதற்காக அமர்ந்திருக்கும் போது கண்ணதாசன் வீட்டிலிருந்து அவருக்கு ஒரு தொலை பேசி அழைப்பு வந்திருந்ததாம்.

அந்தத் தொலை பேசி அழைப்பிலிருந்து திரும்பியவரின் முகத்திலிருந்த களை மறைந்திருந்ததைக் கண்ட எம்.எஸ்.வி. கேட்ட போது எதையும் கூற மறுத்த கவிஞர், பாடலை எழுதிக் கொடுத்து விட்டுத் தனது வீடு திரும்பினாராம். பின்பு அவரது இல்லத்திற்குச் சென்ற எம்.எஸ்.வி.க்கு அப்போதுதான் தெரிந்ததாம். கவிஞரின் வீட்டின் மீது ஜப்தி கொடுத்த செய்திதான் அந்தத் தொலை பேசி அழைப்பில் அறிவிக்கப்பட்டதாம்.

அப்போது அவருக்குக் கூறப்பட்ட கதையின் காட்சிக்கு எழுதப்பட்ட பாடல் என்னவென்று எண்ணுகிறீர்கள்?

**சிலர் சிரிப்பார் சிலர் அழுவார்**
**நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்**
**சிலர் அழுவார் சிலர் சிரிப்பார்**
**நான் அழுதுகொண்டே சிரிக்கின்றேன்.**

அப்போது அவருக்குத் தொலைபேசியில் கிடைத்த அந்தச் செய்தியையும் அவரது மனத்திலிருந்து அந்த வேளையில் உதித்த பாடலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அந்த அனுபவக் கவிஞனின் ஆற்றலுக்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணதாசனை ஒரு தமிழ் அகராதி என்று கூடச் சொல்லலாம். எப்படி என்கிறீர்களா? ஒவ்வொரு சொல்லையும் எந்தப் பதத்தில் எங்கே உபயோகித்தால் எப்படியான ஒரு மனநிலையை, கேட்பவர், படிப்பவர் மனங்களில் ஏற்படுத்தலாம் என்பதைத் துல்லியமாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்.

அதனால்தான் அவரது பாடல்கள் காலத்தையும் வென்று மக்கள் மனங்களை ஆண்டு கொண்டிருக்கின்றன. ஒரு பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது அவர் என்ன உணர்ச்சியை எமது மனதினில் தோன்ற வைக்க அந்தப் பாடலை எழுதினாரோ, அது அப்படியே அரங்கேறுகிறது.

இனி, கவிஞரின் திரை கானங்களில் அருமையான தமிழ்ச் சொற்களைக் காதல், தத்துவம், ஆன்மீகம், சோகம் எனும் உணர்ச்சிகளை விவரிக்க எவ்வகையாக உபயோகித்துள்ளார் என்பதைப் பார்ப்போம்.

அந்த வரிசையில் காதலைச் சுவைப்போமா?

நான் தெரிவு செய்த பாடல் டி.எம்.எஸ்., சுசீலா குரலில் ஒலித்த **"அந்த சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி"** எனும் பாடலாகும். இதற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவது இந்த பாடல் பிறந்ததன் பின்னணியாகும். காங்கிரஸ் கட்சியிலிருந்து கண்ணதாசன் பிரிந்த காலத்தில், கர்ம வீரர் காமராஜரிடத்தில் ஒரு தனி மரியாதை வைத்திருந்த கவியரசர், அவரை மனத்தில் நிறுத்தி எழுதிய பாடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது காமராஜரின் அன்னையின் பெயர் சிவகாமியாகும். அத்தோடு அழகான காதல் வரிகள் கொண்டு எழுதப்பட்டிருக்கின்றன.

காதலனின் பிரிவால் காதலி வருந்துகிறாள். அவனை எண்ணி மிகவும் மனம் நொந்து போகிறாள். அங்கே பிறக்கிறது. அந்த அழகிய தமிழ்ப்பாடல்.

**அந்த சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி – என்னைச்**
**சேரும் நாள் பார்க்கச் சொல்லடி**
**வே!று எவரோடும் நான் பேச வார்த்தை ஏதடி?**
**வேலன் இல்லாமல் தோகை ஏதடி?**

தோழியின் மூலம் தன் காதலனுக்குச் சேதி அனுப்புகிறாளாம். தன் தலைவனிடம் போய்த் தன்னை மணமுடிக்க நாள் குறிக்கும்படி கூறுகிறாள். அது மட்டுமா?

மயிலின் தோகை எவ்வளவு அழகானது? அதன் வண்ணங்கள் உயிர் பெறுவது அந்தத் தோகை விரிக்கப்படும் போதே. ஆனால் அந்த மயில் தனது முழு அழகையும் தன் தலைவனான அந்த முருகப் பெருமான், வேலன், அவனுக்கு முன்னால் தானே காட்சிக்கு வைக்கும், அவனில்லா விட்டால் எப்படி அங்கே தோகையின் அழகு பெருமை பெறும்? அதே போலத் தன் தலைவனின் முன்னால் மட்டுமே மலரும் தன் அழகிற்கு, மயிலின் தோகையை ஒப்பிடுகிறாள் அந்தத் தலைவி.

தொடருகிறாள் காதல் வேதனையில் துவளும் தலைவி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் சரவணன் சூடிடும் மாலை
கன்னங்கள் வேலவன் ஆடிடும் சோலை
பெண்ணெனப் பூமியில் பிறந்த பின்னாலே
வேலை வணங்காமல் வேறென்ன வேலை

அவளுடைய விழிகள் பூ விழிகள் தானே, அவை மலர்வது எதற்காக? அவளது தலைவன் அவற்றைக் கோர்த்து மாலையாய் அணிந்து கொள்வதற்கே, அது மட்டுமா? கண் விழிகள் மலர்கள் என்றால் அவற்றைத் தாங்கி நிற்கும் கன்னங்கள் வேறென்ன சோலைதானே!

தன்மீது உள்ள காதலினால் உருகும் காதலியின் நிலையறிந்து காதலன் மனதில் உருவாகும் பாடல் வரிகள்

மலையின் சந்தனம் மார்பின் சொந்தம்
மங்கையின் இதயமோ காளையின் சொந்தம்

நிலப்பரப்புகளிலே உயர்ந்ததாம் மலையின் உச்சியில் பிறந்த சந்தனம், அதனடியில் வாழும் மனிதனின் மார்புக்குத் தானே சொந்தமாகிறது. அத்தகைய உயரிய இதயத்தைக் கொண்ட அவன் காதலியின் இதயம் தனக்கே சொந்தம் என்று பெருமையில் பூரிக்கிறான் தலைவன்.

தலைவனின் பதில் கேட்டுப் பூரித்த மங்கையவள் மனதில் ஒரு சிறு சந்தேகம், தனது இதயத்தை மலையின் உச்சிக்கும், தன்னை அதன் அடி வாரத்தில் இருக்கும் மனிதனுக்கும் ஒப்பிட்ட அந்தத் தலைவனின் நிலை உயர்ந்து வசதி பெருகி விட்டால், ஒரு வேளை தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து விடுவானோ? தாம் நெருங்கிவிட்டால் தமக்குள் இருக்கும் அந்தஸ்து பேதமே தம்மைப் பிரித்து விடுமோ? துடிக்கும் இதயத்துடன் வினவுகிறாள்!

நிலையில் மாறினால் நினைவும் மாறுமோ?
நெஞ்சம் நெருங்கினால் பேதங்கள் தோன்றுமோ?

திடுக்கிட்டு விட்டான் அவன்! என்ன சந்தேகம் வந்து விட்டதோ தலைவிக்கு, தனது காதலின் மீது? அறுதியாகக் கூறுகிறான் தலைவன்

காலம் மாறினால் காதலும் மாறுமோ?
மாறாது! மாறாது இறைவன் ஆணை

கண்ணுக்குத் தெரியாமல் காவல் இருக்கும் அந்த அனைவருக்கும் பொதுவான இறைவனைத் துணைக்கு அழைக்கிறான்.

மகிழ்ச்சியுடனே அவளும் இணைகிறாள்.

என்றும் மாறாது! மாறாது! இறைவன் ஆணை

திரும்பவும் அவளுக்குத் தீர்மானமாகச் சொல்கிறான்.

இந்தச் சிவகாமி மகனுடன் சேர்ந்து நில்லடி
இன்னும் சேர நாள் பார்ப்பதேனடி?
வேறு எவரோடும் நான் பேச வார்த்தை ஏதடி?
தோகையில்லாமல் வேலன் ஏதடி?

மிகவும் துணிச்சலாக மனத்தோடு சேர்ந்து விட்ட நீ என்னுடன் சேர்வதற்கு நாள் பார்க்க வேண்டுமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? என்னுடன் சேர்ந்து நின்றால் பிறகென்ன பிரிவு எனக் காதலன் எனும் அதிகாரத் தோரணையில் காதலிக்கு ஆறுதலிக்கிறான். எப்படி இருக்கிறது கவிஞரின் வார்த்தைப் பூமழை. அழகாகத் தோய்ந்திருப்பீர்கள் என நம்புகிறேன். அடுத்து தத்துவ ஜாலத்தில் நனைவோம்.

## 27

கண்ணதாசனின் தமிழ் வைப்புப் பெட்டகத்திலிருந்து மற்றுமொரு விலை மதிப்பற்ற தமிழ்ச் சரத்தை எடுத்து நுகர விழைகின்றேன். கடந்த இதழில் காதலை அலசிய நாம் இந்த இதழில் அவரின் தத்துவ முகத்தைக் கொஞ்சம் உற்று நோக்குகிறோம்.

'பனித்திரை' எனும் திரைப்படத்திற்காக, ஜெமினி கணேசன் அவர்களின் நடிப்புக்கு P.B. ஸ்ரீனிவாஸ் குரல் கொடுக்கக் கண்ணதாசன் அமைத்திருந்த இந்த அருமையான தத்துவப் பாடலானது மனிதனின் நிலையற்ற குணத்தை மிகவும் அழகாக எடுத்தியம்பும் ஒரு இனிய கீதமாகும்.

ஏதோ மனிதன் பிறந்து விட்டான் - அவன்
ஏனோ மரம் போல் வளர்ந்து விட்டான்.

எதிலும் அச்சம் எதிலும் ஐயம்
எடுத்ததற்கெல்லாம் வாடுகிறான் - தன்
இயற்கை அறிவை மடமையென்னும்
பனித்திரையாலே மூடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் சாதாரண வாழ்க்கையைத் தெளிவாக வார்த்தைகளில் வடித்து விடுகிறார் கவியரசர். மனிதன் பிறப்பதுவும் பின் வளர்வதும் சாதாரணமானதுவே. அவன் அறிவு விஸ்தரித்து வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளைப் புரிந்து மற்றவர்க்குப் பயனுள்ள வகையில் வாழ்கின்றானோ இல்லையோ, அவன் உருவத்தில் வளர்வது மட்டும் எதுவிதத் தடங்கலுமின்றி நிகழ்கின்றது. இதை மிகவும் அழகாக விளக்கியிருக்கிறார் கவிஞர்.

எதைக் கண்டாலும் பயப்படும் மனிதன் சகலத்தையும் சந்தேகக் கண் கொண்டு நோக்குவதால் அவனால் நிம்மதியாக வாழ முடிவதில்லை. இயற்கையெனும் இறைவன் கொடுத்த அடிப்படை அறிவைக்கூட ஆதவனைக் கண்டதும் ஓடிப் போகின்ற மிகவும் மெல்லிய பனித்திரை போன்ற மடமையால் மறைத்து விடுகின்றான்.

மடமையைக் கவியரசர் பனித்திரைக்கு ஒப்பானதென்கிறார். எப்படி என்கிறீர்களா காலைக் கதிரவனின் வீச்சு அதிகரிக்கப் பனித்திரை இருக்குமிடம் தெரியாமல் மறைந்து விடுகிறது. அதே போலத்தான் மடமையும் அறிவெனும் ஆதவன் முன்னால் இருந்த இடம் தெரியாமல் மறையக் கூடியது. ஆனால் அதை அழிக்கக் கூடிய அந்த அறிவின் வீச்சைக் கூட்டுவது எமது கரங்களிலேயே இருக்கிறது என்கிறார்.

மேலும் பார்ப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணே தெய்வம் அன்னை கடவுள்
பெருமை என்று பேசுகிறான் – பெண்
பேதைகள் என்றும் பீடைகள் என்றும்
மறுநாள் அவனே ஏசுகிறான்.

*மனிதனின் நிலையற்ற தன்மையை, மனத்தின் பச்சோந்தித் தன்மையை வார்த்தை ஜாலங்களால் வர்ணிக்கும் கவியரசரின் அற்புதமான கருத்துச் சரமிது. ஒரு காலகட்டத்தில் மகாகவி பாரதி கூடப் பெண்ணினத்தின் மீது கொண்ட அபிப்பிராயம் மிகச் சாதாரணமானதுவே. ஆனால் அறிவுச் சுடரான பாரதியின் அறிவுக் கனலின் வெப்பம் அவரின் மனத்தைத் திரையிட்டிருந்த பனித்திரையை எரித்துச் சாம்பலாக்கியது. மனிதர்களின் மனோபாவத்தை நான்கே வரிகளில் நயமாகப் படம் பிடித்துக் காட்டிவிட்டார் கண்ணதாசன் எனும் தமிழ்க்கவி.*

*அடுத்துப் பார்ப்போமா?*

நாயாய் மனிதன் பிறந்திருந்தாலும்
நன்றியெனுங் குணம் நிறைந்திருக்கும்,
நரியாய் அவனே உருவெடுத்திருந்தாலும்
தந்திரமாவது தெரிந்திருக்கும்

*அப்பப்பா! மனிதனின் முன்னே நாயும் நரியும் சிறந்தவையாகத் தெரிகின்றதாம் கவிஞருக்கு. ஏன் தெரியுமா? அவனிடம் நன்றியெனும் அருங்குணம் அரும்பக்கூட இல்லையாம். தந்திரமுள்ளவனாகத் தனது வாழ்க்கையை வென்றெடுக்கக் கூடியவனா என்றால்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் கூட லாயக்கில்லையாம். மனிதர்களில் சிலர் நடக்கும் முறைகளை மிகத் துல்லியமாக விளக்குகிறார் நம் கவியரசர்.

காக்கைக் குலமாய் அவதரித்தாலும்
ஒற்றுமையாவது வளர்ந்திருக்கும்,
காற்றாய் நெருப்பாய் நீராய் இருந்தால்
கடுகளவாவது பயனிருக்கும்

ஒற்றுமை இருந்திருந்தால் மனிதன் எடுக்கும் அடிகள் ஒவ்வொன்றுமே வெற்றியின் சிகரத்தை நோக்கியே இருக்கும். ஆனால் நாம் பொறாமை பிடித்து அலைபவர்களாக அல்லவா இருக்கிறோம். காக்கையைப் பாருங்கள். முற்றத்தில் சிதறும் சோற்றுப் பருக்கைகளின் எண்ணிக்கை ஒன்றாக இருந்தாலும் கூடக் கூவித் தனது இனத்தை அழைத்து ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாய் இருக்கிறதே! மனிதனைப் பாருங்கள்! சிரிக்கத் தோன்றுகிறதா?

காற்று வீசி நெருப்புக்குத் துணையாகிறது. அந்த நெருப்பை அழிக்க முற்படும்போது நீர் அதை அணைத்து அழிவைத் தடுக்கிறது. இப்படிக் கடுகளவு பிரயோசனமானது இருந்திருக்குமாம், மனிதன் இவற்றில் ஒன்றாய்ப் பிறந்திருந்தால், மிகவும் அழகாக வாழ்க்கையை உற்று நோக்கி அதற்குள் விளக்கம் தேடி மனிதனை நன்றாகவே வினவுகிறார்.

அடுத்தென்ன கூறுகிறார் எனப் பார்க்கலாம் வாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறறிவுடனே பேச்சும் பாட்டும்
அறிந்தே மனிதன் பிறந்துவிட்டான் - அந்த
ஆறாம் அறிவைத் தேறா அறிவாய்
அவனே வெளியில் விட்டு விட்டான்.

மனிதன் தனக்கு இறைவன் கொடுத்த அந்த வரப் பிரசாதமான ஆறாம் அறிவை உதறி எறிந்து விட்டு மிருகங்களை விட ஒரு கீழான நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதைத் தமிழால் தொட்டுக் காட்டி, மனதை அடகு வைத்து வாழும் மனிதர்க்கெல்லாம் சாட்டையடி கொடுக்கிறார் கவிஞர். மனித வாழ்க்கையை எத்துணை அழகாய்த் தத்துவ நோக்கில் தமிழால் தாலாட்டி எமது நினைவுகளில் நீந்தவிட்டிருக்கிறார் இந்தத் தத்துவச் சிற்பி. கவியரசரின் தத்துவ முகத்தைப் பார்த்த நாம் அடுத்து ஆன்மீக ஆளுகையைப் பார்ப்போம்.

## 28

காலனெனும் கொடியவன் தேவலோகத்தில் கானமிசைக்கக் கவியரசரின் உயிரைக் கவர்ந்தெடுத்துச் சென்றாலும் அந்தக் காவியத் தாயின் இளைய மகனின் நினைவுகள் தமிழ் நெஞ்சங்களில் கல்லில் செதுக்கப்பட்ட ஏடுகளே!

காதல் எனும் சுனையாடி, தத்துவம் எனும் மலையேற்றி இன்று சோகம் எனும் பாலவனத்துக்கு ரசிக உள்ளங்களை அழைத்து வந்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்தையும் இணைக்கும் பாலம் கண்ணனின் தாசனாகிய கண்ணதாசன் எனும் கவிதைப் பாலமே!

ஊனமுற்ற உள்ளங்களில் புரையோடிப் போயிருந்த சோகமெனும் புண் கொடுத்த வேதனைக்கு இந்தக் கவியரசன் தடவிய லேகியமோ தமிழ் எனும் பச்சிலையால் ஆக்கிய இதமான கவி எனும் களிம்பென்பேன்.

எங்கே இவரது சோகப் பாடல் ஒன்றினுள் குதிப்போமா!

'பாத **காணிக்கை**' எனும் படத்திற்காகச் சுசீலாவின் சுகந்தமான குரலில் ஒலித்த இந்தப் பாடல் காதல் வயப்பட்டுக் காதலனால் கைவிடப்பட்ட ஒரு பெண்ணின் மனத்தினை வார்த்தைகளில் வடிக்கும் ஒரு பாடலாகும். காதல் என்பது மலரினைப் போன்ற மென்மையான ஓர் உணர்வாகும். அந்த மலர் கசங்கி, இதழ்கள் உதிரும் போது அவற்றின் வேதனை கலந்த நினைவுகளின் வேகம் அந்த மலரைத் தாங்கி நிற்கும் காம்பினுக்கே புரியும்.

பாடலின் அர்த்தத்தைச் சுவைக்க வாருங்கள்!

**எட்டடுக்கு மாளிகையில்**
**ஏற்றி வைத்த என் தலைவன்**
**விட்டு விட்டுச் சென்றானடி - இன்று**
**வேறு பட்டு நின்றானடி**

காதல் வயப்பட்டு விட்டாள் அந்தக் கார்குழலாள். அவளுக்கு உலகினிலேயே அவளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலன் தான் பெரியவன், முக்கியமானவன். அந்தப் பேதையுள்ளத்திற்குச் சொந்தக்காரி தனது தலைவனின் முக்கியத்துவத்தை உணர்ந்த அவன்ன எதற்கு ஒப்பிடுகிறாள்? அவளுக்குத் தெரிந்து இந்த உலகில் உயர்ந்த மாளிகை எட்டடுக்குக் கொண்டதாகும். அவளது தலைவன் அந்த எட்டடுக்கு மாளிகையின் உச்சியில் நிற்குமளவிற்கு உலகிலேயே உயர்ந்தவன் என்று சொல்லும் அவள் நிலை என்ன?

அந்தத் தலைவன் அவளை விட்டு விட்டுச் சென்று விட்டானாம். அந்தோ! அந்த எட்டடுக்கு மாளிகையும் இடிந்து தரைமட்டமாகி விட்டதே. அவளோடு அவள் மனத்தில் ஒன்றுபட்டு நின்ற அந்தத் தலைவன் இப்போது வேறுபட்டு நிற்கின்றானே! என் செய்வாள் அந்தப் பேதை?

சொல்ல வரும் கருத்தை, வேதனையின் நிகழ்வைக் காதல் தோல்வி தரும் ஏமாற்றத்தை அழகாய் அற்புதமான வரிகளாலே வார்த்தையாடியிருக்கிறார் வான்கவி.

அடுத்த நடையை ரசிப்போமா!

**தேரோடும் வாழ்வில் என்று**
**ஓடோடி வந்த என்னை**
**போராட வைத்தானடி - கண்ணில்**
**நீரோட விட்டானடி.**

காதல் கொடுத்த இன்பச் சுனையில் நீராடிய அந்தக் கன்னிகை என்ன எண்ணத்திலிருந்தாள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலுடன் சேர்ந்திருந்தால் வேறென்ன வேண்டும் அவளுக்கு? உலகின் தலைவன் இறைவன் ஆலயத்தில் அவன் மகிழ்ந்திருப்பது எப்போது? உற்சவக் காலத்தே தேரோடும் நிகழ்வே இறைவனின் ஆனந்தத்தின் உச்சக் கட்டம், அத்தகைய ஓர் ஆனந்தத்தைத் தான் தன்னுடைய வாழ்க்கையிலே எதிர்பார்த்திருந்தாள் அந்தப் பாவை. ஆனால் நடந்தது என்ன?

அவளைத் தன்னந் தனியே விட்டுப் பிரிந்த தலைவன், அவளை வாழ்வோடு போராட வைத்து விட்டானே! அது மட்டுமா? அந்தப் போராட்டத்தின் விளைவு, அவள் கண்கள் ஆறாகக் கண்ணீராகக் கொட்டிக் கொண்டிருக்கின்றதே!

நண்பர்களே! ஒரு மனிதன் தன் மனத்தினை ஆட்டும் உணர்வலைகளுக்குக் கூட மற்றவரை அழைத்துச் செல்வது என்பது மிகவும் கடினமான காரியம். ஆனால் நமது கவியரசரோ காதல் பிரிவு கொடுத்த வேதனையில் துடிக்கும் அந்தப் பெண்ணின் உணர்ச்சி எனும் ஆழியினுள் எம்மை மூழ்க வைத்து விடுகிறார்.

**கையளவு உள்ளம் வைத்து**
**கடல் போல் ஆசை வைத்து**
**விளையாடச் சொன்னானடி - என்னை**
**விளையாடச் சொன்னானடி - அவனே**
**விளையாடி விட்டானடி.**

இவ்வளவு நேரமும் தனது காதலன் தன்னைக் கைவிட்டதைப் பற்றிச் சொன்னவள், இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் லீலைகளைப் பற்றிச் சொல்கிறாள். ஆமாம் கையளவு உள்ளத்தை மட்டும் கொடுத்து விட்டு தனது தகுதிக்கு மீறிய காதலைத் தனக்கு கொடுத்தது, இறைவன் தன்னை விளையாடச் சொன்ன ஒரு வகை தானே என்கிறாள். குழந்தை விளையாடும் போது தானே மகிழ்ந்திருக்கும்? அதைப் போலவே இறைவனும் அவளுக்குக் காதல் எனும் விளையாட்டுப் பொருளைக் கொடுத்து விளையாடச் சொல்லி விட்டு, என்ன செய்து விட்டான் தெரியுமோ? அவனே அவளது வாழ்க்கையில் விளையாடி விட்டானாம். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா?

இன்னும் என்ன சொல்கிறாள் பார்ப்போம்!

**காலங்கள் உள்ளவரை**
**கன்னியர்கள் யார்க்கும் இந்தக்**
**காதல் வர வேண்டாமடி - எந்தன்**
**கோலம் வர வேண்டாமடி.**

காதலன் தன்னை விட்டுப் பிரிந்த கதை சொல்லி, இறைவன் தன் வாழ்வில் விளையாடிய வகை சொல்லிய அந்த அதிர்ஷ்டமற்ற கன்னியவள் இப்போது தத்துவமாக, தீர்மானமாக ஒரு கருத்தைச் சொல்கிறாள்.

உலகம் உள்ளவரை இந்தப் பாழாய்ப் போன காதல் எந்த ஒரு கன்னியர்க்கும் வரக் கூடாதாம். காதலைத் தெய்வீகமாகவும், தன் தலைவனைத் தனது உயிராகவும் கருதிய தனக்கே இறைவனது லீலையால் இத்தகைய நிலை வந்தது என்றால், பாவம் எந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னியருமே தன் கோலம் அடையக் கூடாது என்கிறாள். தானடைந்த சோகமே கன்னியர் காதல் தோல்வியால் அடையும் கடைசிச் சோகமாக இருக்கட்டும் என்று இரைஞ்சுகிறாள்.

இந்தக் கவிஞரின் கவித்துவ வரிகளைப் படித்து விட்டுக் கண்களை மூடிக் கொள்ளுங்கள், காதலை இழந்து கண்ணீருடன் காத்திருக்கும் அந்தக் கன்னி உங்கள் மனக்கண்ணில் தெரியவில்லையா?

## 29

கண்ணதாசன் என்றோர் கவிதை ஊற்று சிறுகூடல்பட்டி எனும் மலையுச்சியிலிருந்து ஆரம்பித்துக் கரடுமுரடான பாறைகளின் வழியே விழுந்து மாபெரும் தமிழ் நதியாக ஓடி, மாபெரும் ஆழியாம் இலக்கிய மகா சமுத்திரத்திலே கலந்தது. அது பாய்ந்து வந்த பாதை கரடு முரடாக இருந்தாலும் அதன் மென்மையான உணர்வுகள் அந்தப் பாறையில் தீட்டப்பட்டன. மனித மனம் எனும் அந்தப் பெட்டகத்தை இறுகப் பிணைத்திருந்த சோகச் சங்கிலியை அறுக்கக்கூடிய அளவிற்கு, அவரது தமிழ்க் கவிதைகள், திரை கானங்கள் கூர்மைப்படுத்தப் பட்டிருந்தன.

அவரது தமிழெனும் அமிழ்தினால் ஆக்கப்பட்ட அறுசுவை அனுபவிக்கும் ஆவலினால் நாம் இன்று எடுத்துப் பார்க்க விழைவது ஆன்மீக முகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலெனும் கருவறையில் தத்துவமாய்ப் பிறந்து, சோகமாய் வளர்ந்து இப்போது ஆன்மிக வயதை அடைந்திருக்கிறது இந்த இலக்கியப் பயணம்.

**'திருவருட்செல்வர்'** எனும் திரைப்படத்திற்காக, கண்ணதாசன் இயற்றி, கே.வி. மகாதேவன் இசையமைப்பில் வெண்கலக் குரலோன் சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பாடல் ஒன்றைப் பார்ப்போம்.

**இருக்கும் இடத்தை விட்டு, இல்லாத இடம் தேடி**
**எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே!**
**அவர் ஏதுமறியாரடி ஞானத் தங்கமே!**

என்ன உண்மையான வார்த்தைகள். இறைவனின் தத்துவத்தை அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இதைத் தவிர அழகாக யாரால் விவரிக்க முடியும்? மனிதர்களின் அறியாமையை ஆன்மீகத்தின் அடிப்படையில் அலசியிருக்கிறார் கவியரசர்.

உண்மை தானே! ஆண்டவன் இருக்குமிடமான தமது மனங்களை விட்டு ஆலயம் ஆலயமாக ஏறி இறங்குவதால் என்ன பயன் என்கிறார் எமது அபிமானக் கவிஞர்.

**உன்னையே நினைத்திருப்பான்,**
**உண்மையைத்தான் உரைப்பான்**
**ஊருக்குப் பகையாவான் ஞானத் தங்கமே**
**அவன் ஊழ்வினை**
**என்ன சொல்வேன் ஞானத்தங்கமே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் அறியாமையை விளக்கிய கவிஞர், அடுத்த வரிகளில் ஆண்டவனோடு சம்பாஷணையை ஆரம்பித்து விடுகிறார். தான் வாழ்வினிலே பார்க்கும் ஓர் உண்மையான உள்ளத்தின் உண்மையான நிலையைக் கூறுகிறார். அவன் இறைவனைத் தான் எண்ணிக் கொண்டிருக்கிறானாம். எல்லோரிடமும் வார்த்தைக்கு வார்த்தை உண்மையைப் பேசுகிறான், பாவம் அவனுக்கென விதிக்கப்பட்டிருக்கும் அந்த வாழ்க்கையின் படி, உண்மையைப் பேசியதால் அவன் ஊரையே பகைக்கும்படி ஆகிறது. உண்மையில் தெய்வம் உறைவான் என்கிறார்களே, பார்த்தாயா உன் பக்தனுக்கு நடப்பதை? என ஆண்டவனுடன் ஒரு அலசு அலசி விடுகிறார்.

எங்கே அடுத்த பகுதி என்ன சொல்கிறது? கவிஞரின் மனம் என்ன எண்ணுகிறது?

**நஞ்சினை நெஞ்சில் வைத்து,**
**நாவினில் அன்பு வைத்து**
**நல்லவன் போல் நடிப்பான் ஞானத் தங்கமே!**
**அவன் நாடகம் என்ன சொல்வேன் ஞானத் தங்கமே!**

சரி, இறைவனையே நினைத்திருந்து, உண்மையே பேசியவன் ஊரைப் பகைத்த கதை சொன்ன கவியரசர், இப்போது காண்பதென்ன?

ஒரு காட்சியை உருவகப்படுத்திக் கொள்வோமா!

பசியினில் களைத்து உணவுக்கு எவ்வித வழியுமின்றி, ஒரு தடை யோரத்தில் விழுந்து கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதி இட்லித் துண்டை எடுத்து உண்பவனைத் திருடன் என்று கடைக்காரன் துரத்துகிறான். அதை உண்டு முடிக்க முடியாமல் ஓடி ஒளிந்த அந்த ஏழையைப் பார்த்த இந்த மனிதன், ''அடப்பாவமே இத்துணை கஷ்டமா, வா என் கூட'' என்று வீட்டுக்கு அழைத்துச் சென்று கூடத்தில் உட்கார்த்தி, வடையும் தேநீரும் கொடுத்துவிட்டு, இரு வருகிறேன் என்று வெளியே போய் அந்தக் கடைக்காரன் கொடுக்கிறேன் என்று கூறிய பத்து ரூபாவுக்கு ஆசைப்பட்டு, அவனை அழைத்து வந்து இந்த ஏழையைப் பிடித்துக் கொடுக்கிறான்.

அப்படியான ஒரு மனிதனின் இரட்டை வேட நாடகத்தைக் கண்டு, உண்மை கூறியவன் ஊருக்குப் பகையாகிறான், இரட்டை வேடமிடுபவன் சன்மானம் பெறுகிறான், என்று இந்த உலக நடப்பை ஆன்மீகப் பாணியில் இறைவனுக்கே கவியரசர் எடுத்துக் கூறும் அழகே தனி.

அடுத்தொரு முத்தை அள்ளி எடுப்போமா?

தொண்டுக்கென்றே அலைவான்,
கேலிக்கு ஆளாவான்.
கண்டுகொள்வாய் அவனை ஞானத் தங்கமே!
அவன் கடவுளின் பாதியடி ஞானத் தங்கமே!

சாதாரண மனிதரில் இரு வகைகளை எடுத்து மேற்கோள் காட்டி விட்டு, இப்போது தொண்டு செய்யும் தோழனைப் பற்றி வியாபிக்கிறார் எமது கவிப் பெருந்தகை. தொண்டு செய்வதற்காகவே தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளைக் கழித்து, தனக்கென எதுவும் தேடிக் கொள்ளாது, ஒரு பிச்சைக்காரனைப் போல் நடமாடும் ஒருவனைப் பார்த்துக் கேலியாய்ச் சிரிக்குமாம் உலகம் என்கிறார். ஆனால் உறுதியாக அவர் அந்த மனிதத்துவம் படைத்தவன் கடவுளின் பாதியாகி விடுகிறான் என்று மட்டும் கூறுகிறார்.

இனி, அவர் எண்ணைக் கடற்கரை ஓரத்தில் அடிக்கும் அலையைப் பார்ப்போம்!

**பிள்ளையைக் கிள்ளி விட்டு,**
**தொட்டிலை ஆட்டி விட்டு**
**தள்ளி நின்றே சிரிப்பான் ஞானத் தங்கமே!**
**அவன் தான் தரணியைப் படைத்தாண்டி**
**ஞானத் தங்கமே!**

அனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல இந்தக் கண்ணனுடைய தாசன் என்ன கூறுகிறான், மூன்றே வார்த்தைகளில், ஆண்டவனின் வடிவத்தை அழகாய் வடித்து விடுகிறார் இந்த வியத்தகு வித்தகர். அதாவது இந்த உலகத்தில் நடப்பவை அனைத்துக்குமே அவனே பொறுப்பு என்பதை என்ன அழகாகத் தமிழ் கொண்டு செதுக்கி விட்டார் இந்தச் சிந்தனைச் சிற்பி.

ஆமாம் பிள்ளையைக் கிள்ளுவதும் அவர்தானாம். அதாவது இந்த உலகத்தில் பிரச்னைகளின் ஆரம்பம் ஆண்டவன் தான். அது மட்டுமா? அழும் பிள்ளையைச் சாந்தப்படுத்துவதற்காகத் தொட்டிலை ஆட்டுவதும் அவன் தானாம். அவனால் ஆரம்பிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதும் அந்த இறைவனே தான் இந்தத் தரணியையும் படைத்தான் என்று கூறி அனைத்தும் இறைவனே என மிகவும் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்பி விட்டார் கவியரசர் கண்ணதாசன்.

எப்படி எளிமையாக ஆன்மீகத் தத்துவத்தை அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைத்து எமது மொழியிலேயே எமக்குப் புரியவைத்து விடுகிறார் கவியரசர்.

நண்பர்களே! காதல், தத்துவம், சோகம், ஆன்மீகம் எனக் கவிஞரின் பல முகங்களைப் பார்த்தோம், ரசித்திருப்பீர்கள் என்பது எனது நம்பிக்கை.

## 30

தனியே எனக்கோர் இடம் வேண்டும் - தலை
சாயும் மட்டும் நான் அழ வேண்டும்
வானகம் போய்வர வழி வேண்டும் - எங்கள்
மன்னனை நான் பார்த்து வரவேண்டும்!

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர், மூத்த குடிமகன், ஜனநாயகக் காவலன் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களின் மறைவையொட்டி, கவியரசர் கண்ணதாசன் வடித்த பல கண்ணீர்க் கவிதைகளின் ஒன்றின் ஆரம்பமே நான் மேலே கொடுத்துள்ள கவிதையின் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்த தலைவனின் சோகத்தை மறக்க முடியாது, ஒரு கண நேரமாவது அவன் நினைவுகளில் களித்திருப்போம் எனக் கவியரசு வார்த்தைகளில் தீட்டிய சோகச் சித்திரம்.

படித்துப் பாண்டித்தியம் பெற்றவரல்ல கண்ணதாசன் என்கிறார்கள். அப்படியானால் இந்த ஆற்றல் தமிழன்னை அவர்க்களித்த வரம் என்று தானே கொள்ள வேண்டும்! தலைவன் மறைந்து விட்டான், அதுவும் சாதாரணமான தலைவன் அல்லன் அவன். குழந்தைகளால் நேரு மாமா என அன்பாக அழைக்கப்பட்ட மனிதத்துவம் நிறைந்த மாமனிதர் அவர். அத்தகையவரை, தான் அபிமானத்தினால் அண்ணாந்து நோக்கும் அந்த அண்ணல் மறைந்த அந்தத் துயர் மிக்க நிகழ்ச்சியை வருணிக்க ஆரம்பிக்கும் விதத்தைப் பார்த்தால் விளங்கும் அவரின் விவேகம்.

இதற்கு முன்னர் பார்த்திருந்தோம். அந்தப் பாதையில் சில பாடல்களின் அருமையான பகுதிகளைப் பார்ப்போமா? பருவப் பெண் ஒருத்தி ஒரு காளையின் வசம் காதல் வயப்பட்டு விடுகிறாள். காதலில் களித்திருக்கும் கன்னியின் கண்களிலே தெரிவதெல்லாம் உலகின் அழகிய காட்சிகளென்பது நான் சொல்லியா தெரிய வேண்டும்?

ஆனந்தத்தின் உச்சியில் உலா வருபவளின் உதடுகளில் இருந்து பிறக்கும் பாடல்!

**சிட்டுக் குருவி முத்தம் கொடுத்து**
**சேர்ந்திடக் கண்டேனே;**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வானாம் கடலினிலே கலந்திடக் கண்டேனே;
மொட்டு விரித்த மலரினிலே
வண்டு மூழ்கிடக் கண்டேனே;
மூங்கிலிலே காற்று வந்து மோதிடக் கண்டேனே;

உன்னதக் கவிஞனின் உணர்ச்சிப் பெருக்கு! உதட்டின் அசைவால் உருவகிக்கும் வார்த்தை மாலை!

இயற்கையின் அழகை அந்தக் கன்னிப் பெண் எவ்வாறு அனுபவிக்கிறாள் என்பதை நான்கே நான்கு வரிகளில் எம்மனைவரையும் அனுபவிக்க வைக்கும் திறமையைத் தனது தனித்தன்மையாகக் கொண்டவர் கவியரசர்.

பறவை, வானம், மலர், காற்று எனும் இயற்கை படைத்த செல்வங்களின் ஆனந்தமான காட்சிகளால், காதல் வயப்பட்ட அந்தப் பெண்ணின் மனோபாவத்தைப் பாடலைக் கேட்கும் சாதாரண ரசிகனுக்கும் புரியக் கூடிய பாணியில் படைத்திருக்கிறார் கவியரசர்.

சரி, கன்னிப் பெண்ணின் காதல் நினைவுகளின் சங்கமத்தால் மலர்ந்த அந்தத் திரைகானத்தை விட்டு, காளையின் முற்றத்திற்கு வருவோம். ‘பாசம்’ எனும் திரைப்படத்திற்காக அவர் எழுதிய பாடலிலிருந்து ஒரு பகுதியைப் பார்ப்போமே!

நேர் சென்ற பாதைவிட்டு
நான் சென்ற போது வந்து,
வாவென்று அள்ளிக் கொண்ட
மங்கை இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளையவன் சந்தர்ப்ப வசத்தால் நேர் வழியை விட்டுத் தவறி ஒரு திருடனாகி விடுகிறான். ஆனால் அப்போது கூட மனிதத் தன்மை மிக்கவனாகத் திகழ்கிறான். அந்த மனிதனின் இதயச் சுத்தியைக் கண்ட கன்னியவள் அவனது இதயத்திற்குத் தன்னைத் தாரை வார்த்துக் கொடுப்பதோடு அவனையும் நேர்வழிப் பாதைக்குத் திருப்புகிறாள்.

தன்னுடைய வாழ்க்கைப் பாதையைக் காதலினால் எவ்வாறு தன் மனங்கவர்ந்த மங்கையின் உதவியோடு மாற்றியமைக்கிறான் என்பதை அழகாய் விவரிக்கிறார், அழியாப் புகழ் படைத்த கவிஞன் கண்ணதாசன்.

மேற்குறிப்பிட்ட வரிகளின் அர்த்தத்தின் ஆழத்தை அளந்து பாருங்கள்!

அவன் கூறுகிறான் தான் நேர் சென்ற பாதையை விட்டு விலகி நடந்தானாம். அப்போது அவனது தலைவி அவனை வாவென்று அள்ளி அணைத்துக் கொண்டாளாம். புதைந்திருக்கும் பொருள் கண்டீர்களா?

இதன் மறைபொருள், அவன் திருடன் என்று தெரிந்தும் அவள் காதலித்தாள். ஏன் காதலித்திருக்க வேண்டும்?

அவனது உண்மையான இரக்க சுபாவமும், மனிதத் தன்மையும் புரிந்தவளாக அவள் இருக்கிறாள். அதனால் தான் அவனை அணைத்துத் திருத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள்.

கவியரசரின் தமிழ் ஒரு புதை சேறு, அதற்குள் அகப்பட்டுக் கொண்டால் அமிழ்ந்து போக வேண்டியது தான். ஆனால் சாதாரணப் புதை சேற்றினுள் அகப்பட்ட ஒருவன் ''ஐயோ! நான் சாகப் போகிறேன்'' என்ற கவலையுடன் புதைய ஆரம்பிப்பான். ஆனால் கவியரசரின் தமிழ்ப் பாடல்கள் எனும் இந்தப் புதை சேற்றினுள் நுழைவது முற்றிலும் மாறுபட்டது.

''கடவுளே இந்த அழகிய தமிழ் எனும் புதை சேற்றினுள் என்னைச் சிக்க விட்டதற்காக நன்றி'' எனும் மகிழ்வுடன் புதைய ஆரம்பிப்போம்.

## 31

**நா**த்திகவாதம் நயமாகப் பேசியவர்தான் கவிஞர். ஆண்டவனேயில்லை என்று அடித்துச் சொன்னவர் தான் இந்தக் கவி மன்னன். பகுத்தறிவுவாதியெனில் படைத்தவனென்று ஒருவனில்லை பாரில் உள்ள மானிடர் நீவிர் செவி சாய்த்திடுவீர் என மிகப் பாங்காக எடுத்துக் கூறியவர்தான் கண்ணதாசன்.

ஆனால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கையால் அர்த்தமுள்ள இந்துமதம் எழுதப்பட வேண்டும் என்று அந்த ஆண்டவன் இட்ட கட்டளையோ என்னவோ, ஆன்மீகவாதத்தினுள் ஆழத் தன் காலை வைத்தார் கவிஞர். அவரது சுயசரிதத்தைப் படிக்கும் போது, அவரது மனமெனும் நீரோட்டத்தின் தெளிவுக்குக் காரணம் ஆன்மீக அனுபவமே என்பது எமக்குத் தெளிவாகும்.

கவிஞரின் வார்த்தைகளிலேயே, ''நான் ஆன்மீகவாதியாக வேண்டும் என்பது ஆண்டவன் விருப்பம் போலும்'' என்ற வாக்கியம் ஒன்றே அவர் ஆன்மீகப் பாதையை நாடிய போது, அது திரும்பத் தன் தாய் வீட்டுக்கு வருவது போன்ற இயற்கை உணர்வுடன் கூடிய ஒரு நிகழ்வு என்பது தெளிவாகிறது.

கண்ணதாசனை ஏன் ஆராய வேண்டும் எனும் கேள்விக்கு, தமிழை அவர் எவ்வாறு கையாண்டார். தமிழ் அவரை எவ்வாறு கையாண்டது என்பதை அறிவதற்காக என்று சொல்வது அர்த்தமுள்ள பதிலாகிறது.

பாடல்கள் எழுதும் போது சிலர் சுவையாக அழகு தமிழில் எழுதுவார்கள், மற்றும் சிலர் மிகவும் எளிமையாக இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய தன்மையுடன் எழுதுவார்கள். ஆனால் கவியரசர் கண்ணதாசனோ! அழகு தமிழையும், எளிமையையும் கலந்து அனைவருமே தமிழின் எழிலை, தமிழன்னையின் பேரழகை ரசிக்கக்கூடிய வண்ணம் எழுதக்கூடிய ஆற்றல் கொண்ட ஒருவராக இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரேயொரு பாடலின் முதலிரண்டு அடிகளையும் எடுத்துப் பாருங்கள்!

**அர்த்தமுள்ள இந்துமதம் அது என்ன சொன்னது - அது**
**அவரவர் கடமைகளை எடுத்துச் சொன்னது**

இதை விட இலகுவாக, எளிமையாக ஓர் ஆழமான விடயத்தை அழகு தமிழில் எப்படிக் கூறிட முடியும்? இந்து சமயத்தைப் பற்றி, அதன் வாழ்க்கைத் தத்துவங்களைப் பற்றி எத்தனையோ பெரிய கல்விமான்கள், ஞானிகள் விவரித்துள்ளார்கள். ஆனால் அவர்கள் எத்தனையோ புத்தகங்களில் கூற விழைந்ததை, எமது கவிதைக் கோமகன் இரண்டே வரிகளில் எடுத்தியம்பி விட்டார்.

அது தான் கண்ணதாசன்! அதனால்தான் அவரைத் தமிழன்னையின் அருள் பெற்ற மைந்தன் என்று கூறுகின்றோம்.

இப்போது நாம் எடுத்துப் பார்க்கப் போகும் கவியரசரின் பாடல் அவருக்குப் பிடித்தமான ஒரு இனிமையான பாடல், இந்தப் பாடலைப் புகுத்துவதற்காகவே இந்தப் படத்தை அவர் தயாரித்தாரோ என்று கூட எண்ணத் தோன்றுமளவிற்குக் கவியரசர் இப்பாடலை விரும்பினார் என்று சில குறிப்புகள் கூறுகின்றன. ஆமாம் இந்தப் பாடல் ''சிவகங்கைச் சீமையிலே'' எனும் திரைப்படத்திற்காக, பிரபலமான பின்னணிப் பாடகர் திருச்சி லோகநாதன் அவர்களால் பாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் தத்துவங்களை விவரிக்கும் பாடல்களுக்கெல்லாம் இது ஒரு மணி முடியாக அமைவது போன்று இருக்கும். எங்கே ரசிப்போமா?

**ஆசையே அலைபோலே!**
**நாமெல்லாம் அதன் மேலே**
**ஓடம் போலே ஆடிடுவோமே**
**வாழ்நாளிலே!**

எப்படியாக வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளைக் கவிஞர் புரிந்து வைத்திருக்கிறார் என்று பார்த்துக் கொள்ளுங்கள்! கடலின் அலையானது எப்போதுமே ஒன்று போல இருக்காது. சுற்றுப்புறச் சூழ்நிலைகளான வெப்பம், காற்று என்பனவற்றினால் பாதிக்கப்பட்டுத் தனது அலையாட்டத்தில் மாறுபட்டு மறுதலித்துக் கொண்டிருக்கும்.

தினமும் தனது மனத்தின் ஆசைகளின் அளவைச் சுற்றுப்புறச் சூழல்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் மானிட மனத்தின் ஆட்டத்தை அந்தக் கடல் அலையின் ஆட்டத்திற்கு ஒப்பிட்டு விவரிக்கும் கவியரசரின் அனுபவ அறிவை எவற்றுடனாவது நாம் ஒப்பிடுவது சாத்தியமா?

அந்த வகையான ஆசையின் ஆட்டத்திற்கு நாமனைவருமே கட்டுப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதையும் கூறி, இந்த ஆசை அதன் மூலம் எழும் தேவைகள் என்பன சாதாரண சராசரி மனிதனின் அன்றாட வாழ்க்கை முறையே என்று வேறு சொல்லி வைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம் என்னும் காற்றிலே
பறக்கும் காதல் தேரிலே
ஆணும் பெண்ணும் மகிழ்வார்
சுகம் பெறுவார் அதிசயம் காண்பார்

காற்று அடிப்பது தெரிகிறது, ஆனால் கண்ணை மூடித் திறப்பதற்குள் அது எம்மைத் தழுவி ஒரு கணநேர இன்பத்தை அளித்து விட்டு, கடந்து விடுகிறது.

எமது பருவத்தைக் கூட அத்தகைய ஒரு அவசர ஓட்டத்திற்கு ஒப்பிடுகிறார் கவியரசர் கண்ணதாசன். அது மட்டுமே காதல் எனும் அந்த இனிமையான அனுபவத்தை ஒரு தேரோட்டத்திற்கு ஈடாக்குகிறார். தேரில் ஏறி இருந்து ஒரு பயணம் போய்ப் பாருங்கள்! அதன் இனிமை புரியும். அதிலே நிற்கும் போது ஒரு இராஜ கம்பீரமும், இனிமையாக ஆடி அசைந்து எமைக் கொண்டு செல்லும் போது ஓர் இன்பக் கிளுகிளுப்பும் கிடைக்கின்றனவே அப்படிப்பட்டது தான் காதல் வயப்பட்டவருக்குக் கிடைக்கும் இன்பம் என்கிறார்.

இத்தகைய ஓர் உறவினில் தம்மை இணைத்து ஆணும் பெண்ணும் மகிழ்வார்களாம், அது மட்டுமா? அந்த இணைவின் பெறும் பேறாகச் சுகம் பெறுவார்களாம். இத்தகைய ஒரு இனிமையான பந்தம் கொடுத்த இன்பம் அவர்களுக்கு நிச்சயம் ஒரு அதிசயம் தானே!

பாவம் காதல் வயப்பட்ட அந்த உள்ளங்களுக்குத் தெரியுமா எத்த கையதொரு வாழ்க்கையைத் தாம் எய்தப் போகிறார்கள் என்று?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை எத்துணை லாவகமாகக் குறிப்பிடுகிறார் என்று பாருங்கள்.

நாளை உலகின் பாதையை இன்றே
யார் காணுவார்?

இளம் உள்ளங்கள் சந்திக்கின்றன; காதல் வயப்படுகின்றன; ஆனால் அவர்களின் காதல் வெற்றியில் முடிவதும், அப்படியே வெற்றியடைந்த காதல் தொடர்ந்து இன்பகரமான வாழ்வாக அமைவதும், அந்த இருவரது கைகளில் மட்டுமா இருக்கிறது? இல்லையே சுற்றுப்புறச் சூழல்கள், சமுதாய அழுத்தங்கள், உறவினர்களின் நோக்கு என்பன சில வெற்றி பெற்ற காதலர்களின் வாழ்வைக் கூடத் திசை திருப்பி விடுகின்றன.

அதே சமயம், எந்த வகையிலுமே வெற்றியளிக்காது என்று எண்ணிய சிலரின் வாழ்க்கை. மற்றையோர் பார்த்துப் பொறாமைப்படும் அளவிற்கு அழகாக அமைந்து விடுகிறது.

இந்தக் கருத்தை என்னே அழகாகக் கவியரசரின் மேலே குறிப்பிட்ட வரிகள் விளக்கி விடுகின்றன.

வாழ்வில் துன்பம் வரவு
சுகம் செலவு
இருப்பது கனவு
காலம் வகுத்த கணக்கை இங்கே
யார் காணுவார்?

மிகவும் அவதானமாக எண்ணிப்பாருங்கள் நண்பர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்வில் இன்பமான நாட்கள் செல்லச் செல்ல அது செலவு போலத் தானே இருக்கிறது! உதாரணத்திற்கு நாம் சிறுவர்களாக இருக்கும்போது, பாடசாலை நாள்களில் வரும் ஆண்டு விடுமுறையை எடுத்துக் கொள்ளுங்கள். அது எவ்வளவு சீக்கிரம் முடிந்து விடுகிறது. பின்பு அடுத்த விடுமுறைக்காக எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டியதாகவுள்ளது? அந்த நாள்களில் உங்கள் மனதில் நீங்கள் அடைந்த உணர்வுகளைத் திரும்ப ஒரு முறை இரவல் வாங்கி அனுபவித்துப் பாருங்கள். நான் சொன்ன கருத்தின் யதார்த்தம் புரியும்.

நாம் அதைச் செய்யப் போகிறோம், இதைச் செய்யப் போகிறோம் என்று எமக்குள்ளே பல கணக்குகளை வகுத்துக் கொள்கிறோம். அதை நோக்கி எவ்வளவு சிரத்தையாக முன்னேறினாலும் காலத்தின் அனுக்கிரகம் இன்றி அது கை கூடுவதில்லை. இதைத் தான் கவிஞர் அழகாகக் காலம் போடும் கணக்கை யாரால் காண இயலும் என்று கேட்கிறார்.

தனது இளமைக் காலம் முழுவதும் டாக்டராக வேண்டும் என்ற கனவுடனும், இலட்சியத்துடனும் வாழ்ந்து வந்த ஒருவன் அல்லது ஒருத்தி அதற்குத் தேவையான படிப்பில் எவ்வளவு திறமையாக இருந்தாலும், வேறு காரணங்களினால் தமது கனவை நிறைவேற்ற முடியாமல் போவதை எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் கூடக் கண்கூடாகப் பார்த்திருக்கிறோமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசர் கண்ணதாசன் ஒரு இலக்கியத் தடாகம். அவரது இந்தத் தடாகத்தினுள் குதித்து மலர்ந்திருக்கும் அழகிய இலக்கிய மலர்களைக் கொய்து வாசகர்களாகிய உங்களது காட்சிக்கு வைப்பதுவே எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும்!

## 32

தன்னம்பிக்கை என்பது ஒரு மனிதனுக்கு இன்றியமையாதது. ஒன்றுமே இல்லை எனும் நிலையிலிருந்து எல்லாமே இருக்கிறது எனும் நிலையைத் தன்னம்பிக்கையின் உதவியோடு ஒரு மனிதன் அடைந்து விடலாம். கவிஞரின் வெற்றியின் ரகசியம் தன்னம்பிக்கை என்று சொல்லலாம்.

கவிஞர் கண்ணதாசன் குறைகளற்ற ஒரு மனிதன் என்று கூறி விட முடியாது. ஆனால் அந்தக் குறைகளுக்கெல்லாம் ஒரு மகுடம் வைத்து மக்களின் மனத்தில் ஏற்றிவிடக் கூடிய வல்லமை அவரிடத்தில் இருந்தது. தன்னிடம் உள்ள குறைகளைத் தானாகவே மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லி அதை முன்னுதாரணமாக்கி அதன் அனுபவத்தின் அடிப்படையில் மக்களுக்கு அறிவுரை அளிக்கும் துணிச்சல் இருந்தது. மனத்தில் ஆழப் பதிந்த வடுக்களைப் பாடங்களாக்கினார். அதை அர்த்தம் பொதிந்த மதத்தின் அடிப்படையில் நோக்கினார். தனது விளக்கங்களை அள்ளி மக்களுக்கு வழங்கினார். அதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசர் கண்ணதாசனின் படைப்புகளுக்குக் கலசமாயிற்று.

ஓர் ஆணும், பெண்ணும் காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டார்கள். நடுத்தர வர்க்கத்தின் அடையாள முத்திரையான ஆண், பெண் இருவருமே உழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். தனது குடும்பத்தின் தேவைகளைத் தான் தனது மனைவி பொறுப்பேற்கிறாள் என்று அறிந்திருந்தும், மனைவியின் மேல் அனைவருக்கும் இருக்கும் அன்பையும், மதிப்பையும் கண்டு பொறாமை கொள்ளும் கணவன்.

என்ன நண்பர்களே! ஞாபகம் வருகிறதா? ஓர் அருமையான திரைப்படம் ''சூரியகாந்தி,'' முத்துராமன், ஜெயலலிதா அவர்களின் சிறப்பான நடிப்பினால் மெருகூட்டப்பட்ட படம். அதிலே அந்தக் கணவனின் மனநிலையை விளக்கும் ஒரு பாடல், சமுதாயத்திலே ஆண்கள் தான் பெண்களை விட மேலான ஒரு நிலையில் இருக்க வேண்டும் என்னும் ஒரு சட்டமாக்கப்படாத விதிமுறை, தொற்று நோய் போல தொற்றிக் கொண்டது. இந்த 21ஆம் நூற்றாண்டில் கூட இப்படிப்பட்ட ஆண்களை நாம் காணலாம். கவிஞர் கண்ணதாசனின் மனத்திலே இந்தக் காட்சி எப்படி வியாபிக்கிறது என்பதை, இந்தக் காட்சிக்காக அவர் எழுதிய பாடலில் இருந்து பார்ப்போம். இது டி.எம்.எஸ். தனது கணீரென்ற குரலினால் உயிர் கொடுத்த கவிஞரின் அருமையான பாடல்களில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புக்கும், கருடனுக்கும் உள்ள உறவு உங்களுக்குத் தெரியும் தானே! பாம்பைக் கண்டால் கருடன் உயிரோடு விட்டு வைக்க மாட்டான். அதே போல் கருடன் இருக்கும் இடத்திலே பாம்பின் நிழல் கூட இருக்காது.

இதுதான் யதார்த்தம்.

இங்கே என்ன நடக்கிறது? பாம்பு போய், உலகத்தின் காவலன் பரமசிவனின் கழுத்தில் அமர்ந்து கொண்டதாம். அமர்ந்து கொண்ட பாம்பு சும்மா இருந்திருக்கலாமே! கருடனைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்ளும் பாம்பு, அந்தக் கருடனைப் பார்த்துப் புன்னகையுடன் ''சௌக்கியமா?'' என்கிறது.

''ம்... இரு, இரு பரமசிவன் கழுத்தில் எப்போதுமே இருந்து விடலாம் என்ற எண்ணமா? பார்த்துக் கொள்கிறேன்'' என்று கறுவிக் கொள்கிறது கருடன்.

இதை அழகாக எமது கவியரசரின் வரிகளிலே பார்ப்போம்!

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா? யாரும்
இருக்குமிடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே, கருடன் சொன்னது
அதில் அர்த்தம் உள்ளது.

வாழ்க்கையின் யதார்த்தத்தை எமது தெய்வங்களின் வடிவங்களோடு சம்பந்தப்படுத்திச் சாதாரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கும் புரியக் கூடிய வகையில் கவிஞர் பாடல் தந்திருப்பதன் வகையைப் பார்த்தீர்களா? எங்கே அடுத்த பகுதியைப் பார்ப்போம்!

**உயர்ந்த இடத்தில் இருக்கும் போது**
**உலகம் உன்னை மதிக்கும் உன்**
**நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால்**
**நிழலும் கூட மிதிக்கும்**

**மதியாதார் தலைவாசல் மிதிக்காதே என்று**
**மானமுள்ள மனிதருக்கு ஔவை சொன்னது**
**அது ஔவை சொன்னது**
**அதில் அர்த்தமுள்ளது**

உண்மை தானே! ஒரு மனிதனின் நிலை உயர்ந்திருக்கும் போது தான் தனது தலையை உயர்த்தி இந்த உலகம் பார்க்கிறது! ஆனால் அதே மனிதனின் நிலை தாழ்ந்து வந்தாலோ அவனது நிழல் கூட அவனை மிதித்துத் தான் போகிறதாம்.

அருமையாக எடுத்துக் காட்டுகிறார் எங்கள் ஏழிசைக் கவிஞர். அந்தக் காட்சியில் வரும் அந்தக் கணவனின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார். அதாவது அவனது மனைவியின் நிலை அவனது நிலையை விட உயர்ந்து விடுகிறது. அப்போது அவனது குடும்பத்தினரே அவன் மனைவியைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். அந்த மனிதனின் மனதில் வேதனை பொங்குகிறது. தான் தனது நிழல் போல எண்ணியிருந்த தனது குடும்பம் கூடத் தன்னை மிதிக்கிறதே என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதங்கப்படுகிறான். அடுத்த அடி எம் கவி எவ்வகையாய் எடுத்துத் தந்திருக்கிறான்?

வண்டி ஓடச் சக்கரங்கள் இரண்டு மட்டும் வேண்டும்
அந்த இரண்டில் ஒன்று சிறியதென்றால்
எந்த வண்டி ஓடும்?
உனைப் போலே அளவோடு உறவாட வேண்டும்
உயர்ந்தோரும், தாழ்ந்தோரும் உறவு கொள்வது
அது சிறுமை என்பது அதில் அர்த்தம் உள்ளது

பாதையிலே ஓடும் வண்டி, அதன் சக்கரங்களிலே ஒன்று சிறியது என்று வைத்துக் கொள்ளுங்களேன். தான் போக எண்ணிய இடத்தை அந்த வண்டி அடையுமா? இல்லை அதன் பயணம் தான் ஒரு சீரான பாதையில் போக முடியுமா?

எவரும் தமது அந்தஸ்து அறிந்து பழகிக் கொள்ள வேண்டும் என்கிறார் இந்தக் கவிராயர். உயர்ந்த நிலையில் இருப்போர்களும், தாழ்ந்த நிலையில் இருப்போர்களும் உறவாடும் போது அங்கே நிச்சயம் அவரவர் நிலைமைகளில் இருக்கும் வேறுபாடு தலை தூக்கத்தான் செய்யும். இந்த யதார்த்தத்தை அழகாக எடுத்து இயம்புகிறார் கவியரசர் கண்ணதாசன்.

நீயும் நானும் சேர்ந்திருந்தோம்
நிலவும் வானும் போலே நான்
நிலவு போலத் தேய்ந்து வந்தேன் நீ வளர்ந்ததாலே
என்னுள்ளம் எனைப் பார்த்துக் கேலி செய்யும்போது
இல்லாதான் இல்வாழ்வில் நிம்மதியேது? இது
கணவன் சொன்னது இதில் அர்த்தமுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவு இல்லாவிட்டால் வானுக்கு அழகு இல்லை. அதே போல வான் இல்லாவிட்டால் நிலவு தனது அழகை எங்கே ஊர்வலமாய் எடுத்துச் செல்லப் போகிறது? இவை இரண்டும் சேர்ந்திருக்கும் போது தான் இயற்கை அழகு கொடி கட்டிப் பறக்கிறது.

அதே போலத்தான் குடும்ப வாழ்க்கையும்; கணவனும், மனைவியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, சமமான பங்கோடு வாழ்வதை நிலவும் வானும் சேர்ந்த போது ஜொலிக்கும் அழகிற்கு ஒப்பாக்குகிறார் எமது ஒப்பற்ற கவி.

அப்போது அந்தக் கணவன் என்ன சொல்கின்றானாம்? தனது மனைவியின் வளர்ச்சி, அவள் அடையும் புகழ் தன்னைச் சிறுமைப்படுத்துகிறது என்று அவனது உள்ளமே அவனைக் கேலி செய்கின்றதாம்.

இங்கே கவிஞர் தனது கருத்துக் குவியலினுள் புதைத்து வைத்துள்ள மற்றுமோர் உன்னதக் கருத்தைப் பாருங்கள். அவர் என்ன சொல்ல விழைகிறார் என்றால், அந்தப் பெண், அதாவது இந்தக் காட்சியில் குறிப்பிடும் மனைவி அடைந்த உயர்வினால் அவள் அவளது கணவனைச் சிறுமைப்படுத்தவில்லை. அவனது உள்ளம் தான் அவனைச் சிறுமைப்படுத்துகிறதாம்.

அதாவது, தன் உள்ளமே தனக்கு எதிரி என்று சொல்கிறார்களே, அப்படியானதொரு சூழ்நிலையில் தனக்குத்தானே அவன் தாழ்வு மனப்பான்மை கொள்கிறானாம். இங்கே தான் அந்தப் புரிந்துணர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கிடையில் முற்றுப் பெறவில்லை என்பதைச் சூட்சுமமாகத் தெரிவிக்கிறார் கவியரசர்.

நண்பர்களே கண்ணதாசனைப் பற்றி ஆராயும் போது அவரது திரைப்படப் பாடல்களை எடுத்துச் சிறிது பகுப்பதன் மூலம் அந்த ஆற்றல் மிக்கவரின் பன்முகங்களையும் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கிறது. இத்தனை ஆயிரம் பாடல்கள், இத்தனை ஆயிரம் நிலைமைகளுக்கு அவரால் வடிக்க முடிந்தது என்றால், எத்தனை ஆயிரம் அனுபவ மைல்களைக் கடந்துள்ளார் என்பது புரியவரும்.

அடுத்து மற்றுமொரு முத்துடன் மாலை கோக்க வருகிறேன்.

## 33

இரண்டு அடிகளில் ஒரு பொருள் தத்துவத்தை எடுத்தியம்பும், தமிழ்ப்பெரும் இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளை எவ்வாறு எமது கவியரசர் சாதாரண மக்கள் மத்தியில் கொண்டு வருகிறார் என்று இப்போது பார்ப்போம்.

**யான்நோக்குங்காலை நிலன் நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்.**

காதல் பருவமதில் காளையும், கன்னியும் எதிர் எதிரே. கன்னி மனமதில் குடிபுகுந்த காளையினைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுவிட்டால், அம்பு போன்ற அவள் பார்வை அவனைத் துளைத்தெடுக்க விரும்பாதா என்ன? ஆனால் கன்னியவள் கூடப் பிறந்த நாணம் எனும் விலங்கு அவளைத் தன்னிச்சை போல நடக்க விட்டு விடுமா?

அவன் அவளைப் பார்க்க, அவள் தரை பார்க்க, அவன் விண் பார்க்க, அவள் அவன் முகம் பார்க்க, காதல் பாடத்தின் அரிச்சுவடி, ஆரம்பம் அதுதானே!

கவியரசர் இக்குறளைத் திரைகானமாக்கி எமக்கு விருந்தாக்குகிறார்.

உன்னை நான் பார்க்கும்போது
மண்ணை நீ பார்க்கின்றாயே
விண்ணை நான் பார்க்கும் போது
என்னை நீ பார்க்கின்றாயே

எத்தகைய எளிமையான விளக்கத்தின் மூலம் தமிழால் எம்மைத் தாலாட்டி, வள்ளுவனை சமுதாயத்தின் அடிமட்ட மனிதன் வரை அழைத்து வந்து விடுகிறார் கவிஞர்.

அது மட்டுமா? அதிலே கலந்திருக்கும் கருத்தைக் கவனியுங்கள். அவன் அவளைப் பார்க்கும் போது அவள் எங்கே பார்க்கின்றாள்? தமிழ் நங்கையின் தனிப்பெருஞ் சீதனமான நாணம் தலையெடுத்த அவள் வதனம் கீழ் நோக்கி, கண்கள் மண்ணைப் பார்க்கின்றனவாம். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! எம்மண் பெண்களின் பெருங்குணமே மண் பார்த்து நடப்பது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது எம் ஏறு போல் பீடு நடையிடும் காளை என்ன செய்கிறான்? மெதுவாக விண்ணைப் பார்க்கிறானாம். அடடா இந்த வேளைக்காகத் தானே காத்திருந்தேன் என்று அந்தப் பூமகள் தன் உள்ளங்கவர் கள்வனைப் பார்க்கிறாளாம்.

எங்கோ அடுத்தொரு முத்து பளிச்சிடுகிறதே!

அழுகுணிச் சித்தர் என்பவரின் பாடல்களில் ஒன்று. வாழ்க்கையை வெறுத்து, சித்தர்களுக்கே உரிய பாடல் ஒன்றிலிருந்து எடுத்த சில வரிகளை, நமது கவிஞர் எப்படித் தமது அனுபவம் எனும் தேன் தடவி எமக்கு விருந்தளிக்கிறார் என்று பார்ப்போம்.

பையூரிலே யிருந்து பாழூரிலே பிறந்து
நெய்யூரிலே போவதற்கு வேதாந்த வீடறியேன்

வாழ்க்கையின் ரகசியத்தை அப்படியே புட்டு வைக்கிறார் சித்தர். தத்துவத்தில் மிதந்து லௌகீகத்தை ரசித்துத் தனது அனுபவங்களைச் சேர்த்த கவிஞர் சித்தர்களுக்கெல்லாம் சித்தரல்லவா!

உடலூரில் வாழ்ந்திருந்தேன்
உறவூரில் மிதந்திருந்தேன்
கருவூரில் குடிபுகுந்தேன்
மண்ணூரில் விழுந்து விட்டேன்

கவிஞர் கண்ணதாசன் சித்தரின் தத்துவத்தை நம் மத்தியில் சுலபமாய் உலவ விட்டுவிட்டாரே!

ஒரு குழந்தை பிறப்பதன் முன்னால் அது தனது தந்தையினதும், தாயினதும் இரத்த அணுக்களுடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலந்து அவர்களது உடலில் வாழ்ந்திருக்கிறது. பின்பு கணவன், மனைவி குடும்ப உறவு முறையில் மிதந்து வருகிறதாம். அத்தோடு அதனது தாயின் கருவறையில் பத்து மாதங்கள் குடியேறி வாழ்க்கை நடத்துவதும் நியதியாகிறது. இறுதியாக இந்தப் பாழும் புவியில் வந்து விழுந்ததை அழகாக மண்ணூரில் விழுந்தேன் என்று குறிப்பிடுகிறார்.

இதோ என்ன? ஏதோ பளிச்சிடுகிறதே! ஓ மற்றொரு முத்தா?

ஒரு மன்னனின் கடமை என்ன? தனது நாட்டுப் பிரஜைகள் அனைவரையும் சமமாகப் பாவித்து நீதி வழங்குவதே. ஒருவனுக்குக் கை நிறையப் பொன்னை அள்ளிக் கொடுக்கும் வேந்தன், மற்றொருவனை வெறுங்கையுடன் அனுப்புவது என்னே முறை என்று தனது தோழியிடம் முறையிடுகிறாளாம் இந்தப் பூச்சூட்டும் பூவை.

முத்தொள்ளாயிரத்தின் முதற் பாடல் இதை எவ்வாறு கூறுகிறது என்று பார்ப்போமா?

மண்ணுயிர்க் காவல் தனதான அவ்வுயிருள்
என்னுயிரும் எண்ணப்படுமாயின் - என்னுயிர்க்கே
சீரொழுகு செங்கோற் செழியர்க்கே தக்கதோ?

தனது உள்ளங் கவர் கள்வன் ஒரு மன்னவன். ஒரு மன்னவனானவன் தன்னுடைய மண்ணிலுள்ள உயிர்களுக்கெல்லாம் காவலன் ஆவான். அப்படியிருக்க அவன் எவ்வண்ணம் தன்னைக் காக்காது விட்டான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தன் தலைவனின் மீது பொய்க்கோபம் கொண்டு தோழியிடம் வினவுகிறாள் தலைவி.

இந்தப் பாடலின் கருத்தை ரசித்த கவியரசர் கண்ணதாசன் எப்படி மக்களிடம் இந்தப் பாடலை திரைகானத்தின் மூலம் கொண்டு வருகிறார் என்று பாருங்கள்.

**என்னுயிர்த் தோழி கேளொரு சேதி**
**இது தானோ உங்கள் மன்னவன் நீதி**
**தன்னுயிர் போல மன்னுயிர் காப்பான்**
**தலைவன் என்றாயே தோழி!**

முத்தொள்ளாயிரத்தை முற்றத்துத் தமிழுக்கு மாற்றி அனைவரையும் தமிழின்பம் அடையச் செய்த கவியரசரின் அற்புத ஆக்கங்கள் சிலவற்றைப் பார்த்தோம்.

## 34

கையிலே கதவு அடிக்கின்றது. "அம்மா!" என்கிறோம். சில விநாடிகளில் வேதனை மறைந்து விடுகிறது. ஆனால் உற்ற நண்பன் எம்மை ஏமாற்றுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தத் துரோகத்தனம் கொடுக்கும் வேதனை இதயத்தில் வலியாகி விடுகிறது. அதே போல உயிராக மதித்த காதலனோ அன்றிக் காதலியோ காதலையே தூக்கி எறிந்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பப்பா! அது கூட இதயத்தை ரணமாக்கி விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காயங்கள் இதயத்தில் ஏற்படுத்திய வடுக்கள் அனுபவம் எனும் தடமாகி விடுகிறது. அந்த அனுபவத்தின் அடிப்படையிலே அழகு தமிழுடன் சேர்ந்து கவிதைகளாகவும், திரைகானங்களாகவும் கவியரசர் எமக்களித்த அற்புதப் படைப்புகள் பல.

அதே வரிசையில் மிகவும் அருமையாகக் கவியரசரினால் தீட்டப்பட்ட பாடல் ஒன்றை எடுத்துப் பார்க்க விழைகின்றோம்.

'முத்து மண்டபம்' என்னும் படத்திற்காகக் கவியரசரின் கற்பனையில் உதித்து, டி.எம்.எஸ். இன் குரலில் இசைத்த இந்தப் பாடலை முணுமுணுக்காத வாய்களே இல்லை என்று சொல்லலாம்.

**சொன்னாலும் வெட்கமடா!**
**சொல்லா விட்டால் துக்கமடா!**
**வெட்கமுமில்லாமல் துக்கமுமில்லாமல் வாழுகிறேன்**
**ஒரு பக்கமடா!**

இந்த நிலைமை தமது வாழ்க்கையில் தோன்றாதவர்களின் எண்ணிக்கையை விரல்களில் எண்ணிவிடலாம். அடடா! என்னே அழகான மனநிலை விளக்கம். அந்த ஒருவனுக்கோ, ஒருத்திக்கோ வாழ்க்கையில் நடந்தது மிகவும் வெட்ககரமான விட(ஷ)யம். அதைச் சொன்னாலோ ஒரு சாரார் எள்ளி நகையாடப் போகிறார்கள், மற்றொரு சாரார் ''சொன்னேன் கேட்டியா? இப்பப் பாரு நடந்ததை'' என முற்றும் அறிந்தவர் போல விளக்கம் கொடுப்பார்கள். ஆனால் அதற்காக அதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாமல் இருக்க முடியவில்லையே என்று நாயகன் புலம்புகிறான்.

பொன்னோடு பொருள் படைத்தேன்
பூவைக்கு நான் பூ முடித்தேன்
மன்னாதி மன்னனைப் போல்
மாளிகையில் வாழுகிறேன்

ஐயோ! அந்த மனிதனைப் பாருங்கள், அவனிடம் இருக்கும் அழகான, விலையுயர்ந்த கார் போல என்னிடம் இல்லையே? அதோ அவன் எத்தனை அழகான வீடு வைத்திருக்கிறான், என் வீட்டையும் தான் பாருங்களேன்! எனத் தினமும் தமது வாழ்க்கையில் இல்லாத பலதையும் எண்ணி ஏங்கும் மானிடரைப் பார்த்திருக்கிறோம். ஆனால் சாதாரண மனிதர்கள் பார்த்து ஏங்கும் சகலத்தையும் தான் பெற்று விட்டேன் என்றும், அதனை ஒரு சுமையாகவும் ஒருவன் சொல்கிறான் என்றால் அவன் மனத்தில் ஓடும் சோக நீரோட்டம் ஒரு வெள்ளமாகத் தானே இருக்க வேண்டும்.

பாய்விரித்துப் படுப்பவரும்
வாய்திறந்து தூங்குகிறார்
பஞ்சணையில் நான் படுத்தும்
நெஞ்சில் ஓர் அமைதியில்லை

படுப்பது எங்கே என்பது கேள்வியில்லை. ஆனால் படுப்பவனின் மனத்தில் தெளிவு வேண்டும். தனக்கு அளிக்கப்பட்டது இவ்வளவு தான் எனும் மனப் பக்குவம் வேண்டும். அதற்காகத் தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கூடிய வகையில் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமான முயற்சிகளும் எடுக்கப்படக் கூடாது என்பதல்ல. ஆசைகள் நியாயமானவையாக இருக்குமட்டும், பேராசைகளாக மாறாத மட்டும் மனத்தில் பக்குவம் நிலை கொள்ளும். இதையே கவியரசர் தெளிவாகத் தனது அனுபவ ஞானத்தின் மூலம் அவிழ்த்து விடுகிறார்.

கொஞ்சிவரும் கிளிகளெல்லாம்
கொடும்பாம்பாய் மாறுதடா
குத்திவிட்டுப் புத்தனைப்போல் சத்தியமாய் வாழுதடா

இதுகூட மிகவும் அருமையான உவமானமே! கிளியைப் பார்த்ததும் எமது மனதில் கனிவு பொங்குகிறது. அதன் அழகில், அதன் கிள்ளை மொழியில் எமது மனத்தைப் பறி கொடுக்கிறோம். ஆனால் அந்தக் கிளி மெள்ள மெள்ளத் தத்தி வந்து எமது அன்புக்குப் பாத்திரமாகிவிட்டு, நாம் சிறிது கண்ணயரும் போது கொத்தி விட்டுப் பறந்து போகிறது. அப்போது எமக்குப் புரிகிறது. ஓ! இது கிளியல்ல கிளி வேஷத்தில் வந்த பாம்பு என்று. மறந்து போய்ச் சும்மா இருக்குதா? இல்லையே அதைப் பற்றி அறியாத இடத்தில் சென்று புத்த போதனை செய்து மக்கள் மனத்தை மயக்குகிறதாம். கொத்து வாங்கிய நாம் போய் என்ன கத்தினாலும், அந்தக் கூட்டம் என்ன, நம்பப் போகிறதா?

நண்பர்களே, கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! நம் எல்லோருக்குமே வாழ்க்கையில் இப்படிப்பட்ட ஒன்றிரண்டு பேரையாவது தெரிந்திருக்குமே! இது தான் கவியரசர். எமது உள்ளங்களோடு பேசுகிறார். எமக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்த மொழியில் பேசுகிறார். எமது இதயவீணையின் நரம்புகளை ஒவ்வொன்றாய்த் தட்டிவிடுகிறார்.

**இல்லாத மனிதருக்கு**
**இல்லையெனும் தொல்லையடா**
**உள்ளவர்க்கு வாழ்க்கையிலே**
**உள்ளதெல்லாம் தொல்லையடா**
**உன் வாழ்வை நினைக்கையிலே**
**என் மனசு தவிக்குதடா**

அதோ பாருங்கள். தெருவோரத்திலே படுக்க இடமின்றி நிலவின் வெளிச்சத்தில் ஆகாயம் எனும் கூரையின் கீழ், பூமி எனும் பஞ்சணையில் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருக்கிறானே, அவனைப் பார்த்துப் பொறாமை கொள்கிறான் இந்த ''உள்ளவன்.''

'இருப்பவன் வாழ்க்கையில் இருப்பதெல்லாம் தொல்லை' - சத்தியமான வரிகள்

**வண்ணமுத்து மண்டபமும் வைரமணிப் பஞ்சணையும்**
**உன்னிடத்து நான் தருவேன் நிம்மதியை நீ தருவாய்**

களைத்துவிட்டான் போங்கள். இத்தனை அமைதியின்மைக்கா நான் இத்துணை பொருள் சேர்த்தேன்? வேண்டாமப்பா! உன்னிடம் சகலத்தையும் கொடுத்து விடுகிறேன், உன்னிடம் இருக்கும் நிம்மதியை மட்டும் எனக்குத் தா என்கிறான்.

நண்பர்களே! இங்குக் கவிஞர் சொல்ல விழைவது என்ன? பணம், பதவி, அந்தஸ்து இருப்பவர் எல்லாம் நிம்மதியாக வாழ்வதும் இல்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டப்பட்டவன் நிம்மதியின்றி இருப்பதுவும் இல்லை. எல்லாவற்றிற்கும் மனமும், முயற்சியுமே காரணம். நல்லவனாக மற்றவர்க்குத் துன்பம் விளைவிக்கா வண்ணம் வாழ்வது ஒன்றே இந்த உலகில் நிச்சயமாகிறது என்கிறார்.

## 35

குழந்தை அழுகிறது. தாய் தாலாட்டுகிறாள். அப்படியே சத்தமின்றிக் குழந்தை சயனித்து விடுகிறது. அது தான் தாலாட்டின் அற்புதம். எமது இலக்கியங்களிலே, தமிழ்க் காவியங்களிலே தாலாட்டுக்குக் கொடுக்கப்பட்ட இடம் மகத்தானது. இத்தகைய தாய்மை இலக்கியத்தைக் கவியரசரை விட யாரொருவர் அழகாக எழுதிவிட முடியும்?

இந்த இதழில் அவருடைய தாலாட்டுச் சிறப்புகள் சிலவற்றைப் பார்ப்போமா?

குழந்தையையும், தெய்வத்தையும் ஒன்றாகக் காணுபவன் கவிஞன். குழந்தை மனத்தில் கள்ளமில்லை, தெய்வத்தின் மனத்திலும் கள்ளமில்லை. குழந்தையைக் கண்டதும் மனது பூக்கிறது. தெய்வ சந்நிதியில் நுழைந்ததும் அதே பூரிப்பில் மனம் லயிக்கிறது. இதை எமது கவியரசர் அழகாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று**
**குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு கவிதையில் பின்வருமாறு குழந்தையைத் தெய்வத்திற்குச் சமமாக்குகிறார்.

கைகள் வீசும் கருணை நெஞ்சில்
மறைவதே இல்லை - துன்பம்
புரிவதே இல்லை - கண்ணில்
தெய்வம் வேறு பிள்ளை வேறாய்த்
தெரிவதே இல்லை - பாசம்
அலைவதே இல்லை

கவியரசருக்குத் தாலாட்டுப் பாடுவது கற்கண்டு சாப்பிடுவது போல. இயேசு காவியத்தின் ஆரம்பத்தையே இயேசுநாதருக்குத் தாலாட்டாக்கியவர் அல்லவா?

மழலை மொழியைப் பற்றி இந்த மண்ணின் கவிமகன் என்ன கூறுகிறானாம்?

ஈரேழு மொழிகளிலே என்ன மொழி
பிள்ளை மொழி
கள்ளமற்ற வெள்ளை மொழி
தேவன் தந்த தெய்வ மொழி

ஆமாம், ஒரு குழந்தை பேச ஆரம்பிக்கும் போது கா, மா, என்னும் சப்தங்கள் அனைத்து மொழிக் குழந்தைகளிடத்தும் இருந்து வருகின்றன. அப்படியாயின் அந்த மொழியின் பெயரென்ன? அது தான் தெய்வ மொழி என்கிறார்.

இதோ எம் கவித்தலைவன் தெய்வத்தையே குழந்தையாக்கித் தாலாட்டுப் பாடி மகிழ்கிறாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள்

ஆயர் பாடி மாளிகையில்
தாய் மடியில் கன்றினைப் போல்
மாயக் கண்ணன் தூங்குகிறான்
தாலேலோ

கண்ணனின் தாசன் தனது இறைவன் கண்ணபிரானுக்கே தாலாட்டுப் பாடும் அந்த அருமையான தமிழ் எமது செவிகளிலே தேனாகிறது.

இசை என்கிறார்கள், பணம், பொருள் என்கிறார்கள், இவையெல்லாம் ஒருவனுக்கு நித்தியாமா? ஒரு குழந்தைக்கு முன்னால் இவை எம்மாத்திரம்? எங்கே, எப்படி வடிக்கிறார் இந்த உணர்ச்சி ஓட்டத்தை?

சிங்காரப் புன்னகை கண்ணாரக் கண்டாலே
சங்கீத வீணையும் ஏதுக்கம்மா
மங்காத கண்களில் மையிட்டுப் பார்த்தாலே
தங்கமும் வைரமும் ஏதுக்கம்மா?

என்ன அழகாக வார்த்தைகளால் பின்னிய ஒரு தமிழ்த் தோரணத்தினால் தாலாட்டை அலங்கரித்திருக்கிறார் எம் கவித் தலைவன்.

ஓர் ஏழைத் தந்தை, தனது மைந்தனை எப்படித் தாலாட்டுகிறான் என்பதைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறார் கவிஞர் பின்வரும் பாடலில்,

செல்வர்கள் இல்லத்தில் சீராட்டும் பிள்ளைக்குப்
பொன்வண்ணக் கிண்ணத்தில் பால் கஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் உப்பிட்டுக் காவேரி நீரிட்டுக்
கலயங்கள் ஆடுது சோறின்றி
இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி
கண்ணுறங்கு - கண்ணுறங்கு
பொன்னுலகம் கண்ணில் காணும் வரை
கண்ணுறங்கு.

தனது இல்லாமையை, தனது செல்ல மகனுக்குத் தாலாட்டாக எடுத்துரைக்கின்றான் அந்தக் காலத்தால் வஞ்சிக்கப்பட்ட ஏழை. ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் உனக்கு இனாமாகக் கிடைக்கும், அதையாவது அனுபவி என்கிறான். என்ன என்கிறீர்களா?

கண்ணை மூடித் தூங்கினால் பொன்னுலகம் கண்ணில் தெரியும். அதையாவது அனுபவி என்கிறான்.

நண்பர்களே கவிஞரின் பல தாலாட்டுப் பாடல்களிலிருந்து சில பகுதிகளைப் பார்த்திருந்தோம். கவிஞரின் பாடல்களிலேயே, தாலாட்டுப் பாடல்களின் பாணியே தனியானது. இது அவரது புகழ் எனும் மகுடத்தில் பதிக்கும் மற்றொரு வைரமாகும்.

## 36

காதலுக்கு இருக்கும் சக்தியை எப்படிக் கவிஞர் கண்ணதாசன் தனது வார்த்தைகளிலே வடிக்கிறார் என்று பார்ப்போம். காதலின் வேகத்தைப் புலப்படுத்தும் ஒரு பாடலை இப்போது எடுத்துப் பார்க்கப் போகின்றோம். இந்தப் பாடலின் கருத்து மட்டுமல்ல,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் உபயோகிக்கப்பட்ட வார்த்தைகளும் எனது மனத்தில் ஆழப்பதிந்தவை.

தங்கை தன் காதலனைப் பிரிந்த சோகத்தை, அந்தக் காதலர்களின் காதலுக்கு ஒரே சாட்சியான தென்றலிடம் சோகத்துடன் எடுத்துக் கூறுகிறாள். அதைச் செவியுற்ற அவள் அண்ணனும் தனது தங்கையின் சோகத்தைப் போக்கும் வழியறியா ஒரு தவிப்புடன் அதே தென்றலிடம் தனது மனதைத் திறக்கின்றான்.

அந்தக் காதலின் ஆழம் அந்தத் தங்கையின் மனத்தில் அவளது அண்ணன் நினைவுகளைக் கூட மறக்கடித்து விடுகிறது. இந்தப் பாடல்களின் வரிகள் என் மனத்தினிலே என்னையே அறியாமல் எத்தனையோ தடவைகள் ஊர்கோலமாய் வருவதுண்டு.

இந்தப் பாடல் 'போலீஸ்காரன் மகள்' என்னும் படத்திற்காகக் கவியரசரினால் வடிக்கப்பட்டு எஸ். ஜானகி, பி.பி. ஸ்ரீநிவாஸ் ஆகியோரின் தேன் குரலினால் முத்துராமன், விஜயகுமாரி ஆகியோரின் அற்புத நடிப்புடன் திரைவிருந்தாகிய பாடல்.

''பெண் (எஸ். ஜானகி)''

இந்த மன்றத்தில் ஓடி வரும்
இளந்தென்றலைக் கேட்கின்றேன்
நீ சென்றிடும் வழியினிலே
என் தெய்வத்தைக் காண்பாயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னந்தனியளாக வழக்கமாகத் தன் காதலனைச் சந்திக்கும் மன்றத்திலே, நின்றிருக்கும் அந்தக் கன்னிகை, தென்றலிடம் தன் காதலனைப் பற்றி விசாரித்துவிட்டு

**வண்ண மலர்களில் அரும்பாவாள்,**
**உன் மனதுக்குக் கரும்பாவாள்**
**என்று ஒரு மொழி கூறாயோ?**

என்று அவனுக்குச் சேதியும் சொல்லி அனுப்புகிறாள்

உதாரணத்தைப் பாருங்கள். கரும்பு பார்க்கக் கடினமாக இருக்கும், ஆனால் சுவைக்கத் தெரிந்தவன் கைகளில் அகப்பட்டாலோ அதன் சுவையை அவன் மட்டுமே அறிவான். அப்படி, கடினமான கற்பைக் காக்கும் குலத்தில் உதித்த பெண், அவளது மனதைக் கவர்ந்த, அவளது தலைவனின் மனத்தினில் மட்டும் கரும்பாக இனித்திடுவாளாம்.

அத்தோடு அவள் சோகத்தையும் தென்றலோடு பகிர்ந்து கொள்கிறாள்.

**நடு இரவினில் விழிக்கின்றாள்**
**உன் உறவினை நினைக்கின்றாள்**
**அவள் விடிந்த பின் துயில்கின்றாள்**
**என்ற வேதனை கூறாயோ?**

அழகாக அந்தப் பெண்ணின் காதல் வேதனையைத் தென்றலுக்குக் கூறும் பாணியில் வடித்துக் காட்டிய கவியரசரின் கவியுள்ளத்தில், தன் தங்கையைக் கண்ணின் மணி போலக் காத்த அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் இதைக் கேட்டதும், அவனது மன நிலை என்ன என்பதை வடித்துக் காட்டும் எண்ணம்

அதையும் பார்ப்போம்!

''ஆண் (பி.பி.எஸ்)''

**இந்த மன்றத்தில் ஓடிவரும்**
**இளந்தென்றலைக் கேட்கின்றேன்**
**என் கண்ணுக்குக் கண்ணாகும்**
**இவள் சொன்னது சரிதானா?**

அதே தென்றல் அண்ணனிடம் வரும் போது, தன் தங்கையின் சோகத்தை அவளிடமிருந்தே அறிந்து கொண்டவன், தென்றலைப் பார்த்துக் கேட்கின்றான், இவள் சொல்வது சரிதானோ? அதை நீ கூட சாட்சி கொண்டாயோ என்று

**தன் கண்ணனைத் தேடுகின்றாள்**
**மனக் காதலைக் கூறுகின்றாள்**
**இந்த அண்ணனை மறந்து விட்டாள்**
**என்று அதனையும் கூறாயோ**
**இந்த மன்றத்தில் ஓடி வரும்**
**இளந்தென்றலைக் கேட்கின்றேன்**
**என் கண்ணுக்குக் கண்ணாகும்**
**இவள் சொன்னது சரிதானா?**

அந்த அண்ணனுக்கு மனம் வருத்தமாக இருக்கிறது. 'ஏய் தென்றலே, நான் உயிருக்குயிராய் வளர்த்த அந்தத் தங்கை உன்னை நம்பும் அளவிற்கு அண்ணனை நம்பவில்லையே. உன்னிடம் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனைத் தேடித் தரும்படி இறைஞ்சுகிறாள். தன்னுடைய காதலை வெளிப்படுத்துகிறாள். ஆனால் இந்த அண்ணனை மறந்து விட்டாளே அவளுடைய காதலை வாழவைக்க நானிருப்பதை மறந்து இத்தனை சோகம் கொள்கிறாளே. இதைக்கூட அவளது காதலனைக் கண்டால் சொல்லிவிடு. என் தங்கையின் காதலின் ஆழம், அவளது அண்ணன் மீதான பாசத்தைக் கூட வென்றுவிட்டது என்று சொல்லிவிடு. அப்போதாவது தலைவன் அவளைத் தேடி வருகின்றானா என்று பார்ப்போம்' என்று தனது சோகத்தையும் அக்கறையையும் பகிர்ந்து கொள்கிறான் அதே தென்றலிடம்.

நண்பர்களே, கவியரசரின் கற்பனைத் திறனுக்கு எல்லை கிடையாது. அவரது தமிழ் நடைக்கு அணை கிடையாது. அது இயற்கை அவர்க்களித்த வரப்பிரசாதம். நிச்சயமாக என்னைப் போல நீங்களும் அவரது கற்பனை வளத்தையும், கவித்திறனையும், தமிழாற்றலையும் ரசித்திருப்பீர்கள் என்பது திண்ணம்.

## 37

உலக வாழ்க்கையில் நான் செல்வத்தை மட்டுமல்ல, அனுபவங்களையும் திரட்டியவன் உலகம் புள்ளிகளால் ஆனது என்றால், அந்த ஒவ்வொரு புள்ளியும் எதனால் ஆனது என்பதை நானறிவேன்

என்று மிகவும் ஆணித்தரமாக, அடித்துச் சொன்னவர் கண்ணதாசன். இத்தகைய ஒரு தன்னம்பிக்கை நிறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை கவிஞர் அடைந்தது எப்படி? வாழ்க்கை அவர் மீது எறிந்த அனைத்துச் சவால்களையும் ஒரு தத்துவ நிலையிலிருந்து நோக்கியமையால் தான். தான் நினைப்பவை நடக்காமல், தான் நம்பியவர்கள் தன்னை ஏமாற்றியபோது, தான் எனும் தன் நிலையிலிருந்து தனக்கும் அப்பாற்பட்ட சக்தியில் நம்பிக்கை வைத்தபோது, அவருக்குத் தன்னம்பிக்கை வீறிட்டுக் கொண்டு வந்தது.

ஆன்மீகம் எனும் நிலையை உற்று நோக்கி அதை மதம் எனும் அடிப்படையில் மற்றவர் மீது திணிக்கும் பாணியைக் கைவிட்டு, சாதாரண மனிதர்களின் வாழ்வில் ஆன்மீகத்தின் பங்கை மதத்தின் அடிப்படையில் விளக்குவதன் மூலம் '**மதம் ஒரு மனிதனின் அணிகலனே தவிர ஆடையில்லை**' என்பதனை அழகாக விளக்கியதில் கவியரசரின் பங்கு முக்கியமானது. சமய நூல்களை ஒரு பாடப் புத்தகம் போன்று, பரீட்சையில் சித்தியடைய மட்டும் படிப்பது என்ற ஒரு கலாச்சாரத்தினுள் இளைய தலைமுறை திளைத்த ஒரு காலத்தில், ஆன்மீகத்தை ரசித்துப் படிக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கியது கவியரசரின் "**அர்த்தமுள்ள இந்துமதம்.**"

கண்ணதாசன் தனது அர்த்தமுள்ள இந்துமதம் என்ற நூல்களின் பதிப்பின் பின்னாலே, அது சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில்களைத் **தினமணிக் கதிரிலே** வெளியிட்டார். அதன் பின் சிறிது காலத்திற்குப் பின்னால் அது இடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப்பட்டது. அந்தக் கேள்வி பதில்களை அழகாகத் தொகுத்து, கவியரசரின் வலது கை போன்று விளங்கிய இராம. கண்ணப்பன் அவர்கள் ஒரு நூல் வடிவில் வெளியிட்டார்.

கவிஞரின் உள்ளத்து நிலையை விளக்க அதில் கேட்கப்பட்ட, என்னைக் கவர்ந்த இரு கேள்விகளையும் அதற்கு அவர் அளித்திருந்த விடைகளையும் குறிப்பிடுகின்றேன்.

**கேள்வி** : வடமொழி, பிறமொழிச் சொற்களைத் தவிர்த்துத் தூயதமிழில் எழுதினால் என்ன?

**பதில்** : காலத்தாலே தவிர்க்கவே முடியாத திசைச் சொற்கள் தமிழில் ஏராளமாகப் புகுந்து விட்டன. இன்றைய எஸ்.எஸ்.எல்.சி. மாணவனுக்குக் கூடப் புரியாத மொழியில் எழுதுவதானால் மொழி ஆர்வம் தான் மிஞ்சுகிறதே தவிர அற்புதமான கருத்துகள் வீணாகி விடுகின்றன. நான் தனித் தமிழின் விரோதியல்ல. ஆனால் என் கருத்துகள் கிராமத்து ஊருணிக்கரை வரை போக வேண்டுமென்பதில் கண்ணாக இருக்கிறேன்.

**கேள்வி** : கோயிலுக்குச் செல்வதனால் ஒருவனைப் பக்திமான் என்றும் கோயிலுக்குச் செல்லாத ஒருவனை நாத்திகன் என்றும் சிலர் முடிவு செய்து விடுகிறார்களே, இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

**பதில்** : முடிவு செய்கிறவன் முட்டாள். இறைவன் உள்ளத்துக்குள்ளே இருக்கிறான். தாயைக் கும்பிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக இரு. நீ கோயிலுக்குப் போக வேண்டியதில்லை.

நண்பர்களே! எளிமையாகக் கவியரசரின் மனநிலையைப் புரிந்து கொள்ள இந்த இரண்டு கேள்விகளுக்கும் அவர் அளித்த பதில்களே போதுமானவை. அவர் ஒரு மொழி வெறியரல்ல. ஒரு மத வெறியருமல்ல. சாதாரண இல்வாழ்க்கையில் ஈடுபட்டு அதன் மூலம் தானடைந்த இடர்ப்பாடுகளின் மூலம் விளைந்த அனுபவம் எனும் அறுவடையை, குடும்பம் எனும் கடலில், வாழ்க்கை எனும் தோணியில் சிக்கி அல்லாடும் மக்களிடையே பகிர்ந்தவர்.

கவியரசரின் பெருமை என்னவென்றால், தீயது என்று அவரால் விவரிக்கப்பட்டவற்றைக் கூட ஒரு நாளில் அதுவே சொர்க்கம் என்று மூழ்கிக் கிடந்தவர் தான் கவியரசர்.

அதனால் தான் அவரிடமிருந்து வந்த மொழியில் ஒரு ஆத்மார்த்தம் இருந்தது. அனுபவத்தின் சாயல் இருந்தது. மதுவையும், மங்கையையும் ரசித்திருந்த காலத்தே தமிழ் அவர் வாயில் புரண்டபோது பிறந்த கவிதையைப் பாருங்கள் :

**ஓர் கையில் மதுவும் ஓர் கையில் மங்கையரும்**
**சேர்ந்திருக்கும் வேளையிலே ஜீவன் பிரிந்தால் தான்**
**நான் வாழ்ந்த வாழ்க்கை நலமாகும் இல்லையெனில்**
**ஏன் வாழ்ந்தாய் என்றே இறைவன் கேட்பான்**

அப்போது கூட முடிவில் தான் ஐக்கியமாகப் போவது ஆண்டவனோடு என்று முடிவு கட்டிவிட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருங்கள். ஆசைகளின் மத்தியில், போகத்தை விளக்கிக் கொண்டே அதை ஆன்மீகத்தில் முடிக்கும் திறன் கொண்டிருந்தவர் தான் கவியரசர்.

அதுமட்டுமா? எல்லோரும்தான் சாகப் போகிறோம்; அதில் இப்படி வாழ்ந்த நான் பெரியவனா, இல்லை இதையெல்லாம் வெறுத்துப் பொய் என்று சொன்ன அந்தத் தத்துவ சன்மார்க்க வாதிகள் பெரியவரா? என்றொரு கேள்வியைக் கேட்டு ஒரு ஆழ்ந்த வாதத்திற்கே தலைப்பிட்டு விடுகிறார்.

**காமுகனும் மாண்டான், கடவுள் நெறி பேசும்**
**மாமுனியும் மாண்டான், மாற்றத்திலே யார் பெரியார்?**

இப்படியெல்லாம் மது, மங்கை என்று வாழ்ந்த ஒருவர் தனது வாழ்வின் மாற்றங்களிலெல்லாம் ஒரு புது அர்த்தத்தைக் கண்டு அதன் மூலம் தனது வெறுக்கத்தக்க பாகத்தைக் கூட வெளிப்படையாக எமக்குக் காட்டி, தமிழ் எனும் பூக்கொண்டு ஆராதித்தவர் தான் கவிஞர்.

இப்படி இன்பக் கடலில் நீந்திக் களித்தவர், களைத்து விட்டார் போங்கள்! சலித்துக் கொள்கிறார். பிறக்கிறது ஞானம். உதிக்கிறது கவிதை,

**காதலெனும் போதையுற்று**
**மாதர்சுக வாதைபட்டுக்**
**காமரசம் கொண்டதடி மஞ்சம் - இன்று**
**ஞானரசம் தேடுதடி நெஞ்சம்!**

**மேனி பட்ட பாடும் - பல**
**ராணி பட்ட பாடும் - என்னை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானி எனச் செய்ததடி இன்று - எமன்
நாளை வந்த போதும் அது நன்று!

ஆடும் வரை ஆடி உடல்
ஆடுகின்ற காலம் வந்து
தேடுதடி தேவன் அவன் வீட்டை - அவன்
தேடவில்லை இன்னும் எந்தன் ஏட்டை!

நண்பர்களே இதில் பலவற்றையும் கலந்து கவிஞரின் அனுபவத்தின் சேர்க்கை வந்த பாதையை ஓரளவிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளேன் என்று நம்புகிறேன். தன்னுடைய வாழ்வின் இருண்ட பக்கங்களையும் எமக்குத் துணிச்சலோடு வெளிச்சம் போட்டுக்காட்டி, தன்னால் மற்றவர் பயனடைய வேண்டும் என்னும் எண்ணம் கொண்ட அந்த இணையற்ற கவிதை நாயகனுக்குத் தலைசாய்த்து விடை பெறுகிறேன்.

## 38

என்னுள்ளத்தின் தமிழ் விளக்குக்கு
எண்ணெய் வார்த்த தமிழ்க்கவியே
என்றும் என் தமிழ்வானில் ஒளிரும்
ஏற்றமிகு தமிழ் முழு நிலவே - தமிழ்
ஏழை என் கவியுலகில் தொடர்ந்து
எண்ண மழையாவாய் கண்ணதாசனே!

அப்படிக் கவியரசர் கண்ணதாசன் என்ன சாதித்து விட்டார், அத்தகைய பெரும் இலக்கியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியம் எதைப் படைத்து விட்டார் என்ற எண்ணம் கொண்ட பலரைச் சந்தித்திருக்கிறேன். கண்ணதாசன் படைத்த படைப்புகளை விட உயர்ந்தது இந்த உலகில் ஒன்றுமில்லை என்பதினாலேயோ அன்றி அவரை விஞ்சிய தமிழ்ப்புலமை, கவித்துவம் கொண்டவர்கள் எவரும் இருந்ததில்லை என்பதனாலேயோ அவர் போற்றப்படவில்லை.

அவரைப்போல சாதாரண ரசிகர்களைச் சென்றடைந்தவர்கள் மிகவும் சொற்பம் என்னும் வரிசையிலேயே அவரின் புகழ் ஒளிருகின்றது. ஒருவன் காவியமானான் என்பதற்கு அவன் அற்புதங்கள் புரிந்திருக்க வேண்டியதில்லை, அற்ப மனிதர்களின் மனத்தைச் சென்றடைந்தால் போதுமானது.

தனது இளமைக் காலங்களிலே பல மேடைகளிலே நாத்திக வாதத்தை முன் வைத்து முழங்கியவர் கவியரசர் கண்ணதாசன். இறை நம்பிக்கையை எள்ளி நகையாடிக் கவிகள் படைத்தவர் கண்ணதாசன். அதனால் தான் அவர் ஆன்மீகத்தை உணர்ந்து கட்டுரைகள் படைக்கும்போது அது மக்களின் உணர்வுகளை மீட்டி விடக்கூடிய வல்லமை கொண்டவையாக இருந்தன.

ஆன்மீக விளக்கங்களைப் பள்ளிப் பாடப் புத்தகங்களிலே படிப்பது மட்டுமே தமது கடமை என்றொரு எண்ணம் கொண்ட இளம் தலைமுறையை ஆன்மீகத்தில் சுவாரஸ்யம் கொள்ளச் செய்தது அர்த்தமுள்ள இந்து மதத்தின் கட்டுரைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்பட்ட விதம் அப்படி! அக்கட்டுரைகளின் வடிவமும் யதார்த்தமும் முக்கியக் காரணிகளாக அமைந்தன என்பது துல்லியமாகத் தெரிகிறது. நண்பர்களே! இதோ, அர்த்தமுள்ள இந்து மதத்தில், நான் ரசித்த சில வரிகளைக் கீழே தருகிறேன்:

கண்ணனை நீ கடவுளாகக் கருத வேண்டாம்.
கடவுள் அவதாரம் எடுப்பார் என்றே நம்ப வேண்டாம்.
பரந்தாமன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்பட்டவன் என்றே எண்ணிப்பார்.
கீதையைத் தேவநீதியாக நீ ஏற்றுக்
கொள்ளவில்லையானால், மனித நீதியாக
உன் கண் முன்னால் தெரியும்.
ரத்த பாசத்தால் உன் உள்ளம் துடிக்கிறதா? சொந்தச்
சகோதரர்களை
எதிர்த்துப் போராட வேண்டி வருகிறதா? அப்போது
உனக்கு என்ன
செய்வதென்று தோன்றவில்லையா?
- கீதையைப் படி.

இதை ஒரு மத அடிப்படையில் பார்க்காமல் மனிதத்துவ அடிப்படையில் பாருங்கள். கீதைக்குப் பதிலாக பைபிளையோ அன்றிக் குரானையோ எடுத்துக் கொள்ளலாம். இந்த வாக்கியங்களின் அடிப்படை **'எதை நம்புகிறோம் என்பதல்ல, நம்பிக்கைதான் வாழ்க்கையின் ஆதாரம்'** என்பதே. பெரிய விஷயம்தான். ஆனால் புரியும்படி சுருங்கச் சொல்லிவிட்டாரே. இதுதான் கண்ணதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்தி ஆன்மீக உணர்வுகளை விளக்கத் தலைப்பட்டார் கவியரசர். அதனால் தான் அவர் அனைத்து ரசிகர்களின் இதயத்தின் அடித்தளத்தைத் தொட்டார்.

என்னையே ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். உற்ற நண்பன், சொந்தச் சகோதரன் போன்ற உறவுடையவன் எனும் ஒருவனால் வஞ்சிக்கப்பட்டேன். வாழ்க்கையில் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டி வந்தது. ஓரிரவு தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கும்போது, கவியரசரின் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா ஒன்றை எடுத்துப் போட்டு விட்டு படுக்கையில் விழுந்தேன். முதலாவது பாடல்:

**உள்ளத்தில் நல்ல உள்ளம்**
**உறங்காதென்பது வல்லவன் வகுத்ததடா**
**கர்ணா வருவதை எதிர் கொள்ளடா!**

ஐந்தாவது பாடல்,

**உள்ளம் என்பது ஆமை - அதில்**
**உண்மை என்பது ஊமை**
**சொல்லில் வருவது பாதி - நெஞ்சில்**
**தூங்கிக் கிடப்பது மீதி**

இந்த முதலாவது பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தவன், ஐந்தாவது பாடல் முடியுமுன்னரே தூங்கிவிட்டேன். அந்த நேரம், இந்த வருந்திய உள்ளத்திற்கு அன்னையின் தாலாட்டுப் போன்று ஒரு இதமளித்தன கவியரசரின் பாடல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் கவியரசரின் தனித்தன்மை, அவரைப் புரிந்து கொள்வதற்குப் புலமை தேவையில்லை, அவருடன் கலப்பதற்கு அளப்பரிய கல்வி தேவையில்லை. ஒரு மனிதனாக இருந்தால் போதும். இதுவே கண்ணதாசன் காவியமாவதற்குக் காரணமாகிறது.

## 39

'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?' என்று கேட்டான் பாரதி. ஆமாம், தனக்கு இருக்கும் சுடர்மிகு அறிவைக் கொண்டு, சமுதாயத்தை மாற்ற முடியாத அளவுக்கு அறிவற்றவர் மத்தியில் என்னைப் படைத்துவிட்டாயே! எனச் சக்தி மாதாவைக் கோபித்துக் கொண்டான் எமது பாரதி.

எமது கவியரசர் கண்ணதாசனோ தன்னால் படிக்க முடியவில்லையே எனும் வேதனையால் மாண்டார். அதை ஒரு கவிதையின் மூலம் எவ்வாறு கூறுகிறார் என்று பார்ப்போம்.

பட்டப்படிப்பு படிக்கத்தான் நினைத்திருந்தேன்
கொட்டும் மொழி மழையிற் குளிக்கத்தான்
நினைத்திருந்தேன்
ஆனால் எட்டாம் வகுப்பை எட்டத்தான்
என் பெற்றோர்
இட்டார்; பின் ஏழ்மையிலே என்னை உலகில் விட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியிலான் வாழ்வு கரைகாணாத் தோணியெனக்
கலங்கினேன்; கற்றோரைக் கண்டு கரையில் நின்றேன்.

அறிவின் மிகுதியால் கவலைப்பட்டார் பாரதி, கல்வியின்மையால் வேதனைப்பட்டார் கவியரசர். தன்னுடைய வாழ்க்கையில் தான் எட்டாம் வகுப்பு மட்டும் படித்திருந்தாலும், பல புத்தகங்களை வாசித்துத் தானாகவே தனது திறமையை வளர்த்துக் கொண்டவர் கவியரசர் கண்ணதாசன்.

காதல் எனும் கடலிலே, தமிழால் தோணிகட்டிக் கரைகண்டவர் எமது கண்ணதாசன். அதனால் தான் எம்மைப் பார்த்துக் கேட்டார், ''காதலில்லாத வாலிபமா?'' என்று. கவியரசர் ஆண்களின் காதல் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட அதே அளவிற்குப் பெண்களின் மன ஏக்கங்களையும் புரிந்து கொண்டு அழகாக வார்த்தைகளில் வடித்துள்ளார்.

கண்திறந்து நானிருந்தேன்
கட்டழகர் குடி புகுந்தார்
கண்திறந்தால் போய்விடுவார்
கண்மூடிக் காத்திருப்பேன்

''கைராசி'' எனும் படத்தில் வரும் பாடலின் ஒரு பகுதியிது. பெண்ணானவள் இப்படித் தன் கண்ணுக்குள் விழுந்த கள்வனைக் காக்கின்றாளாம். அந்தக் கள்வன் என்ன சொல்கிறான்?

தொட்டுத் தொட்டுச் சென்றன கைகள்
சுட்டு சுட்டுக் கொண்டன கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டக் கிட்ட வந்தது கண்டு
எட்டி எட்டிச் சென்றது வண்டு

அவனைக் கண்டவுடன் அவள் தன்னைத் தந்துவிட்டாளா? இல்லை, அவளைக் கண்டவுடன் அவன் தன்னை இழந்து விட்டானா? எதுவாயினும் அவர்கள் காதல் வயப்பட்டது உண்மை. எப்படி எளிமையாகச் சொல்கிறார் கவியரசர்!

சந்தித்த வேளையில்
சிந்திக்கவே இல்லை
தந்து விட்டேன் என்னை.

அப்படியான ஒரு சூழலில் தன்னை இழந்து விட்டவள், தன் உள்ளத்தினுள்ளே தன்னுடைய 'அவனுடன்' ஒரு சம்பாஷணை நடத்துகிறாள். எப்படி? தான் காதல் வயப்பட்டதுக்குக் காரணம் கூறி, அதனை ஒரு அலசு அலசுகிறாள். எங்கே பார்ப்போம்?

நெஞ்சத்திலே நீ நேற்று வந்தாய்
நேற்றுமுதல் ஓர் நினைவு தந்தாய்
நினைவு தராமல் நீ இருந்தால்
கனவுலகில் நான் வாழ்ந்திருப்பேன்!
நூலிலை மீதொரு மேகலையாட
மாலைக்கனிகள் ஆசையில் ஆட
ஏலப்பூங்குழல் இன்னிசை பாட
எண்ணம் யாவும் எங்கோ ஓட
காலையில் உறங்கி மாலையில் எழுந்தால்
கண்கள் இரண்டில் நிம்மதி ஏது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சாந்தி' எனும் படத்தில் இடம் பெற்ற பாடலின் ஒரு பகுதியைப் பார்த்தோம். கவியரசர் காதலெனும் கருவெடுத்து எம் கனவுகளோடு விளையாடுகிறார். இவ்வாறு ஒரு இனிய பெண்ணின் மென்மையான உணர்வுகளோடு எம்மை இணைத்து வழிநடத்திச் செல்வது கவிஞர் கண்ணதாசன் ஒருவரால் மட்டுமே முடியும்.

இதோ மற்றுமொரு இனிமையான காதல் சந்தத்தினால் கவிஞர் எமைக் கட்டுவதைப் பார்ப்போம். இந்தப் பாடல் 'தேன்நிலவு' எனும் படத்தில் இடம்பெற்றது. அதில் ஓர் அழகான பகுதி, பார்வையோடு பார்வை பேச யாராவது தூது விடுவார்களா? காதலில் திளைத்துத் தன்னை மறந்த காதலன் என்ன கூறுகிறான்? இப்படி வருகிறது கவிஞர் கண்ணதாசனின் எண்ணக் கருவறையிலிருந்து,

மேகவண்ணம் போல மின்னும்
ஆடையினாலே - மலை
மேனியெல்லாம் மூடுதம்மா நாணத்தினாலே
பக்கமாக வந்தபின்னும் வெட்கமாகுமா? - இங்கே
பார்வையோடு பார்வை பேசத் தூது வேண்டுமா?

கவிஞர் கண்ணதாசனின் காதல் மழையினில் தோய்ந்தோம். காதல் என்பது ஒரு நுட்பமான உணர்ச்சி. அது பருத்திப் பஞ்செடுத்து அணுவும் பிசகாமல் பின்னி எடுக்கும் புடவை போல! கன்னியும், காளையும் மனத்தால் கலந்து பின்னி எடுக்கும் ஒரு புனித உணர்வு. அந்த உணர்வை அதன் புனிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதளவும் குறையாமல், அதேநேரம் மனத்தின் மயக்கநிலையை, அந்தக் காதல் கணத்தை சற்றும் பிறழாமல் தமிழால் தாரைவார்த்துத் தரும் கண்ணதாசன் காவியமே!

## 40

நண்பர்களே! நான் இந்தப் பகுதியில் செய்ய முயல்வது, 'கவிஞரின் திறமை' எனும் அவரின் 'ஒரு முகத்தை'க் காட்டும் கண்ணாடியாக விளங்குவதேயன்றி வேறொன்றல்ல. நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையில், பலரின் முன்னால் பல முகங்களில் காட்சியளிக்கிறோம். அதே போல கவிஞரும் வாழ்வில் பல முகங்களைக் கொண்டவர். அவரின் அனைத்து அம்சங்களையும் தொட்டுக்காட்டுவதற்குரிய ஆழ்ந்த அறிவாற்றல் கொண்டவனல்ல நான். அதே சமயம் அவரின் குணாதிசயங்களை அலசுவது என் நோக்கமும் அல்ல.

கவிஞரே தனது நிலையற்ற கொள்கைகளை, காலத்துக்குக் காலம் தனது மனதில் மாற்றமுறும் தனது நிலைப்பாடுகளைத் தெள்ளத்தெளிவாக ஏற்றுக் கொண்டவர். அவரது அந்தப் பக்கத்தைப் பார்ப்பதற்கு நான் தகுதியுடையவனல்ல.

அரசியல் எனும் ஆழமறியாச் சமுத்திரத்தில் காலை விட்டு, அதனால் தனக்குக் கிடைத்த அனுபவங்களால் உந்தப்பட்டு பல படைப்புகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்களித்தவர் கவிஞர். கவிஞரெனும் அந்த மகாசமுத்திரத்தில் 'அல்லன', 'நல்லன' இரண்டுமே உள்ளது. அவற்றில் நான் அள்ளுவது 'நல்லன' மட்டுமே.

அதே தொனியில் இன்று நான் பார்க்க விழைவது அவரது அற்புதமான பாடலொன்று. அந்தப் பாடலின் வார்த்தையலங்காரம், அதன் எளிமையான நடை, சோகமெனும் உணர்வை 'வார்த்தை நடை' எனும் ஊஞ்சலிலே ஆட்டி, அழகாக நமக்கு விருந்தாக்குகிறார் கவிஞர்.

எமது தமிழிலக்கியத்திலே கேள்வி - பதில் என்பது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மனத்திலும் ஒவ்வொரு நிகழ்வையும் பற்றிக் கேள்வி எழுவது இயற்கை. பதில்கள், மனத்தின் பல இன்னல்களுக்கு விடையாகவும் அமைவதுண்டு அல்லது நமது இன்னலை மேலும் அதிகரிப்பதாகவும் அமைவதுண்டு.

அத்தகைய ஒரு கலாச்சாரப் பின்னணியில் ஓர் ஆணும், பெண்ணும் கேள்வி பதில் அடிப்படையில் சோகத்தைப் பகிர்ந்து கொள்வதாக உருவகப்படுத்திக் கவிஞர் கண்ணதாசன் அமைத்திருக்கும் பாடல், அவரது திறமையை கொடிகட்டிப் பறக்க விடுகிறது.

அந்தப் பாடலைப் பார்ப்போமா!

**கண்ணிலே நீர் எதற்கு?**
**காலமெல்லாம் அழுவதற்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிலே நினைவெதற்கு?
வஞ்சகரை மறப்பதற்கு

இன்பமெனும் மொழி எதற்கு?
செல்வத்தில் மிதப்பதற்கு

துன்பமெனும் சொல்லெதற்கு?
உள்ளமென்ப துள்ளவர்க்கு

கையிலே வளைவெதற்கு?
காதலியை அணைப்பதற்கு

காலிலே நடையெதற்கு
காதலித்துப் பிரிவதற்கு

பாசமென்ற சொல்லெதற்கு
பார்த்திருந்து துடிப்பதற்கு

ஆசை கொண்ட வாழ்வெதற்கு?
அன்றாடம் சாவதற்கு

பூவிலே தேனெதற்கு?
வண்டு வந்து சுவைப்பதற்கு

வண்டுக்குச் சிறகெதற்கு?
உண்ட பின்பு பறப்பதற்கு

*துயருக்கு ஆறுதல் சொல்வதற்காகச் சில சமயங்களில், 'அந்தத் துயரத்தை நெஞ்சில் கொண்டவர் எதிர்பார்க்கும் சோகமான விளக்கத்தை அளிப்பதுவே சிறந்த மார்க்கம்' என்றொரு கருத்து உண்டு. இங்கே கவிஞர் அந்த உத்தியைத்தான் பயன்படுத்தி இருக்கிறார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை விட்டு விலகிச் சென்ற தன் தலைவனை இழந்து தவிக்கும் பெண்ணுக்கு அவளுக்கு நடந்தவற்றையே அவளது கேள்விகளுக்கு விடையாக்குவதன் மூலம் ஒருவகையான ஆறுதலை, அவள் நெஞ்சில் தடவுவது போன்ற உளவியல் வைத்தியத்தை இங்கே கடைப்பிடிக்கிறார் கவிஞர்.

கேட்கப்படும் கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில்கள், அந்தத் தலைவனின் கொடூரமான செய்கையைச் சுட்டிக் காட்டுபவையாகச் சுள்ளென்று தெறிப்பவையாக அமைந்துள்ளது, கவிஞர் கண்ணதாசனின் கற்பனை வளத்தின் செறிவை எடுத்துக் காட்டுகிறது; இளம் யுவதிகளின் வாழ்க்கையில் காதலால் ஏற்படும் மனவேதனைகளைச் சித்தரிக்கிறது.

இதுவே நான் கண்ட கவிஞர் கண்ணதாசன், இவரே நான் ரசித்த கண்ணதாசன். இத்தகைய இன்பமான நினைவுகளை, அவரது ஆற்றலின் செறிவை உங்களுடன் பகிர்ந்து கொள்வதிலே 'அவர் ஒரு காவியம்' என்பதை நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

## 41

அவளது மனம் முழுவதும் வேதனையின் நிழல். விடும் மூச்சு அவ்வளவும் வெப்பத்தின் கருவறை. என்ன செய்வாள் பேதைப்பெண்? காமன் விட்ட காதல் பாணத்தினால் அடியுண்டு, காதல் நோயால் பீடிக்கப்பட்டு விட்டாளே? உணவை எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு உண்பதற்கு உட்கார்ந்தால், அப்படி ஒரு பசியின்மை! சோற்றுக் கவளம் வாயில் போய் ஒரு சுமையாக உருண்டு கொண்டிருக்கிறதேயன்றி அவளால் உண்ண முடியவில்லை.

தாங்க முடியாது ஓடிச்சென்று படுக்கையில் விழுகிறாள். புரண்டு, புரண்டு படுக்கத் தான் முடிகிறதே ஒழிய அவளால் விழிகளை மூடித் தூங்க முடியவில்லையே! நெஞ்சினில் அவள் காதல் தலைவனின் சிரித்த முகம் ஊஞ்சலாடி, அவளது உள்ளத்தை அறுத்துக் கொண்டிருக்கிறது.

கொஞ்ச நேரம் விழிகளை மூடி நினைவுகளிலிருந்து தப்பலாம் என்று முயற்சித்தால், கனவுகளாய் வந்து அவள் கண்களைத் தழுவிக் கொள்கிறான் அவள் தலைவன். அதுவும் எப்படியான கனவு? கலர் கலரான கனவு, அழகிய பூங்காவிலே அவளை அணைத்துக் காதல் மழையில் தலைவன் தோய்க்கும் கனவு.

தாங்காதம்மா என்றவாறு எழுந்து, தோட்டத்திற்குள் வருகிறாள். தென்றல் அடிக்கிறது, அந்தத் தென்றல் தேரிலேறி அசைந்து வரும் வாசம் அவளை ஒரு பக்கம் இழுக்கிறது. தன்னையறியாமல் அவள் கால்கள் இழுத்த பக்கம் சென்றவள், அந்த மலரைக் கண்டதும் ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

ஏன் என்கிறீர்களா?

அவளுடைய காதல் தலைவனுடன் சேர்ந்திருக்கும் வேளையிலே, அந்த மலர் அவளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூந்தலைத் தழுவி சுகத்தை அள்ளி வீசும் வேளையிலே, தனது மனத்தைப் பறிகொடுத்து அவள் தலைவன் அந்தக் கூந்தலின் அழகை வர்ணிப்பது போல அவளை வர்ணிக்கும் எத்தனை மாலைப் பொழுதுகளைக் கடந்து விட்டாள்.

அப்போதுதான் அவளுக்கு அந்த எண்ணம் உதிக்கிறது. சந்தர்ப்பவசத்தால் தன்னைப் பிரிந்த அந்தத் தலைவன் இந்த மலரின் சுகந்தத்தை இன்னமும் ரசித்துக் கொண்டிருப்பான் தானே! அந்த மலரைப் பார்க்கும் போது தன் ஞாபகம் அவன் நெஞ்சையும் வாட்டும்தானே!

எங்கே, இந்த மலரையே தூது விடுவோமா?

சந்தர்ப்பம் அறிந்ததும், காட்சி துலங்கியதும் கவிஞரின் கற்பனைத் தேரின் தமிழ் வார்த்தைகளெனும் குதிரைகள் தட்டி விடப்படுகின்றன. பிறக்கின்றது ஓர் அருமையான பாடல்.

மலரே மலரே தெரியாதோ?
மனதின் நிலைமை புரியாதோ? - எனை
நீயறிவாய் உனை நான் அறிவேன்
காதலா் உன்னைக் காண வந்தால்
நிலையைச் சொல்வாயோ? - என்
கதையைச் சொல்வாயோ?

எங்கே ஒரு சமயம் தனது காதலன், தன்னை எண்ணி அந்த மலரைப் பார்க்கச் செல்வானோ? தனது எண்ணத்தை அவனது மனத்திலிருந்து நீங்க விடாது இந்த மலர் காப்பாற்றக் கூடுமோ? அந்த இளம் நெஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பி ஏங்குவதை இத்தனை அழகாக எடுத்தியம்ப இத்தகைய காவியக் கவிஞனினால் தான் முடியும்.

மனத்தின் வேதனையை மறக்க, காதல் நினைவுகள் கொடுக்கும் கனமான உணர்வுகளின் வலியை மறக்க என்ன செய்யலாம் என்று எண்ணியவள், தன் தோழியுடன் நாடகக் கொட்டகைக்குச் செல்கிறாள். நாடகத்தைப் பார்க்க முடிந்ததா? கவலையை மறக்க முடிந்ததா? அங்கே கூட அவளின் நினைவுகளை நிறைத்தது தலைவனின் காதல் நினைவுகள் கொடுத்த இதயச் சோகமே!

காட்சிகள் மாறும் நாடகம் போல
காலமும் மாறாதோ? காலமும் மாறாதோ?
காலங்களாலே வாழ்க்கை செல்லும்
பாதையும் மாறாதோ? பாதையும் மாறாதோ? - யார்
மாறிய போதும் பாவையெந்தன்
இதயம் மாறாது - என்
நிலையும் மாறாது.

இப்படித் தன் காதல் நினைவுகளில் இருந்து பல வழிகளில் தப்பிக்க முனைந்தவளுக்குக் கிடைத்தது தோல்விதான். ஆனால் அவள் அதைத் தோல்வியாகக் கருதுவாளா? காதலையே இலக்கணமாக்கிய தமிழர் வழி வந்த பெண்ணல்லவா? அப்படியே தன் தலைவனின் நினைவுகளில் லயித்து விட்டாள். எந்த எண்ணங்களில் இருந்து கொஞ்சம் ஓய்வு பெறத் துடித்தாளோ? அந்த எண்ணங்களுக்கே தன் நெஞ்சைத் தாரை வார்த்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை எப்படி எமது கவியரசர் கண்ணதாசன் தனது வார்த்தையலங்காரங்களினால் ஜோடிக்கிறார் என்று பார்ப்போமே!

கண்களில் தோன்றும் காட்சியில் ஒன்றாய்க்
கலந்தே நின்றாரே, கலந்தே நின்றாரே,
நினைவுகள் தோறும் நெஞ்சில் என்றும்
நிறைந்தே நின்றாரே, நிறைந்தே நின்றாரே - இனி
அவருடன் வாழ்வில் ஒன்று சேரும்
திருநாள் வாராதோ? - என்
மணநாள் வாராதோ?

நண்பர்களே இந்தப் பாடலினுள் நுழைத்து உங்களை எந்த வழியால் அழைத்துச் செல்ல இந்தக் காவியக் கவிஞர் எண்ணினார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவரது அர்த்தமுள்ள திரைகானங்கள் எனும் கானகத்தின் வழி நுழைந்து நான் சென்ற வழி உங்களை அழைத்து வந்துள்ளேன்.

## 42

எத்தனையோ எழுதினார். எதை எதையோ எழுதினார். எண்ணங்களாய் எழுதினார். அத்தனையும் மனத்தில் ஆழப் பதியக்கூடிய பொக்கிஷங்களே! ஆமாம், நான் இங்கே குறிப்பிடுவது கண்ணதாசனின் ஒப்பற்ற படைப்புகளைத்தான்.

சோகங்களாய்ச் சுமந்தவை, கனவுகளாய்க் கலைந்தவை, இன்பங்களாய் நீந்தியவை; அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிப் பிரதிபலிப்புகள் அனைத்தும் அவர் திரைகானங்களில் எதிரொலித்தன.

கவிஞர் கண்ணதாசனின் மனத்தினிலே நீங்காத வேட்கை ஒன்றிருந்தது. அதை அவருடைய கட்டுரைகள் பலவற்றில் ஆங்காங்கே காணலாம். தமிழ் மொழியின் பொக்கிஷங்களில் ஒன்றான, சுருங்கக் கூறி பெரு அறிவு புகட்டும் அந்த அற்புதப் படைப்பான திருக்குறளுக்குத் தான் விளக்கவுரை எழுதவில்லையே என்பதுதான் அது.

ஆனால், அது கனவாகவே இருந்து விடவில்லை. தன்னுடைய சொந்த இதழான கண்ணதாசனில் தொடராக, இன்பத்துப்பாலுக்குத் தான் ஆசைப்பட்டபடியே விளக்கவுரை எழுதியிருந்தார். அதைப் பின்பு அவரது மகன் 'காந்தி கண்ணதாசன்' ஒரு புத்தகமாகக் கூட வெளியிட்டிருந்தார்.

அந்த இன்பத்துப்பாலின் விளக்கங்கள் சிலவற்றைப் பார்க்க விழைகின்றேன். அதில் உள்ள சிறப்பம்சம் அதன் எளிமையான உரைநடையே! இந்த விளக்க உரையின் முன்னுரையில் சிறிய கதை ஒன்றைப் புகுத்தி இருந்தார் நமது கவிக்கோமகன். அந்தச் சம்பவக் கதையை இந்த இதழில் கூறி, சில குறள்களையும் அதற்குக் கவிஞர் கொடுத்த விளக்கத்தையும் அடுத்துப் பார்க்க விழைகின்றேன்.

இதோ அந்தச் சம்பவக் கதை,

இது நடந்தது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தென்றல் இளங்காற்று சில்லென்று வீசிவரும் பச்சை மலைச்சாரல்.

அந்தப் பச்சைமலை முகட்டுக்குப் பாவாடை போர்த்தியது போல் மேகக் கூட்டங்கள்.

மலையடிவாரத்தில் ஓர் அழகான சிற்றூர்.

ஒழுங்காக அமைக்கப்பட்ட சாலைகள்.

ஓடு வேய்ந்த வீடுகள்.

அற்புதமான கற்கட்டுகளோடு அமைந்த அழகான குளங்கள்.

வானோங்கி நிற்கும் தென்னை மரங்கள்.

பறிப்போர் இல்லாமல் பழங்களைப் பூமியில் உதிர்க்கும் மாமரங்கள்.

நகரின் மூலையில் ஒரு சிவன் கோயில். மற்றொரு மூலையில் சமணர் கோயில்.

இன்னுமொரு பகுதியில் பௌத்தப் பள்ளி.

தெள்ளு தமிழை மண்ணிலே எழுதிப் பழகும் சிறார்கள் பள்ளி.

ஏடெழுதித் தமிழ் படிக்கும் குருகுலம்.

சாலைகளில் உப்பு வண்டிகள், அரிசி வண்டிகள்.

ஒரு சிறிய நாளங்காடி, ஓர் அல்லங்காடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சிற்றூரிலே கட்டழகு படைத்த காளை ஒருவன்.

கார் குழலை பூமியிலே அலைமோத விட்ட கன்னி ஒருத்தி.

இல்லத்தை விட்டு வெளிவந்ததில்லை, அந்த இளங்கன்னி.

அவளது இன்முகத்தை ஒருபோதும் பார்த்ததில்லை அந்த இளங்காளை.

ஊருக்கு வெளியே உள்ள சாலையில் ஒரு கிணறு.

அந்தக் கிணற்றின் தண்ணீர், அருந்த அருந்தத் தாகம் எடுக்குத் ஓர் அற்புத நீர்.

அதில் கொஞ்சம் தண்ணீர் எடுத்து வரலாம் என்று மண் குடத்தை இடையில் ஏந்தி, மலர்த்தோட்டம் நடைபோடுவது போல் நடந்து வந்தாள் அந்த நங்கை.

போர்க்களத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான், அந்த வாலிபன்.

அவள் குனிந்த தலை நிமிராமல் நின்ற கோலத்திலேயே நின்றாள்.

அவன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்துப்பாலின் விளக்கத்தைச் சுவையோடு வடிக்க, ஒரு காதல் கதையை இனிமைத் தமிழில் அழகுற நிகழ்த்தி விட்டார். மனத்திரையிலே காட்சியை அசை போட்டுக் கொள்ளுங்கள். அடுத்து, கவிஞரின் குறள் விளக்கத்தைக் காணலாம்.

## 43

நண்பர்களே! முன்னர், தனது இன்பத்துப்பாலின் விளக்கத்திற்கு முகவுரையாகக் கவிஞர் அளித்திருந்த ஒரு சிறிய கதையைக் கொடுத்திருந்தேன்.

எங்கே அதை மீண்டும் உங்கள் மனத்தில் அசை போட்டுக் கொள்ளுங்கள் பார்க்கலாம்!

என்ன, அந்தக் காட்சி நினைவிற்கு வந்து விட்டதா? இரண்டடிக் கவியில் ஒரு பொருள் சொல்லும் வித்தகர் திருவள்ளுவரின் குறளையும், அதற்கு எமது கவியரசர் கண்ணதாசனின் அற்புத விளக்கத்தையும் பார்ப்போமா!

**குறள் 1**

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. (1081)

**விளக்கம்**

தெள்ளு தமிழ் வடிவெடுத்துத்
தண்ணீர்க்குடம் சுமந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளையழகோடு நிற்கும் இவள் யார்?
தேவர் உலகத்து தேவதைக் குலமோ?
தோகை விரித்தாடும் சுந்தர மயிலோ?
அழகிய காதுகளில் குழை ஊசலாட
அன்னமென நிற்கின்ற மானிடப் பெண்ணோ?
மயங்குகிறதே என் நெஞ்சம்.

இரண்டே அடிகளில் வள்ளுவனார் இயம்பியதை, எளிமையான தமிழில் அர்த்தமெனும் அருஞ்சுவையூட்டி அள்ளித் தெளிக்கிறார் எம் கவியரசர்.

**குறள் 2**

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து. (1082)

**விளக்கம்**

ஏறிட்டுப் பார்க்கிறாள் அவள்,
எதிர்த்துப் பார்க்கிறான் அவன்,
அந்தப் பார்வையே ஒரு தாக்குத் தாக்குகிறது
அது மட்டுமா?
ஒரு படையையும் அல்லவா கூட்டி வந்து தாக்குகிறது.

ஒவ்வொரு குறளுக்கான விளக்கத்தையும் அந்தச் சம்பவத்தின் தொடராக இணைப்பதன் மூலம் குறளின் விளக்கத்தை இனிமையாக ரசிக்கச் செய்து, குறளின்பால் ஈடுபாடு கொள்ள வைக்கிறார்.

**குறள் 3**

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு. (1083)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்**

“உயிர் வாங்கும் எமன்” என்று
ஊரார்கள் சொல்லுவார்கள்
அறியேனே முன்பு, புரிகிறதே இன்று!
அந்த எமன் ஒரு ஆண் மகனல்லன்
ஆடும் கொடி போன்ற பெண்மையுடையவள்;
அகல விரிந்த கண்ணையுடையவள்.

படித்த உடனே நெஞ்சிலொரு காதல் உணர்வைத் தோற்றுவிக்கவல்ல தமிழூற்றெடுக்கும் விளக்கமன்றோ!

**குறள் 4**

கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக்கு அமர்த்தன கண். (1084)

**விளக்கம்**

பெண்மையும், மென்மையும்
பின்னி விளையாடும் இந்தப் பேதைக்குக்
கண்டவர் உயிரைக் கவர்ந்திழுக்கும் கண்கள்
ஒன்றுக்கொன்று மாறுபட்டு நிற்கின்றன.

நண்பர்களே! இங்கொரு கண்ணதாசனை வித்தியாசமான கோணத்திலே பார்த்து நிற்கின்றோம். காவியம் தான் கண்ணதாசன். அவரை அந்தக் காவியக் கோணத்திலே காட்டுவது தான் நான் மேற்கொள்ளும் முயற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44

கண்ணதாசன் எனும் கவிஞன்
காதல் கொண்டு திரை கானமும்
காதலினால் விழைந்த ஞானமும்
காமத்துப் பாலெனும் மோனமும்
கலந்தளித்தான் நாம் மகிழவே!

மனத்திலே விழைந்த சிந்தை கவியாகக் கொஞ்சம் விளைந்தது. ஒன்றா, இரண்டா எடுத்துச்சொல்ல, என் சிந்தையில் கவியரசு ஏற்படுத்திய தாக்கங்களை! எனது மனதிலே என்னை நானே கேள்விக் கணைகளால் தாக்கிக் கொள்ள ஒரு வில்லாக வளைந்தது கவியரசரின் கருத்துகளே.

அவர் கூறிய கருத்துகள் வேறு எவராலுமே, எக்காலத்திலுமே கூறப்படாதது என்பதல்ல எனது வாதம். என் போன்ற எளிமை மனம் கொண்டவர்களாலும் புரிந்து கொள்ளப்படக்கூடிய வகையிலே அதைக் கூறியதுதான் அவற்றின் சிறப்புக்குக் காரணம்.

முன்பு நாம் எடுத்துப் பார்த்த இன்பத்துப்பால் குறளின் விளக்கத்தின் வரிசையிலே மேலும் நான்கு குறள்களைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறள் 1**

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரால்
நோக்கமிம் மூன்றும் உடைத்து. (1085)

**விளக்கம்**

இது எமன் தானா? இல்லைக் கண் தானா?
ஒன்றை நினைத்தால் இன்னொன்று தோன்றுகிறதே?
மூன்றையும் ஒன்றாகப் படைத்த
மோகனப் பார்வையல்லவா இது?

**குறள் 2**

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண். (1086)

**விளக்கம்**

ஐயோ! இவள் புருவங்கள்
வளைந்திருப்பதால் தானே இவ்வளவு துயரம்?
அவை நேராக இருந்து
அந்தக் கண்களை மறைக்குமானால்
என்னெஞ்சு இவ்வளவு நடுங்காதே;
துடிக்காதே; துயரங்கொள்ளாதே!

**குறள் 3**

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். (1087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம்**

நேராக நிமிர்ந்து நிற்கும் அழகான கொங்கை
தளிர் போன்ற மங்கையின் சாயாத கொங்கை
அந்தக் கொங்கையை மூடிக்கிடக்கிறது
ஒரு கோலச் சிற்றாடை
மதம் பிடித்த ஆண் யானைக்கு
முகத்திலே போடும் திரைபோல
மத மதவென்றிருக்கும்
அந்த இளம் கொங்கையின் மீது
இவள் கச்சுக் கட்டியிருக்கிறாள்.

**குறள் 4**

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. (1088)

**விளக்கம்**

நான் களங்கள் (போர்க்களம்) பல கண்டவன்
பகைவர்களை வென்றவன்
தோள்வலிமை கொண்டவன்
வாள் வீச்சில் வல்லவன்
எல்லாம் இந்த மெல்லியலாளின்
நெற்றியைக் கண்டு வெற்றியை இழந்து விட்டன
நான் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்.

*தன் நீண்டநாள் கனவினை இதைக் கொண்டு நிறைவேற்றியுள்ளார் கவியரசர். இந்தத் தேனமுதை நான் பருகியதைப் போல நீங்களும் பருகியிருப்பீர்கள் என்பது எனது அதீத நம்பிக்கை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45

கவியரசர் கண்ணதாசனின் படைப்புகளில் மிகவும் அற்புதமான படைப்பு அவரது சுயசரிதமாகும். முதலில் ''வனவாசம்.'' அதைத் தொடர்ந்து ''மனவாசம்'' என்றும் அவர் படைத்த அந்த அற்புதப் படைப்புகளில் பல தருணங்களில் என்னை நான் தொலைத்திருக்கின்றேன்.

அதன் காரணம் என்னவென்று என்னையே நான் வினவிய கணங்கள் பல. அவரது சுயசரிதத்தில் இருக்கும் தன்னைத்தானே விமர்சிக்கும் தன்மை, தான் வாழ்க்கையில் செய்த தவறுகளை, தனது தவறான நடத்தைகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு உண்மைகளின் அடித்தளத்தில் இருந்து தன்னை அலசிய பண்பு, அந்தப் படைப்புகளின் மகத்துவத்தைப் பறைசாற்றுகின்றது.

உண்மையைச் சொல்லப்போனால் நாமனைவருமே எத்தனையோ தவறுகளைத் தெரிந்தோ, தெரியாமலோ இழைத்திருக்கிறோம். அதே போல போகக்கூடாத பாதை, தவறான நடத்தை என்னும் நிகழ்வுகளுக்கூடாகப் பயணித்திருக்கின்றோம்.

கவியரசரின் சுயசரிதத்தினூடாகப் பயணிக்கும் போது எமது வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்கள் நிழல்களாகப் பிரதிபலிக்கின்றன. அதை நாம் அசை போட அந்தத் தருணங்கள் உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மனவாசத்தில் என்னைத் தொட்ட சில பகுதிகளைப் பார்க்கின்றேன். உங்களது விழிகளும் அங்கே பதியும் என்றே எண்ணுகிறேன்.

கவிஞரின் வார்த்தைகளில்

''நிர்ப்பந்தமான உறவுகள். அவற்றில் விளைந்த தவிர்க்க முடியாத பந்தங்கள் - அவற்றில் விளைந்த பெருத்த ஏமாற்றங்கள் - சேர்க்கையால் விளைந்த அரசியல் போக்குகள் - அவற்றால் வந்த காலக்கேடுகள், பண விரயங்கள், எழுத்திலே முரண்பாடுகள் - இத்தனைக்கும் இடையிலே பேனா ஒன்றுதான் நிமிர்ந்து நின்றது.

மனதின் ஆதங்கங்களை எழுதித் தீர்த்துக் கொண்டேன். ஒருநாள் உற்சாகமாக இருக்கும் போது இதல்லவா வாழ்க்கை என்றெழுதுவேன். மறுநாள் புலம்புவேன்.

போற்றியவர்களைத் தூற்றுவேன், தூற்றியவர்களைப் போற்றுவேன். நிலையான புத்தியோ, நிரந்தரமான நியாயமோ இல்லாது போயிற்று.''

மேலே குறிப்பிட்ட கவிஞரின் கூற்று, அவரது சுயசரிதத்தின் ஆழத்தைக் காட்டுகிறது. எத்தனை ஆழமாக தன்னைத் தானே கீறிப்பார்த்துள்ளார் என்று உணரக்கூடியதாக உள்ளது. அந்த ஆழமான கீறல்கள் கொடுத்த ரணத்தின் வடுக்களே அவரது திரைகானங்களாய் பிறந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ மற்றுமொரு கருத்துக் கலசம்,

''நான் யார் யாருக்கு உதவி செய்தேனோ அவர்களை மறந்து விட்டேன்.

யார் யார் என் வாழ்வைச் சீரழித்தார்களோ அவர்களே என் நினைவில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஓய்வாக உட்காரும் போதெல்லாம் அவர்களே என் நினைவிற்கு வருகிறார்கள்.

என்னைப் பிறரும் கெடுத்து, நானும் கெடுத்துக் கொண்ட பின்பு, மிச்சமிருக்கும் கண்ணதாசனையே இப்போது சந்திக்கிறீர்கள்.''

நண்பர்களே, இந்தச் சந்தியில் நம்மில் எத்தனை பேர் இவருடைய இந்தக் கருத்துடன் எம்மையும் இணைத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம்? ஆனால் அத்தனை பேரும் இப்படித் துணிந்து நம்மை விமர்சித்துக் கொள்ள முன்வருவோமா?

இங்கேதான் கவியரசரின் தனித்துவம் கொடிகட்டிப் பறக்கிறது. கண்ணதாசன் ஒரு காவியம் என்பதற்கு இதுவே சாட்சியமாகிறது.

இங்கே இன்னுமொரு முத்தைத் துலக்கிப் பார்த்துவிட்டு ஒய்வெடுப்போம் வாருங்கள்!

''உண்மையில் சில விஷயங்களை நான் மறைத்திருக்கிறேன். மனிதன் மானம், வெட்கத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி மறைத்தே தீர வேண்டிய சில விஷயங்களும் உள்ளன அல்லவா?

உண்மைகள் நிர்வாணமானவை. ஆனால் மனிதன் எப்போது நிர்வாணமாக இருக்கலாமோ அப்போதுதான் நிர்வாணமாக இருக்கலாம். சந்நியாசியின் நிர்வாணத்தில் கூட குறைந்த பட்சம் ஒரு கோவணம் உண்டு. அதுவும் இல்லாதவர்கள் தமிழ்நாட்டில் இல்லை.''

கவியரசர் கண்ணதாசனின் பலமுகங்களில் ஒருமுகம், 'தன்' முகம். அதனை இங்குப் பார்த்தோம். இவை அந்தத் தனிப்பெரும் ஆழியில் சில துளிகளே!

## 46

பலரைப் பல நேரங்களில் பலவிதமான கோணங்களில் பார்த்ததன் பலனே ஒரு கவியின் மனத்தில் எழும் கவிதைச் சுனை. அந்தக் கவிதைச் சுனையில் நீராடி மகிழாத உள்ளங்கள் இல்லையென்றே கூறலாம்.

இங்கே இந்தக் காவியக் கவிஞன் கண்ணதாசனைக் கண்ணோட்டமிட நான் எடுத்துக்கொள்ளும் ஒரு காட்சியும் அதற்குக் கவிஞரின் உள்ளத்து ஊற்றில் ஊறிய தமிழ் வெள்ளமும் இதோ உங்கள் முன்னே.

வாழ்க்கையில் துன்பத்தைத் தவிர எதையுமே கண்டிராத பெண்ணவள் அடி மேல் அடி வைத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மியும் நகரும் என்பார்கள். சோகத்திற்கு மேல் சோகமெனச் சுமந்த இவள் நகரவில்லை. அப்படியே நசிந்து விட்டாள்.

இளவயது நங்கை, அவள் வயதொத்த அனைத்துப் பெண்களின் மனத்தில் ஓடும் இளமை உணர்ச்சிகளுக்கு அவள் மட்டும் விதி விலக்கா என்ன? காதல் என்னும் அந்தக் கரும்பின் சுவையறிய அவள் மனமும் துடிப்பதில் வியப்பென்ன இருக்கிறது?

ஏனோ தெரியவில்லை. காலமகள் என்று காலத்தைக் கூட ஒரு பெண்ணாகத்தான் உருவகப்படுத்தியிருக்கிறோம். ஆனால் அவள் ஏனோ பெண்களின் வாழ்வில் தான் சூறாவளிகளை அள்ளி வீசுகிறாள். பெண்ணின் மனதைப் பெண் அறிவாள் என்பார்கள், ஆனால் இங்கே அதற்கு எதிர்மாறாக இருக்கிறதே! துன்பத்தைத் தானே கட்டுக்கடங்காமல் வாரி வழங்குகிறாள் காலமகள்.

ஓ என்ன? அங்கே யார் வருவது? காட்சிகள் மாறுகின்றனவா?

அழகான வாலிபன். அமைதியாக அந்தப் பெண்ணிடம் என்ன சொல்கிறான்? சொல்லவில்லை, அதையே கீதமாக இசைத்து விடுகிறான். மேட்டுக்குப் பின் பள்ளம், வெயிலில் வாடியவளுக்கு ஒரு நிழல் தரும் ஆலமரம்.

அவன் அவளுக்கு அடைக்கலம் கொடுக்கின்றானா? இல்லை அவளது அதிர்ஷ்டமின்மைக்கப்பால் மிளிரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அந்த உண்மை உள்ளத்து அழகில் தன்னைப் பறிகொடுத்து விட்டானா?*

*என்னவென்று தன் உள்ளத்துக் கிடக்கையை வெளிப்படுத்துகிறான்?*

*''அவள் அப்படித்தான்'' எனும் திரைப் படத்திற்காக ஜெயச்சந்திரன் குரலில் இளையராஜாவின் இசையமைப்பில் கவியரசர் கண்ணதாசன் வடித்திருந்த ஓர் இனிமையான பாடல் தான் அது.*

உறவுகள் தொடர்கதை... உணர்வுகள் சிறுகதை...
ஒருகதை என்றும் முடியலாம்
முடிவிலும் ஒன்று தொடரலாம்
இனியெல்லாம் சுகமே

உன்னெஞ்சிலே பாரம்
உனக்காகவே நானும்
சுமைதாங்கியாய்த் தாங்குவேன்
உன் கண்களின் ஓரம்
எதற்காகவோ ஈரம்
கண்ணீரை நான் மாற்றுவேன்
வேதனை தீரலாம்... வெறும்பனி விலகலாம்...
வெண்மேகமே புது அழகிலே நானும் இணையலாம்

வாழ்வென்பதோ கீதம்
வளர்கின்றதோ நாணம்
நாள் ஒன்றிலும் ஆனந்தம்
நீ கண்டதோ துன்பம்
இனி வாழ்வெல்லாம் இன்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகராகமே ஆரம்பம்
நதியிலே புதுப்புனல்... கடலிலே கலந்தது
நம் சொந்தமோ இன்று இணைந்தது இன்பம் பிறந்தது

*என் மனதைக் கொள்ளை கொண்ட இனிமையான பாடல்களில் ஒன்று. ஒரு பெண்ணிடம் அவளின் புறத்தோற்றங்களைக் கடந்து ஒரு ஆண் பார்க்க வேண்டியது, அவள் உள்ளத்தைப் புரிந்து கொண்டு, வாழ்வின் அனர்த்தங்களைப் போக்க உறுதி பூணுவது என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.*

*இந்தக் காவியக் கவிஞனின் கற்பனைத் திறனுக்கு விளக்கம் கொடுக்கத் தமிழில் வார்த்தைகளுக்கே பஞ்சம் வந்ததோ?*

## 47

நான் காவியத்தாயின் இளையமகன்,
காதல் பெண்களின் பெரும் தலைவன்...

நான் படைப்பதனால் என் பெயர் இறைவன்...

எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை

*நண்பர்களே! இவையெல்லாம் இந்த யுகம் கண்ட உன்னதக் கவிஞனின் உள்ளத்திலிருந்து உதித்தவை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய துரதிர்ஷ்டம் கவிஞர் வாழும் போது அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனால் இன்று கவிஞரோடு நெருங்கிப் பழகியவர்களோடு கொண்ட பரிச்சயத்தினால் கவியரசரின் அபூர்வத் திறமையை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

கவிஞரின் நெருங்கிய நண்பர் வானதி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு ஐயா அவர்களுடன் பேசும்போது, கவிஞரின் உள்ளத்திலிருந்து தமிழ்ப் பூக்களாக உதிர்ந்த பல நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்படி ஒரு காலக் கவிஞனா என்று வியக்குமளவிற்கு காட்சிக்குக் காட்சி, காலத்திற்குக் காலம் அவர் கொடுத்த கவிகள், திரைகானங்கள், கட்டுரைகள், சிறுகதைகள் அவர் ஒரு காவியக் கவிஞன் என்பதற்கு சாட்சிகளாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்**

என்றான் வள்ளுவன். சொல்லும் சொற்களில் மற்றவர்க்குப் பயனுடைய சொற்களையே சொல்ல வேண்டும் என்பதை வள்ளுவன் இத்துணை அழகாகக் கூறினான். இதே வழியில் எமது கவியரசரும் தான் கூறவந்த அனைத்திலும் ஒரு பொருள் பொதித்துக் கூறினார். அதுமட்டுமல்ல, அவர் சொல்லும் பொருளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு சாதாரணமானவரும் புரிந்துகொள்ள வேண்டும் எனும் ஆதங்கத்தில் மிகவும் எளிமையாகக் கூறினார்.

இங்கே கவியரசரின் எளிமையான வார்த்தைகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். பின்வரும் கவியரசரின் வார்த்தைகள், புதுவை தந்த புரட்சிக் கவிஞன் பாரதிதாசனைப் பற்றிய ஆய்வுக் கூட்டத்தில் கவிஞர் பேசியபோது சொன்னவை. கண்ணதாசன் பதிப்பகத்தால் வெளியிட்ட ''கவியரசர் சொல் கேளீர்'' எனும் நாகை தருமனின் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

எங்கே இரக்கம் அதிகம் இருக்கின்றதோ, அங்கேதான் கவிதை பிறக்கின்றது.

எங்கே ஈரம் அதிகமாக இருக்கின்றதோ அங்கே தான் பயிர் விளைகின்றது.

இரக்கம் இருக்கின்ற இடத்தில் கவிதை பிறப்பதைப் போல், அன்பு காட்டப்படும் இடத்திலே கவிஞன் ஓடிப்போய்ச் சேருகின்றான்.

அன்பு காட்டப்படும் இடங்களிலே ...

அன்பு காட்டி அரவணைக்கும் கரங்களைப் பார்க்கும் போது...

அந்தக் கரங்களைக்கூடத் தான் ஏற்கனவே புண்படுத்தியிருக்கிறோமே என்று எண்ணும் போது அவன் மனம் நெகிழ்ந்து போகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு இடத்திலேயும் தன்னைச் சுய விமர்சனம் செய்து கொள்வதன் மூலம் தனது பேச்சுக்கு வலுவேற்படுத்திக் கொள்வது உணரக் கூடியதாக உள்ளது.

மனிதனின் குணாம்சத்தை எளிமையாக, ஆனால் தத்ரூபமாகக் கவிஞரைப் போல விவரிக்கக்கூடியவர் யாருளர்? இதோ ஒரு திரைகானத்தின் ஒரு பகுதியைப் பாருங்கள்.

இங்கே தெய்வம் பாதி<br>
மிருகம் பாதி மனிதனானதடா - அதில்<br>
உள்ளம் பாதி கள்ளம் பாதி<br>
உருவம் ஆனதடா

எவ்வளவு சுவை! இதுதான் மறைந்து இத்தனை காலமாகியும் மங்காது அவர் புகர் ஒளிரக் காரணம். உண்மையைச் சொல்லத் தயங்கமாட்டார். சொல்லும் அந்த உண்மை தனக்கு அவப்பெயர் ஏற்படுத்துமே என்று அஞ்சமாட்டார். மனத்தில் எழுந்த உணர்ச்சிகளைத் தாளில் வடித்தார். அது சாதாரண மனிதனின் வாழ்க்கையோடு ஒன்றிப்போன யதார்த்தங்களாக அமைந்ததால், அவர் அவனின் இதயத்திலே குடியேறினார்.

கண்ணதாசன் எனும் இந்தக் காவியத்தின் பெருமையை எண்ண எண்ண நெஞ்சம் நெகிழ்கிறது, இதயம் பெருமிதத்தால் விம்முகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48

கவியரசரின் குணாதிசயம் தனித்துவம் வாய்ந்தது. காதல், வீரம், விவேகம், சோகம் என அனைத்து உணர்வுகளின் உச்சத்தையும் தொட்டுக் காட்டக்கூடிய திரைகானங்கள், கவிதைகள், கட்டுரைகள் படைக்கும் அறிவுத்திறன் கொண்டிருந்த அதே நேரத்தில் குழந்தையுள்ளம் படைத்தவராயும் இருந்தார்.

தன்னைச் சுற்றியுள்ளவர்கள் தேனொழுகப் பேசியபோது தன்னை மறந்து அவர்களை முற்று முழுதாக நம்பினார். பின்னர் அவர்களே, அவரின் முதுகுப் பின்னால் குழிபறித்து அவரைத் தள்ளிவிட முயன்றபோது, தனது நம்பிக்கையின் சிதறலினால் மனமுடைந்து வெதும்பினார்.

அந்த வெதும்பல்களின் விசும்பல் ஒலிகளில் இருந்து பூத்த பாடல்கள் ஆயிரம். கேட்கிறவர்களுக்கு அது சுகமாக இருந்தாலும் அந்தப் படைப்பின் பின்னாலுள்ள வேதனைகளின் வெளிச்சம் கவிஞருக்கு மட்டுமே விளங்கும். துன்பங்களை எதிர்நோக்கும் போது, அதன் சுழற்சியிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ளுவதே பெரும்பாடாக இருக்கும். ஆனால் அவையனைத்தும் கோர்வையாக தமிழ் எனும் நாரினால் தொடுத்து ரசிகர்களுக்கு விருந்தாக்கும் கலை அரும் பெரும் கலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் அரியணைஅமைத்து
உட்கார்ந்திருக்கும் கவிமகனே
உன்னை நானறிவேன் அதிலூறிய
உணர்வுகளின் கீறல்களையும் அறிவேன்

கண்ணான தாசனே உனது இதயம்
கண்ணாடி போல் நொறுங்கியதும்
காயங்கள் தாம்பட்ட துன்பங்கள் தனைக்
கவியாகக் கூறியதும் மனதிலாடுகின்றன

அன்னமிட்ட கைகளதை அறியாமலோ
அரிந்திட்ட சொந்தங்கள் உனை மட்டுமல்ல
அடியேனைச் சுற்றியும் தான் கண்டேன்
ஆண்டவனறிவான் ஆயிரம் கதைகளய்யா

உன் பெருமை சொல்லும் போது, புரியுது
உன்னெஞ்சம் பட்ட துயரங்கள்
உலகத்தில் அழும் உள்ளங்களை ஆற்றுது
உன் மனமுதித்த அமுதான பாடல்கள்

*(சக்திதாசன்)*

*ஆமாம், கவிஞர் தான் பட்ட துயரங்களுக்கூடாக எமை அழைத்துச் செல்லும்போது, எம் எல்லோருடைய மனங்களையும் ஏதாவது ஓர் இடத்தில் தட்டி எழுப்பி விட்டுத்தான் செல்லுகிறார்.*

*கண்களில் கண்ணீர் ஊறும்போது இந்தக் காவியக் கவிஞனின்*

மயக்கமா? கலக்கமா? மனதிலே குழப்பமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் வரிகள் கன்னத்திலே மிருதுவான விரல்கள் கொண்டு அந்தக் கண்ணீரைத் துடைத்து விடுகின்றன.

வாழ்க்கையில் தோல்விகளைச் சந்தித்து விரக்திக்குத் தள்ளப்பட்டவனின் மனதின் வலிக்கு வாஞ்சையாக

வாழ்ந்து பார்க்க வேண்டும்
அறிவில் மனிதனாக வேண்டும்,
வாசல்தேடி உலகம்
உன்னை வாழ்த்திப் பாட வேண்டும்

என்னும் சவால் வார்த்தைகள் தன்மானத்தைத் தட்டி எழுப்பி விரக்தியில் உள்ளவனுக்கு வீரத்துடனான வேகத்தைக் கொடுக்கின்றன.

சுற்றியுள்ளவர்களின் விவேகமற்ற செயல்களைக் கண்டு மனம் வெதும்புகிறோம். சே! என்ன உலகமடா என்று அலுத்துக் கொள்ளுகிறோம். அந்த நேரம் கொடுக்கும் ஒரு அயர்ச்சியிலிருந்து,

பிறக்கும் போதும் அழுகின்றாய்,
இறக்கும் போதும் அழுகின்றாய்,
ஒருநாளேனும் கவலையில்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே!

எனும் வார்த்தைகள் மீள வைக்கின்றன.

தத்தித் தத்தி ஓடி வரும் குழந்தையைப் பார்க்கிறோம். அந்த அழகிலே எம்மையே மறந்து விடுகிறோம். அந்தக் கள்ளமில்லாச் சிரிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் தெய்வீக உணர்வு இதயத்தில் கற்பூரமாகக் கொழுந்து விட்டெரிகிறது.

குழந்தையும், தெய்வமும் குணத்தால் ஒன்று,
குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று

எனும் தத்ரூபமான வார்த்தைகள் மனத்தை அமைதி ஊஞ்சலில் வைத்துத் தாலாட்டி விடுகின்றன.

காதல் வயப்படும் வஞ்சி, அவள் மனம் அவளை விரகதாபத்தில் போட்டு வஞ்சிக்கிறது. தன்னை ஆட்கொண்டவனை, ஆழச் சிந்தித்தவளின் மனத்திலுள்ள காதல் உணர்ச்சிகளை தோழிக்குக் கூறும்,

அத்தான், அவர் என்னைத்தான்
அதை எப்படிச் சொல்வேனடி

எனும் கனிவான வார்த்தைகளால் காதல் பயிருக்கு நீரூற்றினார் இந்தக் காவியக் கவி.

கவியரசர் கண்ணதாசன் ஓர் இலக்கியச் சுனை. அந்தச் சுனையிலிருந்து வற்றாமல் தமிழ் எனும் இலக்கிய ஊற்று ஊறிக்கொண்டேயிருந்தது. அவரின் மறைவுக்குப் பின்னாலும் அந்த ஊற்று அவர் பெயரால் ஓடிக்கொண்டேயிருக்கிறது.

கவிஞரின் தமிழின் ஆளுமைக்கு எடுத்துக் காட்டாக இன்னும் இரண்டு உதாரணங்களைப் பார்க்க விழைகின்றேன்.

அழகிய தமிழ்க் கட்டுரைத் தொகுப்புகள் இரண்டு ''புஷ்பமாலிகா'', ''ஞானமாலிகா'' என்னும் பெயரில் கவிஞர் வெளியிட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளநீரைப் பார்க்கிறேன்; மேலே பளபளப்பு!
அடுத்துச் சிக்கல் நிறைந்த நார்கள்
அடுத்து உறுதியான ஓடு;
உள்ளே சுவையான தேங்காய்
பளபளப்பைக் கண்டு மயங்காதே உள்ளே சிக்கல்
இருக்கிறது, அதன் உள்ளே
அறிவுப்பசியைத் தீர்க்க விருந்திருக்கிறது

என்று குறிப்பிட்டுள்ளார். என்னே அழகான உவமை, எத்துணை அருமையான விளக்கம், என்ன திறமையான சொற்களின் ஆளுகை. இதை அணுஅணுவாக ரசித்தவன் என்னும் அடிப்படையில் உள்ளத்தின் ஆழத்திலிருந்து உதித்த ஆனந்தத்தின் மையத்தில் இதை எழுதுகின்றேன்.

அடுத்து ஞானமாலிகாவில் ஓர் அழகிய ''கவிஞனின் உரைநடை''யை பார்ப்போம், கவித்துவத்துடன் கலந்த ஒரு வசன நடையைக் கவிஞரின் ஆளுகையில் பார்க்கும்போது அவரின் இலக்கியச் செறிவும், தமிழின் வளமும் உங்களுக்குப் புரியும்.

நெற்றியிலே சிறு குங்குமப் பொட்டு... அது காதல் ராஜாங்கத்தின் சிறிய வாசல்! மௌனம் தெய்வத்தின் பாஷை, அந்தப் பாஷையை தெய்வம் அவளிடமிருந்தே கற்றுகொண்டது. மனிதக் கொடிகளும் புஷ்பிக்கின்றன. ஆம்; அது அவள் புன்சிரிப்பு.

ஆகா! எத்தனை அழகாகக் கவிஞர் வருணிக்கின்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ மற்றுமொரு உதாரணம், அதே ஞானமாலிகாவில் ''ஆத்மா பேசுகிறது'' எனும் கட்டுரையின் ஒரு பகுதியில்,

முத்துக்களாலும், ரத்தினங்களாலும்
அலங்கரிக்கப்பட்ட பளிங்கு மாளிகை.
சலவைக்கல்லால் எழுதப்பட்ட அழகிய தூண்கள்.

பொன் வேய்ந்த கூரை. கண்ணாடி பதிக்கப்பெற்ற சுவர்கள். குளிர்ச்சி நிறைந்த சோபன அறை நடுவே மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சம்...''

இதுதான் கவியரசர் மாபெருங் காவியமாவதற்குக் காரணமாகிறது. இந்த இலக்கியக் கடலில் மூச்சிறைக்கும் வரை நீச்சலடித்து மகிழ்ந்து விட்டு, சற்றே இளைப்பாறுவதற்காகக் கரையேறுகின்றேன்.

## 49

கவியரசர் கண்ணதாசன் மௌனமாக நடத்திய யுத்தங்கள் எத்தனையோ. இலக்கியத்தின் பால் தான் கொண்ட ஈடுபாட்டாலும், தமிழின் மீது கொண்ட அளவு கடந்த காதலினாலும், மனத்தில் தோன்றும் எதையும் ஒளிவு மறைவின்றிக் கூறிவிடும் தனித்தன்மை கொண்டிருந்தாலும் கவிஞரைத் தேடி வந்த யுத்தங்கள் அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் இத்தகைய தமிழார்வமும், பேச்சுத்திறனும், கவிவல்லமையும் பல அரசியல் தலைவர்களின் பார்வையில் மிக முக்கியமான இடத்தைப் பிடிக்கக்கூடிய வல்லமை கொண்டிருந்தன.

கவிஞர் நடத்திய பத்திரிகைகளிலே ''தென்றல்'' அவர் மனத்திலும் சரி, தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலும் சரி, வகித்த இடம் மகத்தானது. இந்தப் பத்திரிகையின் தொடக்கம் பற்றி அவரே *22.04.54*இல் வெளிவந்த முதலாவது ''தென்றல்'' இதழின் தலையங்கத்தில் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.

''நான் புதுப் பத்திரிகை ஆரம்பிக்கின்றேன் என்றதும் 'என்ன பைத்தியக்காரத்தனம் ஏன் இப்போது பத்திரிகை?' என்றார் ஒரு நண்பர். 'பத்திரிகைத் தொழில் லாபகரமானதல்ல, இந்தக் காலத்தில்' என்றார் இன்னுமொரு வட்டிக்கடை நிபுணரான நண்பர். ஆதரித்தோர் சிலர், எதிர்த்தோர் பலர், ஆனால் எல்லாமே நட்பின் காரணத்தால். கடைசியிலே நண்பர் சம்பத்தைக கேட்டேன். 'ஆரம்பிக்கலாம். ஆனால் இடையிலே துவளவும் கூடாது, கடைசியில் கவிழவும் கூடாது' என்றார். எண்ணிப் பார்த்தேன், துவளவும் மாட்டேன், கவிழவும் மாட்டேன் எனும் துணிச்சலோடு இறங்கிவிட்டேன்.''

ஆமாம், கவியரசரின் இந்தச் சத்தமில்லாத யுத்தங்களிலே அவரிடமிருந்த முக்கியமான ஆயுதம் அவரது இந்த அசாத்தியத் துணிச்சல் என்றுதான் கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகா தர்மம் என்பது, உண்மைகள் அப்படியே உண்மைகளாகக் கூறப்பட வேண்டும். ஆனால் சில சமயங்களில் எமக்குத் தெரியும் உண்மைக்குப் பின்னால் வேறு கதைகள் இருக்கக்கூடும். அப்படியான நிலையில் அவை ஆதாரபூர்வமாக மற்றவர்களால் எடுத்துக்காட்டப்படும்போது அதைப் பக்குவமாக ஏற்றுக்கொள்ளும் பண்பு வேண்டும்.

போற்றுவார் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுவார் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்

என்பதையே தனது தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர் கவியரசர் கண்ணதாசன். தனது பத்திரிகையின் தரத்தைக் காக்க வேண்டும் என்று பேரவாக் கொண்டு அதை நடத்தியவர் கவியரசர். அதை ஓரிடத்தில் எவ்வாறு கூறுகிறார் என்று பாருங்கள்:

''பத்திரிகையின் இந்தத் தரத்தை இடைவிடாது கடைபிடிக்குமாறு ஏஜெண்டுத் தோழர்கள் கோருகிறார்கள், கடைப்பிடிப்போம். சாவிலும் தமிழ்கூறிச் சாகவேண்டும். நம் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும். இது நமது வற்றாத ஆசை. தென்றல் தரம் குறையாது.''

கவியரசருடைய ஆழ்ந்த தமிழறிவைப் பற்றி அறிந்து கொள்வதானால் அவருடைய பத்திரிகைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த கேள்வி பதில் பகுதிகளைப் படிக்க வேண்டும். இங்கே நண்பர்கள் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், தென்றல் பத்திரிகை நடத்திய காலத்தில் கவிஞர் தி.மு.க.வின் அங்கத்தினராக இருந்தார். நாத்திகக் கொள்கைகளின் அரவணைப்பில் தன்னை அடக்கிக் கொண்ட காலமது.

ஒரு சில கேள்வி பதில்களை இங்கே பார்ப்போம்:

**கேள்வி** : *வேலை மெனக்கேட்டு வந்தான் என்கிறார்களே! இந்த வேலை மெனக்கேட்டுக்கு என்ன பொருள்?*

**பதில்** : **அது வேலை மெனக்கேட்டு அல்ல 'வேலை மினுக்கிட்டு'. அதாவது வீரன் ஒருவன் வேலுக்குப் 'பாலீஷ்' போடுவது எவ்வளவு உபயோகமற்றதோ அதைப் போன்றதே இவன் வரவும் என்று பொருள்படும். வீரர்கள் எப்போதும் பகைவர்களின் மார்போடு விளையாடுவார்கள். இது பழைய காலப் பாடல்களில் சொல்லப்பட்டு இருக்கிறது.**

**கேள்வி** : *மின்னல் இடை என்கிறார்களே பளிச்சென்று மின்னி விட்டு ஓடி விடுமோ?*

**பதில்** : **ஆமாம், அதோடு கண்ணையும் பறித்துக் கொண்டு காதலில் தள்ளி விடும். காமத்துக்குக் கண் இல்லையென்கிறார்களே, அது ஏன்?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கண்ணை இடையாகிய மின்னல் கெடுத்து விட்டது என்கிறான் கவி என்று கூடக் கொள்ளலாம்.

**கேள்வி** : ''ஒருமைக்கண் தான் கற்ற கல்வி யொருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து'' எனும் குறளுக்குப் புதுமைப் பொருள் தருக.

**பதில்** : **ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வி எழு பிறப்புக்கும் உதவும் தன்மையுடையதாகும் என வரதராசனார் உள்ளிட்ட பல உரையாசிரியர்கள் உரை கூறியுள்ளனர். இது தவறு, ''ஒருமை'' என்பது தனிமையைக் குறிப்பது. ''தனிமையில் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு உயர்வையும், பலத்தையும் கொடுக்கக் கூடிய தன்மை வாய்ந்தது'' எனப் பொருத்தம் கொள்ளலாம். இது குறளினின்றும் பிசகாத பொருள்தான். ''எழுமையும் ஏமாப்பு உடைத்து'' என்பதில் ''உம்'' எனும் அசை கெட்டு வரல் இலக்கணத்தில் உள்ள முறைதான். மேலும் தனிமை, நிறைந்த சிந்தனைக்கு வழி வகுக்கிறது என்பது பழந்தமிழ் மரபு.**

நண்பர்களே! இது கவியரசர் கண்ணதாசனை இன்னொரு கோணத்தில் காட்டுகிறது. தமிழின் பால் அவர் கொண்ட தீராத பற்று, அவரைத் தன் வழியே தமிழ் இலக்கியப் பாதையில் இழுத்துச் சென்றது. தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியின் அழகை அள்ளிப்பருகிய எமது காவிய நாயகன், அதை இனிய தேனாக மாற்றி எம் மனங்குளிர எமக்களித்து மகிழ்கின்றார்.

கண்ணதாசனின் புகழ், அவரின் திறன் சொல்லச் சொல்லப் பெருகும் ஒன்று. அது இவ்வளவுதான் என்று வரையறுத்துச் சொல்லிவிட முடியாது. ஔவை மூதாட்டி கூறியதைப் போல, கற்றது கையளவு, கல்லாதது கடலளவு என்பதற்கிணங்க கவியரசரைப் பற்றி நானறிந்தது கையளவே.

என் கைக்கெட்டியதன் சுவையை நன்கனுபவித்த நான், அதை நண்பர்களாகிய உங்களோடும் பகிர்ந்து கொள்ளும் அவாவே எனது இச் சிறுமுயற்சி.

## 50

இதுவரை எழுதிய கண்ணதாசன் ஆக்கங்களுக்கும், இப்போது எழுதிக்கொண்டிருக்கும் கண்ணதாசன் ஆக்கத்திற்கும் ஒரு மாபெரும் வித்தியாசமிருக்கிறது.

ஆமாம் இந்தத் தொடரில் இதுவே இறுதி அத்தியாயமாகிறது. மாங்கனியைச் சுவைத்துவிட்டு, அந்தச் சுவையைப் பற்றிக் கூறுகிறாயா? என்று ஒருவனைக் கேட்கும்போது, அவனுக்கு அது எத்தனை இனிமையாக இருக்குமோ, அதே போலத்தான் கவியரசரின் படைப்புகளைப் படித்துவிட்டு அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதும் என்பேன்.

ஆனால் நான் திரும்பவும் வருவேன்... கண்ணதாசன் எனும் அந்தக் காவியக் கடலினுள் மீண்டும் முழுகி கைநிறைய முத்துகளுடன் வருகிறேன், அம் முத்துகளின் மேன்மையை ஆய்ந்தறிந்து அறியலாம்.

கவியரசர் ஓர் இலக்கியக் கடல். அவரைப் பற்றிப் பலரும் பலவிதமாக விமர்சிப்பார்கள். ஆனால் அவரது ஆக்கங்கள் மக்கள் மனத்தை ஈர்த்தது போல், அவரது பாடல்கள் சாமான்ய மக்களைக் கவர்ந்தது போல், அவரது எழுத்துகள் இளைஞர் சமுதாயத்தை இலக்கியத்தின்பால் திருப்பியது போல் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் சொற்பம் என்றே கூறுவேன்.

கவியரசர் நவரசங்களில் சில ரசங்களைத் தன் பாடல்களில் எவ்வளவு லாவகமாய்க் கையாளுகிறார் என்பதைக் காண்போம்.

காதல் எனும் அந்த உணர்வினை எத்தனையோ நடிக, நடிகையர் தமது முகபாவத்தின் மூலம் எமது கண்களுக்கு விருந்தாகியுள்ளனர். ஆனால் எமது கவியரசரோ இந்த உணர்ச்சியினை பல பாடல்களில் எமது செவிகளுக்குள்ளால் உட்புகுத்தி உணர்ச்சிக் கடலினுள் அமிழ்த்தியுள்ளார்.

பெண்கள் காதல் வயப்படும் போது அவர்களின் உணர்வுகளை அடக்க மிகவும் எத்தனிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியிருந்தும் தனது மனத்தைக் கொள்ளை கொண்டவனின் நினைவுகள் தலைதூக்கும் போது தன்னையும் அறியாமல் வார்த்தைகளாக வெளிப்படும் ஒரு நிகழ்வாக கவியரசர் **'காதல்'** எனும் அந்த ரசத்தைப் பிழிந்து எமக்குப் பானமாகத் தருகிறார் பாருங்கள்.

கண்ணன் என்னும் மன்னன் பேரைச் சொல்லச் சொல்ல
கள்ளும் முள்ளும் பூவாய் மாறும் மெல்ல மெல்ல
எண்ணம் என்னும் ஆசைப்படகு செல்லச் செல்ல
வெள்ளம் பெருகும் பெண்மை உள்ளம் துள்ளத் துள்ள

தமிழெனும் கனியெடுத்து, சந்தமெனும் தேன் தடவி தவிக்கின்ற வாய்க்கு விருந்தாக்கும் வல்லமை கவியரசரின் தனித்திறமை.

அடுத்தொரு ரசமான **"கோபம்"** எனும் அந்த ரசத்தின் திறத்தைக் கவியரசரின் கவித்திறமையில் பார்ப்போமா? இனி வரும் இந்த உதாரணத்திற்கு மற்றுமொரு சிறப்புமுண்டாம். கவிஞரின் திறமையில் பொறமை கொண்டவர்கள் அவரின் பாடல்களைப் பற்றி தரக்குறைவாக விமர்சனம் செய்த காலத்தில் தன் பதிலைப் பாடலாகப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இந்தப் பாடலை யாத்திருந்தார் என்றொரு கருத்து நிலவுகிறது. பாடலைப் பார்ப்போமா?

நான் போட்டால் தெரியும் போடு
தமிழ்ப்பாட்டால் அடிப்பேன் ஓடு
இந்தக் கவிதையைக் குறை சொல்லுவோரை
இந்தக் கழியால் அடிப்பேன் வாடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ கம்பனைப் படித்தவனோடா இல்லைக்
காகிதம் தின்னும் மூடா மூடா

ஆமெனும் முன்னே ஆயிரம் பாட்டை
அள்ளி அள்ளி வீசட்டுமா
அப்போதும் கூட புரியல்லையென்னா
சொல்லிச் சொல்லி உதைக்கட்டுமா
வல்லினம், மெல்லினம்
நல்ல இடையினம் என்னும் கம்பை எடுத்து
வெண்பா, அரசி எனும் விதம் விதமான
சாட்டை தொடுத்து (நான் போட்டால்)

இறுதியான ரசமாக நவரசங்களில் **'கருணை'** எனும் அந்த அன்பின் நெகிழ்வைக் கவியரசர் எப்படிக் கையாண்டிருக்கிறார் என்று பார்ப்போம் வாருங்கள். ஒரு சகோதரனின் அன்பைக் கருணையின் வடிவாக விளக்கேற்றிக் காட்டுகிறார் கவிஞர்.

தாயின் முகமிங்கு நிழலாடுது
தந்தை மனமிங்கு உறவாடுது
கோயில் விளக்கொன்று கூடப்பிறப்பென்று
பாடும் குரல் கேட்குது

ஆமாம் இந்தப் பாடலில் கருணையைத் தாயின் வடிவாக, தந்தையின் மனமாக, கோயில் விளக்காக உருவகப்படுத்தி அவையனைத்தும் ஒருங்கிணைந்த கருணைத் தெய்வமாக அவதரித்ததே தனது உடன்பிறப்பென்று ஒரு தங்கை தனது அண்ணனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அழகாய் எடுத்துரைப்பதாய்க் கவியரசர் கவிமழை பொழிந்திருக்கிறார்.

நண்பர்களே! இதுதான் இறுதிப் பாகம். இங்கே எனது மனத்தைத் தொட்ட கவிஞரின் ஆக்கம் ஒன்றை அளிக்க விரும்புகிறேன். கவிஞர், எப்போதுமே கற்பனையுலகில் கொடிகட்டிப் பறந்து, கவிதையுலகில் தேரோட்டியவர்.

தான் மறைந்த பின் தனது நண்பர்கள் எப்படிக் கண்ணீர் சிந்துகிறார்கள் எனப் பார்க்க நினைந்து, உயிரோடிருந்து கொண்டே மறைந்து விட்டதாக ஒரு புரளியைக் கிளப்பி ரசித்தவர். தனது இறுதி ஊர்வலத்தில் படிக்கப்பட வேண்டும் என்று தான் உயிரோடிருக்கும் போதே கவிதை யாத்து வைத்திருந்தவர்.

இந்தப் பாடலைத் தனது சவ ஊர்வலத்தின் போது சீர்காழி கோவிந்தராஜன் அவரது கணீரென்ற குரலினால் பாட வேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்ததாம் கண்ணதாசன் ஒரு காவியம் என்பதை இனிவரும் கவிதையே உரக்கக் கூவுகின்றது!

**தேனார் செந்தமிழமுதைத்
திகட்டாமல் செய்தவன்
மெய் தீயில் வேக
போனாற் போகட்டுமெனப்
பொழிந்த திரு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் தீயிற் புகைந்து போக
மானார் தம் முத்தமொடும்
மதுக் கோப்பை
மாந்தியவன் மறைந்து போக
தானே எந் தமிழினிமேல்
தடம் பார்த்துப்
போகுமிடம் தனிமைதானே!
கூற்றுவன் தன் அழைப்பிதழைக்
கொடுத்தவுடன்
படுத்தவனைக் குவித்துப் போட்டு
நீ எரிவதிலும்
அவன் பாட்டை
எழுந்து பாடு

தனக்குத் தானே இரங்கற்பா தான் மறைவதற்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே எழுதி வைத்த அந்தக் கவித்தலைமகன் நிச்சயமாய் உலகெங்கும் வாழும் தமிழர்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறான். அனைத்து உள்ளங்களையும் தமிழால் கட்டிப்போட்டு வைத்துள்ளான்.

இங்கே மீண்டும் கவியரசரின் வார்த்தைகளில்,

வாழ்க்கையில் என் சிறகுகள் கவிந்து கொண்டு இருக்கும். எந்த நேரமும் இவை விரியும்.

சலனம் இல்லாமல், சபலம் இல்லாமல் அவை பறந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவின் எல்லை நோக்கி அவை பயணம் போகும் போது, நான் இன்னொரு முறை பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுவேன்.

நான் மீண்டும் பிறப்பேன்.

பிறந்து முதலில் இருந்தே துவங்குவேன்

மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே வாழ்வேன்.

ஆமாம், இந்தக் காவியம் மறையவில்லை, தூங்கிக் கொண்டுதானிருக்கிறது. ஒவ்வொரு முறையும் தமிழ்க்கவி கருக்கொள்ளும் போதும் அந்த மனங்களில் மறுபடியும் பிறந்து தவழ்கின்றது. அது தமிழாய் வளர்கின்றது, கவியாய்ப் பறக்கின்றது.

கண்ணதாசன் ஒரு பெருங்காவியம் என்று பெருமையுடன் உரத்த குரலில் உலகின் நடுவில் நின்று உரிமையுடன் சொல்லுவேன்.

(இத்துடன் நிறைவடைகிறது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERADENIYA
25 SEP 2010
630627
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF ... DENIYA
25 SEP 2010
LIBRA...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்நூலாசிரியரைப் பற்றி...

இலங்கையில் யாழ்ப்பாணம் நல்லூரை தாயகமாகவும், இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்டவர் சத்தி சக்திதாசன்.

ஏறத்தாழ 30 வருடங்கள் இலண்டனில் வாழ்ந்துவரும் இவரின் எழுத்துலகப் பிரவேசம் வாழ்க்கையின் நடுப்பகுதியிலேயே ஆரம்பமானது.

சிறுவயது முதல் கவிதைகள் எழுதுவதில் ஆர்வமுடைய இவரின் படைப்புக்கள் தாள்களில் வடிக்கப்படுவதோடு முடிந்திருந்தது. தற்போது பல தமிழ் இணையத்தளங்களில் கதை, கவிதை, கட்டுரை ஆகியன படைத்து வரும் திரு. சத்தி சக்திதாசன் 'தமிழ்ப் பூங்கா' எனும் தமிழ் இதழைக் கணினியின் உதவியோடு ஆக்கி இரு மாதங் களுக்கொருமுறை இலவசமாக வெளியிட்டு வருகிறார். இது இவரின் முதல் தொகுப்பு நூலாகும்.

48 வயதுடைய இவர் இங்கிலாந்திலே British Telecom Communication ல் என்ஜினியராகப் பணிபுரிகிறார்.

630627

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org